# ஓர் உறவு தந்தாய்

## ரமணிசந்திரன்



# ஓர் உறவு தந்தாய்

ரமணிசந்திரன்

# அத்தியாயம் - 1

மாலை வெய்யில் மறைந்து, வெக்கை குறைந்து, கடற்காற்று சிலுசிலுவென்று வீச, எல்லா விதமான இறுக்கங்களும் அடியோடு வடிந்து, உடம்பெங்கும் ஓர் இதமான உணர்வு பரவுவதை உணர்ந்து ரசித்தபடி, சுமனா அசையாமல் அமர்ந்திருந்தாள்.

இனி விரைவில் இருட்டிவிடும். சீக்கிரமே கிளம்ப வேண்டியதுதான். செலவற்ற ஞாயிறு மாலைப் பொழுதுபோக்கு முடிகிற நேரம் நெருங்கிவிட்டது.

அரைக் கண் மூடி, அந்த நேரத்து இனிமையை அவசரமாக உள் வாங்கிப் பதிய வைத்துக் கொண்டிருந்தாள். அந்த மோன நிலை, “அக்கா, ரொம்பப் பசிக்குதுக்கா. துண்றதுக்கு ஏதாச்சும் . . . வாங்கித் தாயேன்.” என்று கெஞ்சிக் கேட்ட குரலில் லோகக் கலைந்து, என்னவென்று பார்க்க வைத்தது.

மிஞ்சி மிஞ்சி, நாலு வயது இராது. அதற்குள் பிச்சையெடுக்கிறானே! ஆனால், கைப்பை தவிர அவளிடம் எதுவும் இல்லை என்று கண்டதும், எதையாவது வாங்கித் தரச் சொல்லும் புத்திசாலித்தனம், அவளுக்குப் பிடித்தது.

ஆனாலும், அந்த வயதிலேயே சிறுவன் யாசகம் பழகுவது பிடிக்காமல், “உன் அப்பா, அம்மா எங்கேடா?” என்று விசாரித்தாள்.

“அப்பா குடிச்சிட்டு வயிறு வெந்து செத்துப் போச்சிக்கா.” என்ற பதிலில், உள்ளூர அடிபட்டாள். தொடர்ந்து, “அம்மா, அதோ அந்தக் கடையிலே பாத்திரம் கழுவுது. ராத்திரி பத்து மணிக்குக் கூலி. அதுக்கு மின்னாடி எதுனாச்சும் கேட்டாக்க, அடிக்கும். ஆனா, எனக்கு ரொம்பப் பசிக்குதக்கா.” என்றபோது, சுமனாவால் தாங்க முடியாது போயிற்று.

“வா.” என்று சிறுவனை அழைத்துச் சென்றாள். பக்கத்திலேயே, வாழைக்காயும், வெங்காயமும் கடலைமாவில் தோய்த்து பஜ்ஜி போட்டுவிற்றுக் கொண்டிருந்தார்கள்.

பையனின் கண்கன் ஆசையுடன் அதில் பதியவும், இரண்டு செட்டும் ஒரு தண்ணீர் பாக்கெட்டும் வாங்கினாள்.

“இங்கே வா.” என்று அழைத்துப் போய், “பார்க்கிங்” இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு ஸ்கூட்டரின் பின்னிருக்கை மீது, பஜ்ஜி கீழே விழுந்துவிடாமல் பிரித்து வைத்தாள்.

“ம். சாப்பிடு.”

பையனின் கண்கள் வட்டமாய் விரிந்தன. “அல்லாமே எனக்காக்கா?” என்று ஆவலாகக் கேட்டான்.

“ஆமாம்., உனக்கேதான். சிந்தாமல் சாப்பிடு.” என்று, அவன் உண்பதைச் சிறிது நேரம் நின்று பார்த்தாள்.

சிறுவன் வழக்கமான யாசகமாகப் பொய் சொல்லவில்லை., எங்கேயும் கொண்டு சேர்ப்பதாகவும் இல்லை. அவ்வளவு வேகமாக, பஜ்ஜிகள் காலியாகிக் கொண்டிருந்தன. ஒரு செட்டில் இருந்த நாலும் முடியும்வரை, அவன் நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

தண்ணீர்ப் பாக்கெட்டை , பஜ்ஜி அருகிலேயே வைத்துவிட்டு, சுமனா தன் வழியே செல்லலானாள்.

கார்ப்பாதையின் வழியாகவே சென்று, திரும்பி, கடற்கரைச் சாலைக்கு ஏறியவாறே,  மெல்லத் திரும்பிப் பார்த்தவள், திடுக்கிட்டு நின்றாள். ஏனெனில்,

அந்தச் சிறுவனைச் சுற்றிலும், சிலபேர் நின்றார்கள்.

என்ன பிரச்சினையோ என்று வேகமாகத் திரும்பிப் போனாள் சுமனசா.

அவள் அருகில் நெருங்கும்போதே, சுற்றிலும் நின்ற சிலர் காணாமல் போக, ஒரே ஒரு நெடியவன் மட்டும் அங்கே நின்றுகொண்டிருந்தான்.

அந்த ஸ்கூட்டர் மேல் உண்டியை வைத்ததுதான் பிரச்சினையாகியிருக்கும் என்ற ஊகத்துடன், “இது உங்கள் ஸ்கூட்டரா? சின்னப் பையன், கையில் வைத்துச் சாப்பிட்டால், சிந்திக் கீழே போட்டுவிடுவானோ என்று நான்தான், சீட் மேல் வைத்து சாப்பிடக் கொடுத்தேன். சாரி.” என்று சுமனா விளக்கம் கொடுக்கும்போதே, சிறுவன் சாப்பிட்டு முடித்துவிட்டான்.

மறுப்பாகத் தலையசைத்து, “இல்லை , இது என் ஸ்கூட்டர் இல்லை . . . “ என்று நெடியவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, தண்ணீர் பாக்கெட்டை எடுத்துக்கொண்டு, கண்களில் நன்றி மின்ன, “டாங்க்ஸ் அக்கா, டாங்க்ஸ் சார்!” என்றவாறு கிளம்பிய சிறுவன், கையோடு பஜ்ஜி கட்டித் தந்த காகிதத்தையும் மடக்கி எடுத்துச் சென்று குப்பைக் கூடையுள் போட்டுவிட்டு, ஓடுவதை வியப்புடன் பார்த்தாள் அவள்.

“என்ன , ஆச்சரியமாக இருக்கிறதா? குப்பையை இங்கே போடக் கூடாது , கூடைக்குள்தான் போடவேண்டும் என்று சொன்னேன். “

என்றான் ஸ்கூட்டர் அருகே நின்றவன்.

“ஆனால் . . அவன், உங்களுக்கும் நன்றி சொன்னானே . . .” என்று, சற்றுக் குழம்பிப்போய்க் கேட்டாள் சுமனா.

இப்படிப் பண்ணு, அப்படிச் செய் என்று விரட்டுகிறவர்களுக்கு யாரேனும் நன்றி சொல்வார்களா? அதுவும் கண்கள் மின்ன!

பசி என்றதும், அதை ஆற்றிய அவளுக்குச் சமமாக வைத்துச் சிறுவன் அவனுக்கும் சொன்னானே என்ற உறுத்தலும், வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும், அவளுக்கு உள்ளூர இருந்தது.

லேசாகத் தோளைக் குலுக்கி, அவன் சொன்னான். “யாருக்கும் உதவி செய்ய, உங்களுக்கு மட்டும்தான் அனுமதியா? அவனை விடப் பெரிய பையன்கள், அவனது பஜ்ஜியைப் பிடுங்க வந்தார்கள். பையன் ஆசையாக உண்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேனா, வந்து அவர்களை விரட்டினேன்.” என்றான்.

அதற்கும் முன்பிருந்தே, சிறுவனுக்கு அவள் பஜ்ஜி வாங்கப் போனதிலிருந்தே, நடந்ததைக் காருக்குள் இருந்து கவனித்ததைச் சொல்லாமல் விடுத்தான்.

உறுத்தல் மறைந்து, லேசான மனதுடன், “ஓ! பத்துப் பயில்வான்களைப் புரட்டி அடித்து மண்ணைக் கவ்வ வைத்த, வீர தீரப் பராக்கிரமமா? வெறுமனே விரட்டியதாக . . ஆனாலும், உங்களுக்கு இவ்வளவு தன்னடக்கம் ஆகாது, சார்!” என்றுவிட்டுச் சட்டென நாக்கைக் கடித்துக்கொண்டாள் சுமனா.

முன் பின் அறியாத யாரோ ஒருவனுடன் என்ன கிண்டல் பேச்சு?

ஆனால், அவன் இயல்பாகச் சிரித்தான். “அது சரி! வள்ளுவரை எல்லாம் படித்து என்ன பயன்? அவ்வப்போது ஒருவர் நினைவூட்டும்படி ஆகி விடுகிறது! இனி, வாயைத் திறப்பது இல்லை. சரிதானா?” என்றான் இலகுவாகவே.

இருவர் முகங்களிலும் புன்னகை அரும்பியது.

அந்தப் புன்னகையுடனேயே இருவரும் அவரவர் வழியைப் பார்த்துச் சென்றனர்.

அடுத்த ஞாயிறன்று, கடற்கரைக்குச் செல்ல, சுமனாவுக்குத் தயக்கமாக இருந்தது. அந்த இளைஞனும் வந்து, அவள் அவனுக்காகவே வந்ததாகவும் எண்ணிக் கொண்டால்?

வெளேரென்ற பல் வரிசையுடன், அவனது சிரிப்பு, அவள் மனதில்

தெளிவாகவே இருந்தது. இன்னொரு தரம் பார்த்தால்கூட, நன்றாகத்தான் இருக்கும்.

ஆனால், தன்னைத் தவறாக யாரும் எண்ணிவிடக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்ததால், சுமனா அந்த வாரம் கடற்கரைக்குச் செல்லவில்லை. பதிலாக, அந்தப் பகுதியில் இருந்த ஒரு பூங்காவில் போய் அமர்ந்திருந்தாள்.

ஆனால், கடல் அலைகளின் “சோ” என்று அடிக்கும் ஓசையும், உடலெங்கும் மோதி விலகும் கடல் காற்றும், பரந்த மணல் வெளியும், கண் எட்டும் வரையும் தெரியும் நீலக் கடலும் இல்லாதது, அவளுக்குக் குறையாகவே இருந்தது.

யாரோ, என்னவோ எண்ணுவார்களோ என்று, தன் சுகத்தைக் கைவிட்டது, எந்த அளவுக்குப் புத்திசாலித்தனம்? அதுவும், யாராலும் மறுக்க, தடுக்க முடியாத சுகம்.

உள்ளத்தில் குறையுடனேயே, தங்கியிருக்கும் விடுதிக்குத் திரும்பிப் போனாள், அவள். அடுத்த வாரம், கட்டாயம் கடற்கரைக்குப் போய், வேறு இடத்திலாவது உட்கார்ந்திருந்துவிட்டு வர வேண்டும் என்று மனதில் உறுதி செய்துகொண்டாள்.

வேறு இடத்தில் அமர்ந்தால், தன்னைப் பார்க்க வந்ததாக, அந்தப் புன்னகை மன்னன் எண்ணிக்கொள்ள வழியில்லை அல்லவா?

வழி கண்டுபிடித்துவிட்ட திருப்தியோடு வாரத்தை தொடங்கினாள் சுமனா.

புதனன்று, ஒரு தொழில்துறைக் கூட்டம் இருந்தது.

அங்கே வேலை செய்தவர்களில், குறுக்கெழுத்து படித்திருந்த ஒரு சிலருள் சுமனாவும் ஒருத்தி என்பதால், இலகுவாகக் குறிப்பெடுப்பதற்காக, இது போன்ற தருணங்களில் பெரிய அதிகாரிகள் குறிப்பெடுக்க அவளை அழைத்துச் செல்வது, அவள் வேலை செய்த நிறுவனத்தில் வழக்கமாகிக்கொண்டு வந்தது.

அங்கே செய்ய வேண்டிய வேலையைப் பற்றி, அவளுக்குப் பிரச்சினை கிடையாது. மேலதிகாரி குறிப்புக் காட்டும்போது, பேசப் படுவதை, அப்படியே குறுக்கெழுத்தில் குறித்துக் கொள்ள வேண்டும்.

நல்ல உணவு இருக்கும். விடுதிக்கு வந்து சேரவும், வசதி செய்திருப்பார்கள்.

ஆனால், கூட்டத்தின்போது, சில சமயங்களில் “தண்ணி

பார்ட்டி”யும் இருக்கும். அப்போது மட்டும், சுமனா சங்கடப்படுவாள். கூடவே புகையும்.

ஒரு சமயம், நிறுவனத்து சார்பாக, முதல் முறையாக வந்த ஜூனியர் எம்டிக்கு மிகவும் போதை ஏறிவிட, அவளிடமே ஒரு மாதிரி நடக்கத் தொடங்கிவிட்டார். ஆனால், கூடவே வந்திருந்த பொது நிர்வாகியால், பிரச்சினை பெரிதாகாமல் அடங்கிப் போயிற்று.

பொது நிர்வாகி கூட வந்ததே, ஜூனியர் எம்டியைக் கட்டுக்குள் வைக்கத்தான் என்று, சுமனா பிறகு தெரிந்துகொண்டாள்.

பிரச்சினை நேர விட மாட்டார்கள் என்று தெரிந்து கொண்டபோதும், இந்த தொழில் முறைக் கூட்டங்கள் என்றால், அவளுக்கு அவ்வளவாகப் பிடிப்பது இல்லை.

தான் உண்டு., தன் வேலை உண்டு என்று, அதிகாரி கை காட்டிய மேடைப் பேச்சு ஒன்று விடாமல், மாலை வரை சுமனா குறிப்பெடுத்து முடித்தாள்.

அப்புறம், பஃப்பே முறையில் உண்டி. வட்ட வட்டமாக, அழகான வெங்காய பஜ்ஜிகள், சமோசாக்கள், பஃப்கள், பர்கர்கள், பீட்சா துண்டுகள் . .இனிப்புகள்! ஒரு புறம் அசைவத் தயாரிப்புகள். கலந்த சாதங்கள் போன்றவை, இன்னொரு புறம்.

“என்ன, அள்ளிக் கொடுப்பதற்கு, இங்கே ராஜாதிராஜா இல்லையே என்று வருத்தமாக இருக்கிறதா?”

காதோரம் கேட்ட குரலில் உள்ளூர ஒரு துள்ளலோடு சுமனா திரும்பிப் பார்த்தாள்.

அவனேதான். கடற்கரையைத் தவிர்க்கக் காரணமானவன். தவிர்த்திருக்க வேண்டாமோ என்று தோன்ற, புன்னகையோடு “ஹாய்!” சொன்னாள்.

பதிலுக்கு முறுவலித்துவிட்டு, “உலகம் சின்னதுதான். கடற்கரைக்கு வராவிட்டாலும், ஹோட்டல் ஹாலில் கண்டுகொள்ள முடிகிறது!” என்றான் அவன் உற்சாகக் குரலில்.

அப்படியானால் . . . படபடக்கத் தொடங்கிய மனதை அடக்கி, வேறு புறம் திருப்பி, “அது யார் ராஜாதிராஜா?” என்று வினவினாள் அவள்.

“பஜ்ஜியெல்லாம் வாங்கிக் கொடுக்கிற வள்ளலுக்கு, வாங்கிக் கொண்டவன் பெயர் தெரியாதாக்கும். அல்லது, வள்ளுவரைப்

பின்பற்றி, யாருக்கு, என்ன கொடுத்தோம் என்று நினைக்கக் கூடாது என்று மறந்தாயிற்றா?”

“இரண்டும் இல்லை !” என்று மறுத்தாள் சுமனா. “பசி என்றதும் பரிதாபமாக இருந்தது. நின்று பேச நேரம் இல்லாமல், எனக்கு விடுதிக்குத் திரும்புகிற அவசரம். அவ்வளவுதான். ஆனால், ராஜாதிராஜாவா? பெத்த பெயர்தான்! பிள்ளை அப்படி ஆக வேண்டும் என்ற ஆசையில் வைத்திருப்பார்கள்., பாவம்!” என்று பரிதாபப்பட்டாள் .

“எதற்குப் பரிதாபம்? அம்பானி போல, காலப்போக்கில் அவனும் பெரிய ஆளாக ஆகலாமே. எதற்கும், முயற்சிதான் வேண்டும்.”

அவ்வளவுதானா? அவ்வளவேதானா?

“ஆனால், பையனுக்கு முயற்சி இருக்கிறது. அந்த அக்காவைக் காணோமே என்று என்னிடம் வந்து விசாரித்தான். எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்துவிட்டுத்தானே, என்னிடம் கேட்டிருக்க வேண்டும்? என் கண்ணிலும் படவில்லையப்பா என்று, சொல்லி அனுப்பினேன். “

கண்ணில் படவில்லை என்றால், தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லையா? அல்லது, சும்மா, பார்வை வட்டத்துள் விழவில்லையா? இந்தக் கேள்வியை, யாரிடம் கேட்க முடியும்? விடை தெரியாவிட்டால், அவளது மண்டை வெடித்து விடாதா?

“என்ன யோசனை? ஒருவேளை, எங்கள் இருவர் கண்களுக்கும் தெரியாமல், கண்கட்டு வித்தை ஏதும் செய்துகொண்டிருந்தீர்களா?”

எண்ணத்தை மறைத்து, “ஐயோ, அதெல்லாமில்லை. வட்ட வட்டமாக, பஜ்ஜியை என்ன அழகாகச் செய்திருக்கிறார்கள் என்று, ஆ . ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன்!” என்று சமாளித்தாள் சுமனா.

“சும்மாவா? இதற்காகத்தானே, பல்லாயிரக் கணக்கில் சம்பளம் வாங்குகிறார்கள்!”

“அவ்வளவா?!” என்று கேட்ட வளின் அகன்ற கண்களில் ஏக்கம் படர்ந்தது. “ஆனால், அதற்குக் கேட்டரிங் படித்திருக்க வேண்டும்தானே? ஆனால், கேட்டரிங் படிக்கக் காசு வேண்டுமே. ஆகிரமத்தில், செலவு மிகவும் குறைவான படிப்புக்குத்தான், உதவி வாய்ப்பு உண்டு.”

வாய் வார்த்தைகள் முடியும்போதே, சுமனாவின் முகம் லேசாகக் கன்றிச் சிவந்தது.

என்ன, ஓர் அன்னியனிடம் போய் . . . அவன் பெயர் கூடத் தெரியாது, சொந்தக் குறைகளைக் கொட்டிக்கொண்டு இருக்கிறோமே என்று, அவளது மனம் கூசியது.

உதவுவதற்கு உற்றார், உறவினர் என்று யாருமற்ற அவளுக்கு, இப்படித் தன் காலில் நிற்கும் வாய்ப்புக் கிடைத்ததே பெரிது! இதற்கு மேலாக என்ன? அதிகத்துக்கு ஆசைப்படக் கூடாது என்று, ஆசிரமத்தில் கற்றுக்கொடுக்கவில்லை?

அவனது இரக்கத்தைத் தூண்டுவதற்காகச் சொன்னதாக எண்ணுவானோ என்று தோன்ற, மேலும் குன்றலாக இருந்தது.

பேச்சை மாற்றும் முயற்சியாக, “ஆனால், அதுவுமே பெரிதுதான்.” என்று முடித்து, “ஆனால் . . . நீங்கள் இங்கே எப்படி . . .” என்று வேறு தொடங்கினாள்.

“சொல்கிறேன். முதலில், தட்டில் எதையேனும் எடுத்துக்கொண்டு விடுவோமா? உட்கார்ந்து, உண்டபடியே பேசலாம். எனக்குப் பசிக்கத் தொடங்கி விட்டது.”

பேசலாமாவா? இவனோடு பேச என்ன இருக்கிறது? ஆண்களோடு பழக்கம் வேண்டாம் என்று, ஆசிரமத்து மேலாளர் சொல்லியிருக்கிறாரே!

ஆனால், மறுக்கும் வழி தெரியாததோடு, மறுக்க மனமும் இல்லாமல், அவன் நன்றாக இருக்கும் என்று சொன்ன சில உண்டி வகைகளைத் தட்டில் நிரப்பிக்கொண்டு, எச்சரிக்கையுடனேயே அவனோடு சென்றாள்.

இவன், அப்படிப் பட்டவனாக இருக்க வேண்டாம் கடவுளே என்ற ஒரு வேண்டுதலோடு.

அவளுக்குக் கொடுத்திருந்த எச்சரிக்கைகளின்படியாக, அவன், அவளை ஓரமாகவோ, ஒதுக்குப் புறமாகவோ, தனியிடத்துக்கோ அழைத்துச் செல்லவில்லை.

காலியாகக் கிடந்து, முதலில் கண்ணில் பட்ட இரு இருக்கைகளில் ஒன்றில் அமரும்படி சைகை செய்துவிட்டு, அடுத்ததில் உட்கார்ந்துகொண்டு, அவளது கேள்விக்குப் பதிலைச் சொன்னான். “எங்கள் தொழில் தயாரிப்புகள் சில, இந்தத் தொழிலோடு தொடர்புடையவை. அதனால்தான், மொத்தத்தில் சம்பந்தப்பட்ட பெரிய புள்ளிகளின் போக்கு எப்படி இருக்கிறது என்று கவனிக்க வந்தேன். “ என்றான் அவன்.

ஓ! இவன் சொந்தத் தொழில் நடத்துகிறவனா? அப்படியானால், அவள் பணிபுரியும் நிறுவனம் போல, இவனும் வைத்திருக்கிறான்! ஓரளவேனும் பெரிய ஆள்!

இந்த யோசனை மனதில் ஓட, உணவு முடிந்ததும், மெல்ல விலகிப் போனாள் சுமனா.

அவர்களது அடுத்த சந்திப்பு, ஒரு டிப்பார்ட்மென்டல் ஸ்டோரில் நிகழ்ந்தது.

வயிற்றுப்பாட்டுக்கு விடுதியில் கொடுப்பார்கள் என்றாலும், சோப்பு, ஷாம்பூ, துணி, அறை சுத்தம் செய்யும் பொருட்கள், என்று, மாத சாமான் வாங்கச் சென்றிருந்தாள், சுமனா.

“ஏதேது, உலகம் ரொம்பத்தான் சுருங்கிவிட்டது போல!” என்ற குரலினால் ஏற்பட்ட இனிய படபடப்பை வெளியே தெரியாமல் அடக்கிக்கொண்டு, மெதுவாகத் திரும்பினாள்.

குரலே சொல்லவில்லையா, அவன்தான் என்று?

சொந்தத் தொழில் செய்யும் அளவு வசதியுள்ளவன் என்று தெரிந்ததும், ஹோட்டலில் ஒதுங்கிப் போன சுமனா, அங்கிருந்து கிளம்பும்வரை, அவனைக் கண்ணால் கூடத் தேடாது கட்டுப்பாட்டுடனே இருந்துவிட்டாள்.

அவ்வப்போது, அவனது நினைவு வரும்தான். வந்தாலும், அந்த ராஜாதிராஜனை நினைக்கவில்லையா? அது போல, அதே அளவுதான் என்று தனக்குள் சொல்லிக் கொள்வாள்.

அந்தச் சின்னப் பையனைப் பார்த்தாலும், இதே போல சந்தோஷமாகத்தான் இருக்கும் என்று எண்ணியவளுக்கு, இன்னொரு கேள்வி மனதில் தோன்றியது.

இவன் எங்கே, இங்கே வந்தான்?

# அத்தியாயம் - 2

அவளது பார்வையில் கேள்வியை உணர்ந்து, “இந்தப் பக்கம், ஒரு நண்பன் வீட்டில் விழா. திரும்பி வரும்போது, ஸ்டோரைப் பார்த்ததும், ஷேவிங் கிரீம் வாங்க வேண்டியது நினைவு வந்தது. பார்த்தால், அம்மையார் நிற்கிறீர்கள்! நீங்கள் “கோல்ட் கிரீமா”? “ என்று கேட்டான் அவன்.

“ஊகூம். மாதச் சாமான். சோப்பு, ஷாம்பூ, கொசுவத்தி . இப்படி. .. வந்து . . . .நீங்கள் ஷேவிங் க்ரீம் மட்டும்தானே. வாங்கிக்கொண்டு கிளம்புவது என்றால் . .. நான் வாங்க நேரமாகும்.”

தனக்காக நிற்க வேண்டாம் என்று, நாகரீகமாகச் சொல்கிறாள். ஆனால், அவள் கடையினுள் செல்வதைப் பார்த்துவிட்டுத்தான், அவன் காரை நிறுத்திவிட்டு, உள்ளேயே வந்தான் என்று தெரிந்தால், எப்படி உணர்வாளோ?

எனவே, உண்மை விவரத்தைச் சொல்லாமல் விடுத்து, “என்னைப் போகச் சொல்லுகிறீர்களா? அப்படி அவசரமாகப் போய்ப் பார்க்க வேண்டிய வேலை, இப்போது ஒன்றுமில்லை. அத்தோடு, இது ஒரு பல்பொருள் அங்காடி . . . தமிழில் சொன்னேன்மா. சுற்றிப் பார்த்தால், இங்கே இருக்கும் எத்தனையோ பொருட்களில் எனக்கு தேவையான இன்னும் ஏதாவது கண்ணில் படலாமே. சேர்ந்தே போவோமா . . . வந்து, பெயரைச் சொன்னால், அழைப்பது இலகுவாக இருக்கும். நீங்களும் வந்து . .வந்து . . என்று இழுக்கத் தேவையிராது. என் பெயர், மதுசூதனன். மதுசூதனன் ஆஃப் “மது என்டர்பிரைசஸ்” இப்போது, உன் . . . நீங்களும் பெயரைச் சொல்லலாமில்லையா? இது மூன்றாவது சந்திப்பு என்பதால், அன்னியரிடம் பெயரைச் சொல்லக் கூடாது என்கிற பொது விதி, அடிபட்டுப் போய்விடும்தானே?” என்று சரளமாகப் பேசினான் அவன்.

மதுசூதனன். அழகான பெயராக அவளுக்குத் தோன்றியது. மது, மதன், மதனன் எப்படிக் கூப்பிட்டாலும் அழகுதான். தனா என்று கூட . . .

“என்னம்மா, சொல்லலாம்தானே? அல்லது, கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் வேறு ஏதேனும் இருக்கிறதா?”

என்னவோ, அவன் தன்னைப் பார்த்துச் சிரிக்கிறானோ என்று இருந்தது, அவளுக்கு. ஆனால், ஒரு பதிலுக்கு ஒரு மணி நேரம்

எடுத்துக்கொண்டால், யாருக்கும்தான் சிரிப்பு வரும். இப்போதும் யோசித்துயோசித்து, சிரிக்க வைக்கக் கூடாது என்று முடிவு செய்து, “என் பெயர் சுமனா, சார்!” என்றாள் அவள்.

““சாரி”ல்லை! ஆனால், உன்னது மிக அழகான பெயர். யோசித்து நல்ல்ல பெயரைத் தேடிப்பிடித்து, உனக்கு வைத்திருக்கிறார்கள்.” என்று பாராட்டினான் மதுசூதனன்.

அவனது பாராட்டுதலில், அவளைக் குறித்து, அவன் பயன்படுத்திய ஒருமைக் குறிப்பு மறந்து போனது.

ஒப்புதலாகத் தலையாட்டி, “இம். யோசித்துதான். இந்த மதம், இந்த இனம் என்று எந்தப் பாகுபாடும் தெரிந்து விடக் கூடாது என்று, யோசித்துதான், ஆசிரமத்தில் பெயர் வைப்பார்கள். தென்றல், தயாமலர், காருண்யா, சுநீதி . . இப்படியெல்லாம் யோ . .சித்து. . .. ஐயோ, சாரிசாரி! உங்களைப் போரடித்துவிட்டேன்!” என்று மன்னிப்பு வேண்டினாள் சுமனா.

“போர் இல்லை. நம் பெயரையும், இப்படியெல்லாம் யோசித்து, அர்த்தம் பார்த்து வைத்திருக்கலாமே., சும்மா, தாத்தா பெயர் பேரனுக்கு என்று வைத்துவிட்டார்களே என்று குறையாக இருக்கிறது! “

“குறையா? கொடுத்து வைத்திருக்க வேண்டும் தெரியுமா?” என்று மறுத்துப் பேசினாள், சுமனா. “தாத்தா பெயர் என்றால், மூன்று தலைமுறை உறவுகள் என்ற அர்த்தமில்லையா? எவ்வளவு பெருமைக்குரிய விஷயம்!”

முகம் மாற, “இப்போது, நான் வருத்தம் தெரிவிக்க வேண்டும் போலத் தெரிகிறதே!” என்றான் அவன் தணிந்த குரலில்.

திகைப்புடன் நோக்கியவளுக்கு உடனே விஷயம் புரிய, “அச்சோ, அப்படியெல்லாம் கிடையாது, சார். தெரியவே தெரியாத விஷயத்துக்கு, ஏக்கம் எப்படி  வரும்? உங்களுக்குப் பெருமை என்று நினைத்தேனே தவிர, எனக்குக் குறையாக எண்ணவே இல்லை. அத்தோடு மது, மதன், மதனன், தனா என்று எப்படிச் சுருக்கி அழைத்தாலும், உங்கள் பெயர் அழகாகவே இருக்கிறதே!” என்று, அவனது பெயருக்கும் அவள் வக்காலத்து வாங்க, கீழ்க் கண்ணால் அவளைப் பார்த்தபடியே உடன் நடந்த அவனது முகம் மலர்ந்து விகசித்தது.

அங்காடியுள் சுற்றும்போது, மதுசூதனன் ஒரு விஷயத்தைக் கவனித்தான்.

ஸ்டோரின் ஒவ்வொரு பகுதியிலும், சில பகுதிகளை, சுமனா

திரும்பிப் பார்ப்பதே இல்லை!

இன்னமும் சற்று அதிகம் கவனிக்கையில், சற்று விலை அதிகமாக இருக்கும் போலத் தோன்றுகிற பொருட்களை அடுக்கியிருந்த பக்கமே திரும்பாமல் சுமனா சென்று கொண்டிருப்பது புரிந்தது.

பார்ப்பது கூடக் கூடாது என்று, அது என்ன விரதம்? அல்லது சபதம்?

அவளிடமே காரணம் கேட்டான். “ஏன்? என்ன விஷயம்?”

“அது . . .” என்று ஒரு கணம் தயங்கியவள், காரணத்தை மறைக்காமல் சொன்னாள். “எல்லாம் விலை அதிகமானவை. பார்த்தால், வேண்டும் போல மனதில் ஏக்கமாயிருக்கும். இலகுவாக வாங்கி அனுபவிப்பவர்களைப் பார்த்தால், பொறாமை வரும். எத்தனையோ எதிர்மறை உணர்வுகள். எதற்கு? பார்க்காமலே இருந்துவிட்டால், பிரச்சினையே இராதில்லையா? கிடைக்காததற்கு ஏங்கக் கூடாது என்று ஆசிரமத்தில் எங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான், நான் அந்தப் பக்கமே திரும்புவது இல்லை. “ என்று, பெரிதாக விளக்கம் கூறினாள்.

ஆனால், மதுசூதனனுக்கு, இது உசிதமாகப் படவில்லை.

“எனக்கு இந்தக் கொள்கை சரியாகப் படவில்லை, சுமனா. நீயுமே யோசித்துப்பார். ஒரு பொருளைப் பார்த்தால்தானே, இது வேண்டும் என்று தோன்றினால்தானே, அதற்காக முயற்சி செய்யத் தோன்றும்? முயற்சி திருவினையாக்கும் என்பார்களே. ஆசைப்பட்டு, அடையும்போது, அதுவே தனி மகிழ்ச்சி அல்லவா?” என்று . .கிட்டத்தட்ட வாதாடினான் எனலாம்.

ஆனால், சுமனா அதை ஒப்புவதாக இல்லை. “ஐயோ வேண்டவே வேண்டாம், சார். ஆசைப்பட்டு ஏங்கி, அதற்காகத் தவித்து, வேதனைப்பட்டு . . . நிம்மதியே போய்விடும். அதைக் காட்டிலும், போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று ஆசிரமத்தில் எங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். புத்தர் கூடச் சொல்லவில்லையா, ஆசைதான் அத்தனை துன்பங்களுக்கும் ஆணிவேர் என்று? ஆசைப் படத் தொடங்கினால், இன்னும் இன்னும் என்று, அதற்கு முடிவே இராதாம். அதனால், இருப்பதைக் கொண்டு திருப்தியோடு இருப்பது, எவ்வளவோ மேல், சார். “

வளர்ந்த இடத்துப் போதனை இதயத்தில் அச்சடிக்கப்பட்டு இருப்பது நன்றாகவே புரிந்தது, அவனுக்கு. ஒரே வாதத்தில், இது மாறக்

கூடியது அல்ல. என்றாலும், சீக்கிரமே மாறும் என்பதும் மதுசூதனனுக்கு நிச்சயமே.

இப்போதைக்கு, இதைப் பற்றிய வாக்குவாதத்தில் ஈடுபடுவதைவிட, அவளோடான பழக்கத்தைப் பலப்படுத்திக் கொள்வது முக்கியம் என்று அவனுக்குத் தோன்ற, ஒத்துப் போகும் விஷயங்களில் உரையாடலைத் திருப்பினான்.

அதற்காகக் கஷ்டப்பட நேராமல், இயல்பாகவே திருப்பங்களும் நேர்ந்தன.

தாயைப் பிரிந்து தேடிய சிறுமி ஒருத்தி "ஆன்ட்டி, அங்கிள், அம்மா காணோம் . . " என்று அவர்களிடம் வந்து நின்றாள். செக்யூரிட்டியிடம் கூட்டிப்போய், பெற்றவளைத் தேடிக் கண்டுபிடித்து ஒப்படைக்கும்வரை கூடவே இருந்துவிட்டு வந்தபோது, அவர்கள் இருவருக்குமிடையே ஒரு தோழமை, தானாக ஏற்பட்டிருந்தது.

குனிந்து சோப்புத் தூளை எடுத்தபோது, சரிந்து முன்னே வந்து விழுந்த பின்னலைப் பார்த்துவிட்டு, "அடேயப்பா, என்ன நீளம், அடர்த்தி! " என்று இயல்பாக வியந்தான், மதுசூதனன்.

அவ்வப்போது யாராவது கேட்டுப் பழக்கம் என்பதால், தவறாக எடுத்துக் கொள்ளாமல், "தாமிரபரணித் தண்ணீரின் உபயம்!" என்று முறுவலித்தாள் அவள். "அந்தத் தண்ணீருக்கே, தலை முடி அடர்த்தியாக வளரும் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். தாமிரச் சத்து கலந்திருப்பதால், தண்ணீரின் சுவையும் அதிகம். எங்கள் ஆசிரமம் தாமிரபரணி நதிக் கரையில் இருப்பதாலோ, என்னவோ, எங்கள் ஆசிரமத்தில் எல்லோருக்குமே கூந்தல் அடர்த்தியாகத்தான் இருக்கும். கீரை, பயறு சுண்டல் என்று, எங்கள் எளிமையான உணவும் காரணமாக இருக்கலாம்."

"இப்போது?"

"விடுதியில் கேட்டால் செய்து தருவார்கள். கேரட், வெள்ளரி என்று கொஞ்சம் பச்சைக் காய்கறிகள் நானும் வாங்கி வைத்துக் கொள்வேன்."

"அருமையான ஆரோக்கியப் பாதுகாப்பு!"

"நோய் நொடி என்று படுத்துக்கொண்டால், யார் பார்ப்பார்கள்? அதனால், தன்னைத் தானே பேணிக்கொள்வது, எங்களுக்கு முதல் பாடம்! சூரிய நமஸ்காரம் மாதிரி, சில அடிப்படைப் பயிற்சிகளும் உண்டு. அப்போது உள்ளூர எரிச்சல் வரும். அதன் அருமை, இப்போது தெரிகிறது! நீங்கள் எப்படி? உணவு வீட்டிலேயே செய்வார்கள்,

இல்லையா?" என்று முதல் தடவையாக, சுமனா அவனைப் பற்றி விசாரித்தாள். இயல்பாக.

"ம். சுவைக்குத்தான் அதிகப்படி முக்கியத்துவம். உடல் நலம் சற்று அடுத்த பட்சமாகத்தான், உணவு இருக்கும். ஒரு சாலட் மட்டும் என் கட்டாயம். நானும், ஜாகிங், ஜிம் என்று போய், தொப்பை போடாமல் கவனித்துக் கொள்வேன்."

தொப்பை?

தன்னையறியாமல் அவனைத் திரும்பிப் பார்த்தாள் அவள்.

ஆண்மையின் எடுத்துக்காட்டு போல, உயரமும் உறுதியுமாக அவனது தோற்றம் அப்படியே அவள் மனதில் பதிந்தது.

ஏனோ கன்னங்களில் லேசாகச் சூடு பரவுவது போல அவள் உணரத் தொடங்கும்போதே, "இல்லாவிட்டால், இதைச் சாப்பிடு, அதைச் சாப்பிடு என்று அம்மாவும், சமையற்காரம்மாவும் திணிக்க முயற்சிப்பதில், நான் கொழுக் மொழுக் அமுல் பேபி ஆகியிருப்பேன்." என்று அவன் சொன்ன தினுசில், அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

அடுத்து, சுமனா அலுவல் முடிந்து திரும்பும்போது, அந்தப் பக்கம் ஏதோ வேலையாக வந்ததாகக் கூறி, அவளைக் கூட்டிப்போய், ஒரு காஃபி அருந்திவிட்டு, விடுதியருகே இறக்கி விட்டான்.

அதையடுத்துக் கடற்கரையில் சந்தித்தார்கள்!

அப்புறமாக அடிக்கடி! இருவரும் திட்டமிட்டே சந்தித்தார்கள். இருவர் மனதிலும் நேசம் இருப்பதை உணர்ந்தார்கள்., ஒருவருக்கொருவர் ஒத்துக் கொண்டார்கள். அடிக்கடி சந்தித்தார்கள். ஒருவருக்கொருவர் "தனா"வும், "சுமனி"யும் ஆனார்கள்.

ஒரு பூ மலர்ந்து மணம் வீசுவதைப் போல, எல்லாமே இயல்பாக நடந்தது.

திருமணம் பற்றியும் பேசினார்கள்.

அடுத்து வரும் ஏதாவது விடுமுறை நாட்களில், ஆசிரமத்துக்குச் சென்று, மேலாளரிடம் இது பற்றித் தெரிவித்துவிட்டு வருவதாக, சுமனா சொன்னாள்.

அவரிடம் அனுமதி கேட்க வேண்டிய அவசியம் கிடையாது என்றாலும், ஆசிரமத்தில் உள்ள அனைவருக்கும் அடைக்கலம் கொடுத்ததோடு, அனைவரையும் அன்பும் பரிவுமாக நடத்தும் அவரிடம் ஆசி பெறுவது, நல்லது, கடமை என்று அவளுக்குத் தோன்றியது.

அவனும் தடுக்கவில்லை. செல்லும்போது, அவளோடு கூட வருவதாகக் கூடக் கூறினான்.

அவனைப் பொறுத்த வரையில், தொழிற்சாலையில், பெரிய அளவாக, ஒரு புது முயற்சியில் ஈடுபட்டிருப்பதால், அதை நல்லபடியாக முடித்துவிட்டுப் பெற்றோரிடம் தங்கள் விஷயத்தைத் தெரிவிக்கத் திட்டமிட்டிருந்தான்.

ஆசிரமத்துக்குச் செல்லும்போது, அவளோடு தானும் வருவதாக மதுசூதனன் சொன்னது , இன்னமும் சிறப்பாக இருக்கும் போலத் தோன்றியதால், சுமனாவும், தன் வளர்ந்த இடத்து விஜயத்தைத் தள்ளிப் போட்டாள்.

அவனுக்கும் வேலையை முடித்துவிட்டுக் கிளம்பும் ஆர்வம் அதிகம் இருந்தது. புதிய வேலையில் சில பிரச்சினைகளும் இருக்கவே, அதன் காரணமாக, சுமனாவை அவனால் அடிக்கடி சந்திக்கவும் முடியாது போயிற்று.

ஆனால், அதை ஈடு கட்டும் விதமாக, ஓய்வு நேரத்தில் அவளோடு செல்லில் பேசுவான். இரவு பத்து மணியானாலும், அவனது அழைப்புக்காகக் காத்திருப்பது, இப்போது, அவளது வழக்கமாகிக் கொண்டு வந்தது.

நெஞ்சில் இருப்பவனின் குரல் கேட்டாலே, சுமனாவுக்குத் திருப்திதான்.

ஆனால், அதுவும், இப்போது அரிதாகிக்கொண்டு வந்தது.

மதுசூதனன் நினைத்தது போல, அவனது புது வேலை முடிய மறுத்தது.

எளிது என்று, அவனும் ஒருபோதும் எண்ணவில்லை. அவனது திறமைக்குச் சவால் விடும் வேலை என்று தெரிந்தேதான், அந்த வேலையை அவன் தொடங்கியது.

ஆனால், அதற்கான தொழிலாளர்களைத் தெரிவு செய்ததில்தான், ஒரு பிரச்சனை ஏற்பட்டுவிட்டது. “மது என்டர்பிரைசஸ்” என்று தொடங்கிய தொழிலில் தந்தை, தாய், மகன் என்று குடும்பத்தில் எல்லோருமே உரிமையாளர்கள்தான்.

எனவே, அதிலிருந்து சில தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்து, தன் புது முயற்சியில் ஈடுபடுத்துவதை, மதுசூதனன் பெரிதாக எண்ணவில்லை. ஆனால், சிறுகச் சிறுக, இதுவே பூதாகாரமாக வடிவெடுத்தது. தொல்லை செய்வதற்காகச் சிலபேர் எந்த அளவுக்குப்

போவார்கள் என்பதை, அவனுக்குப் புரிய வைத்தது.

தொழிலாளர் தலைவர்களைக் கேளாமல், இவன் எப்படி, தன் வேலையில் கொஞ்சம் தொழிலாளர்களை ஈடுபடுத்தலாம் என்று, யார் தொடங்கியது என்பதே தெரியாமல், ஒரு தகராறு எழுந்தது.

அந்தத் தலைவர்களை அழைத்துப் பேசினால், இரு தலைவர்களுமே, ஆளுக்கு ஒருபக்கமாய் வக்கரித்து நின்றார்கள்.

மகனின் வேலையைத் தாய் நிறுவனத்தோடு இணைத்துப் பேசவே, மறுத்தார்கள்.

“உனக்கு வரி கட்டுவதிலேயே நிறைய மிஞ்சும். அதனாலே, எங்களுக்கு என்ன லாபம், சொல்லு!” என்று பணத்துக்கு அடிப் போட்டார்கள்.

ஒரு வழியாக அவர்களைச் சரிப்படுத்தும்போது, முன்னூறு பேர் வேலை செய்கிறபோது, அதில் ஐம்பது பேரை மட்டும் கூப்பிட்டு இருக்கிறானே, அவர்கள் மட்டும் என்ன உசத்தி? என்று, இன்னொரு பேச்சு பரவலாக எழுந்தது.

மற்ற அத்தனை பேருமே, இந்த ஐம்பது தொழிலாளர்களையும், விரோதிகளாகப் பார்த்தார்கள்.

கடைசி அடியாக, அச்சில் வார்க்க வேண்டிய கலவையைத், தவறான அளவில் பொருட்களைச் சேர்த்து, ஒரு தயாரிப்பு முழுவதும் வீணாகிப் போயிற்று.

இது, பெரிய பொருள் நஷ்டத்தையும் ஏற்படுத்தியது.

இந்தக் கடைசி திருப்பத்தைப் பற்றிச் சொல்லும்போது, மதுசூதனனே மிகவும் சோர்ந்துவிட்டான். “தொழிலாளர்களுக்குள் உள்ள கோஷ்டிச் சண்டை, இந்த அளவுக்குப் போகும் என்று நான் . . .அப்பாவுமே எதிர்பார்க்கவில்லை. இது, வேண்டும் என்றே செய்தது, சுமனி. எவ்வளவோ லாபம் வரும் என்று நினைத்தது., இப்போது கையைக் கடிக்காமல் விட்டாலே, அதிசயம் என்ற நிலை! கட்டாயம் கடித்துவிடும் என்றுதான் தோன்றுகிறது.”

பக்கத்தில் இருந்திருந்தால், குறைந்த பட்சமாக, மதுசூதனனின் தோளையாவது, சுமனா தட்டிக்
கொடுத்திருப்பாள்.

ஆனால், செல்லில் அது முடியாதே! எனவே, சொல்லால் தட்டிக் கொடுக்க முயன்றாள். “பாருங்கள், தனா, பார்த்தறிவு, கேட்டறிவு,

படித்தறிவு என்று பலவிதமான அறிவுச் செல்வங்களில், பட்டறிவுதான் சிறந்தது என்பார்கள். அனுபவப் பாடம். இந்த முயற்சியில் எவ்வளவு பணம் போனாலும், அதனால் அடைந்திருக்கும் அனுபவ அறிவு, இழப்பை ஈடுகட்டும். அடுத்த முயற்சியில், இதையெல்லாம் யோசித்துத் திட்டமிடுவீர்கள் அல்லவா? அப்போது, வெற்றி சர்வ  நிச்சயம் ஆகி விடுமே. அந்த வெற்றிக்கான முதல் படி என்று, இதை நினைத்துக் கொள்ளுங்கள். “ என்று ஆறுதலாகப் பேசி, உற்சாகமூட்டினாள்.

ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு, மதுசூதனன் சொன்னான். “நீயும் அப்பா மாதிரியே பேசுகிறாய், சுமனி. அவரும், இதையேதான் சொன்னார். இந்த நஷ்டத்தை, அனுபவப் பாடத்துக்கான கட்டணமாக எண்ணிக் கொள்ளச் சொன்னார். நீயும் அதையே சொன்னது, மனதுக்குத் தெம்பூட்டுகிறதும்மா. எப்படியும், இந்த வேலையைச் சொன்ன நாளில் முடித்துக் கொடுத்தாக வேண்டும். இல்லையென்றால், வெளியே நம் பெயர் கெட்டுவிடும். கலவை இடத்தில், அதிகப்படிப் பாதுகாப்பு  போட்டிருக்கிறேன். இன்னும், எல்லோரையும் கூட்டிப் பேசப் போகிறேன். கூடவே இருந்து, இரவு பகல் வேலை நடத்தப் போகிறேன்.  . . .”

எதிர்காலத் திட்டங்களைப் பற்றி, சற்று உற்சாகத்துடன் பேசிவிட்டு, அவன் செல்லை அணைத்தபோது, பதினோரு மணிக்கு மேல் ஆகிவிட்டது.

மேலும் ஓரிரு தினங்கள், இந்த இரவுப் பேச்சு கூட, முடியாமல் போனது.

ஒருநாள், “இன்றோடு, அந்த வேலை முடிந்தது, சுமனா.” என்றான மதுசூதனன் களைத்த குரலில்.

“நஷ்டம்தான். நிறையச் செலவு செய்து, பெட்டி நிறைய வாங்கி வைத்திருக்கிறேன். அனுபவ அறிவைச் சொன்னேன்! அது எந்த அளவுக்குப் பயன் படக் கூடும் என்று, காலம்தான் சொல்ல வேண்டும்.” என்று, கேலி போலச் சொன்ன போது, அவன் குரலில் வருத்தம் இருந்தாலும், கூடவே திடமும் பெருகியிருந்தது.

ஏற்றவாறு இரண்டு வார்த்தை அவள் பேச, “இன்னும் “பாக்கிங்”, அனுப்புவது பார்க்க வேண்டும், சுமனி. அனேகமாக, அடுத்த வாரம் நாம் சந்திக்கலாம் என்று நினைக்கிறேன்.” என்றுரைத்துப் பேச்சை முடித்தான் அவன்.

சுமனா ஆவலாகக் காத்திருந்த அடுத்த வார சந்திப்புக்கு முன்னராக, அவள் இன்னொரு நபரைச் சந்திக்க நேர்ந்தது.

அந்தச் சந்திப்பு, அவளது வாழ்வின் போக்கையே, அவள் சற்றும் எண்ணியிராத வகையில் உருட்டிப் புரட்டி, எங்கோ தூக்கிப் போட்டது.

# அத்தியாயம் - 3

மதுசூதனன் பேச்சில் அடிபடும் தொழிற்சாலை, பெரும் பணத்தை உள்ளடக்கிற வேலைகள், அதில் வரும் லாப நஷ்டங்கள் பற்றிய தெளிவான உணர்வுகள் எதுவும், சுமனாவுக்குக் கிடையாது.

பெரிய கார், பங்களா போன்றவற்றின் விலைகள் பற்றி, எண், எழுத்தில் அறிவாளே தவிர, அவைகளை வாங்குவதற்கும், பராமரிப்பதற்கும் என்னென்ன மாதிரி சம்பாதிக்கிறார்கள், செலவு செய்கிறார்கள் என்பன போன்றவை, அவளது அனுபவ வட்டத்துள் இதுவரை வந்தது இல்லை.

பெரும் தொகையான பணத்தைப் பற்றியோ, அதனால் அனுபவிக்கக் கூடிய சுகங்கள் பற்றியோ அவள் கற்பனையில் ஆழ்ந்தது கிடையாது. அவளுக்குத் தேவை என்று பட்டது, இன்னும் உயர்வான கல்வி பயில்வதற்கான கட்டணத் தொகையான சில, பல ஆயிரங்கள் மட்டுமே. அதைப் படித்தால், இன்னும் கொஞ்சம் உயர்ந்த பதவி கிடைக்கக் கூடும். பணியிடத்தில், கூடக் கொஞ்சம் மரியாதை கிடைக்கும். கூட்ட நெரிசலில் பஸ்சில் அவதிப்படாமல், ஆட்டோவில் செல்லலாம். அவ்வளவே!

மதுசூதனன் சொன்ன லாப நஷ்டங்களும் கூட, அவளது, உள் மனதில் பணக்கணக்காகப் பதியவில்லை. வென்றிருந்தால், மகிழ்ந்திருப்பானே, இழப்பு என்று வருந்துகிறானே என்று, உணர்ச்சி பூர்வமான புரிதல்தான் அவளுக்கு.

தீயைத் தொட்டால் சுடும் என்று படித்து அறிவதை விட, மெய்யாகவே தொட்டுப் பார்த்தவன் அதை மறக்க மாட்டான். தொட்டுவிடாமல் கவனமாக இருப்பான். அதே போல, நஷ்டம் என்று வருந்தும் அவளுடைய தனா, இப்போதைய பிழைகள், இனி நேர விடாமல் கவனத்தோடு இருந்து ஜெயிப்பான். ஜெயித்து சந்தோஷமாக இருப்பான்.

இவ்வளவுதான், அவளது மனதில் பட்டது.

மதுசூதனன் தொழிலில் வென்றால், அவனுக்கு எவ்வளவு பணம் கிடைக்கும் என்றோ, அதன் மூலம் தனக்குக் கிடைக்கக் கூடிய சுகங்கள் பற்றிய சிந்தனையிலோ, அவளது மனம் ஈடுபட்டதில்லை.

இந்த வேலை முடிந்தது என்றால், ஒரு தொல்லை விட்டது., இனி அவன் நிம்மதியாக இருப்பான். வருத்தப்பட்டால் தேற்ற வேண்டும்.

பல நாட்களுக்குப் பிறகு, அவனைப் பார்க்கப் போகிறாள்! அதுவே, ஆனந்தம்தானே?

இத்தகைய மனநிலையில் அவள் இருக்கும்போது, ஒரு நாள் மாலை வேலை முடிந்து வந்து, முகம் கழுவிவிட்டு, விடுதி ஹாலில் ஓடிய டீவியை அரைக் கவனமாகப் பார்த்தபடி அமர்ந்திருந்தபோது, “உன்னைப் பார்க்க ஒரு பெரியம்மா வந்திருக்கிறாங்கம்மா.” என்று அங்கே கூட்டிப் பெருக்கிப் பணி புரிகிற செல்வி வந்து சொன்னாள்.

சுமனாவுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்! அவளைப் பார்க்கவும் ஒருவரா?

அவள் விழிப்பதைப் பார்த்துவிட்டு, “மெய்யாவும், உன்னைத்தாம்மா, பேர் சொல்லிக் கேட்டாங்க. காரிலே வந்திருக்கிறாங்க. நகையெல்லாம் போட்டிருக்கிறாங்க. ரொம்ப வசதி போல! காக்க வைக்காமப் போய்ப் பாரு. மின்னாடி ரூம்புலே இருக்கிறாங்க. சீக்கிரமாப் போ.” என்று உந்தினாள் பணியாள்.

வியப்புடனேயே எழுந்து சென்றவளுக்கு யார், என்ன என்று, கிரில் போட்டு அடைத்திருந்த முன் வராந்தாவில் நின்று கொண்டிருந்த பெண்மணியைப் பார்த்த பிறகும், தெரியவில்லை.

“நீதான் சுமனாவா?” என்று கேட்டு அந்தப் பெண்மணி உறுதி செய்துகொண்ட போதுதான், சின்னவளுக்குமே, தன்னைத் தேடித்தான் வந்திருக்கிறாள் என்று முழுதாக உறுதியாயிற்று.

“நீங்கள் . . “ என்று சுமனா இழுக்கும்போதே, “உனக்குத் தனியாக அறை இருந்தால், அங்கே போய்ப் பேசலாமா? அல்லது காருக்கு வருகிறாயா? இடையூறின்றித்  தனிமையில் பேச வேண்டும். “ என்றாள் பெரியவள்.

எவ்வளவு நல்லவர்களாகத் தோற்றமளித்தாலும், அன்னியரோடு தனியே எங்கேயும் செல்லக் கூடாது என்பது, ஆசிரமத்தில் பாலபாடம்.

“எனக்குத் தனி அறைதான்.” என்று, வந்தவளைத் தன் அறைக்கு, சுமனா அழைத்துச் சென்றாள்.

ஒடுக்கமான ஒரு கட்டில், சிறு மேஜை, நாற்காலி, இவ்வளவே அந்த அறையில் இருந்தவை. எல்லாம் ஸ்டீல். அறையும் சின்னதே.

ஆசிரமத்தில், எல்லாப் பெண்களும் சேர்ந்து படுத்து, இருந்து பழகியவளுக்கு, இந்த அறையே பெரிதாகத்தான் தோன்றும். இப்போது, வந்த பெண்மணி ஒரு மாதிரிப் பார்க்கவும், சற்று சங்கடமாக இருந்தது.

அதற்காக, அறையை இடித்துப்  பெரிதாக்கவா முடியும்?

“உட்காருங்கள்.” என்றாள் மெதுவாக.

“எங்கே?”

சட்டென நிமிர்ந்து, “கட்டிலில். அல்லது நாற்காலியில். இரண்டுமே சுத்தமாகத்தான் இருக்கும். “ என்றாள் சுமனா, அதுதானே முக்கியம் என்பது போல.

யோசனையோடு அவளைப் பார்த்துவிட்டு, கட்டிலின் தலைப்பக்கமாக ஓரமாக உட்கார்ந்தாள் பெரியவள்.

சுமனா நாற்காலியில் அமர்வதைப் பார்த்துவிட்டு, “நான் யார் என்று தெரிகிறதா?” என்று கேட்டாள்.

“இல்லையே . .” என்றாள் சுமனா தயக்கத்துடன். ஒரு வேளை, ஆசிரமத்துக்கு வந்து நன்கொடை கொடுத்த யாருமோ என்று வேகமாக யோசித்துவிட்டு, “உங்களை நான் பார்த்ததாக நினைவே இல்லையே!” என்றாள் மெதுவாக .

“மது என்னைப் பற்றிச் சொல்லவில்லை போல! . .இப்போது, தெரிகிறதா?”

சுமனாவின் கண்களில் திகைப்பு தெரிந்தது.

யாரும் வந்து சந்திக்கக் கூடும் என்று மதுசூதனன், அவளிடம் சொல்லியிருக்கவில்லையே. வேலை மும்முரத்தில் தனா மறந்துவிட்டானா? அல்லது, அவனிடம் சொல்லாமலே, இந்தப் பெண்மணி தானாக வந்திருக்கிறாளா? உரிமையோடு பெயர் சொல்வதைப் பார்த்தால் . . .

“நீங்கள் த . . மதுசூதனனுடைய தாயாரா?” என்று கேட்டவள், பெரியவளின் ஒப்புதலான தலையாட்டலில், எழுந்து கை குவித்து, “வாங்கம்மா.” என்று புன்னகை செய்தாள் . “நீங்கள் வருவதாக, அவர் சொல்லவே இல்லை! இப்போது நீங்கள் ஒரு காஃபி குடிக்கிறீர்களா? கேட்டால், விடுதியில் போட்டுத் தருவார்கள்.” என்று உபசரித்தாள்.

கண் மூடித் திறந்து, “என் பொறுப்பை, ரொம்பக் கஷ்டமாக்காதே, சுமனா. நான் இப்போது ,உன்னுடன் சந்தோஷமாப் பேசிக் கொண்டிருக்க வரவில்லை. அந்த அளவுக்கு உனக்குப் புரிந்திருக்கும்.” என்றவள், மற்றவளின் “இல்லை.” என்ற தலையாட்டலில் திகைத்தாள்.

“உங்கள் மகன் மணக்க விரும்பும் பெண் எப்படிப்பட்டவள் என்று பார்க்க வந்திருப்பீர்கள் என்பது, என் ஊகம். என்னைப் பற்றிக்

கெடுதலாக எதையும் நீங்கள் கேள்விப் பட்டிருக்க வாய்ப்பில்லை. எனவே, ஏன் சந்தோஷமாக இருக்க முடியாது?” என்று சுமனா கேட்கவும், மதுசூதனனுடைய தாயார் சற்றுத் திணறிப் போனாள்.

ஒரு திருமணத்துக்கு, நல்ல குணம் மட்டுமே போதும் என்று எண்ணுகிறளிடம் எப்படிப் பேசி, சமாளிப்பது?

ஆனால், மகனுடைய வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் என்றால், சரளா இதைச் சமாளித்துதான் ஆக வேண்டும்.

ஒரு பெரிய மூச்சை எடுத்துக்கொண்டு, அவர்களது கூட்டு எப்படிச் சரி வராது என்பதை எடுத்துச் சொல்லலானாள்.

மதுசூதனனைப் பெற்றவள் முன் வைத்த முக்கியமான காரணம், பணம்! அதாவது, பெரும் பணம்.

பெரிய பெரிய கோடீசுவரர்கள் எல்லாம், மதுசூதனனுக்குப் பெண்ணைக் கொடுக்க, எப்படி அலைகிறார்கள் என்பதை அவள் சொன்னபோது, சுமனாவின் முகத்தில் வியப்பு தவிர வேறெதுவும் இல்லை.

அப்பாடி! இவ்வளவு பணக்காரர்களுடைய மகள்கள் எங்கே, தான் எங்கே என்று பிரமிக்கிறாள் என்று சரளா திருப்தியுறும்போதே, “அதனால் என்ன ஆன்ட்டி? தனா விரும்புவது, என்னைத்தானே? அப்புறமென்ன?” என்று சுமனா கேட்கவும், பெரியவள் மறுபடியும் திணறினாள்.

கூடவே, அவளுக்கு எரிச்சலும் மூண்டது.

தன்னை மணப்பதால் மதுசூதனனுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படும் என்று இந்த அனாதைப் பெண்ணுக்குப் புரியவில்லையா? அல்லது, புரியாதது போல நடிக்கிறாளா? எதுவானாலும், உச்சியில் அறைந்த மாதிரி, உணர வைத்தே ஆக வேண்டுமே!

லேசாகத் தொண்டையைச் செருமிக்கொண்டு, சரளா மீண்டும் தொடங்கினாள். “பாரம்மா, உன்னை வருத்தும் நோக்கத்தோடு, நான் இதைச் சொல்லவில்லை. ஆனால், நிலைமையை உனக்குப் புரிய வைக்க வேண்டியிருக்கிறது. எங்கள் குடும்பம் பெரியது. ஆணும் பெண்ணுமாக எனனோடு பிறந்தவர்களும் என் கணவரோடு பிறந்தவர்களும் நிறையப் பேர். இது போக, பெரியப்பா, சித்தப்பா, அத்தை மாமாக்கள், அவர்களுடைய பிள்ளைகள் என்று, அவர்களும் நிறையத்தான். எல்லோருமே, அவர்களுக்குச் சமமான குடும்பங்களில்தான் திருமணமும் செய்திருக்கிறார்கள். என் அண்ணன்

மகனுடைய மனைவி, பிரபல ஹோட்டல்காரருடைய மகள். திருமணத்தின்போது, பெண் வீட்டார், அவனுக்கு ரோல்ஸ்ராய்ஸ் கார் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். மைத்துனர் மகன் மில் ஓனர் மகள். மகளுக்குச் சென்னையில் வீடே வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். மது அத்தை பையன் மனைவி, ஐஏஎஸ் அதிகாரியுடைய மகள். இப்படி எல்லோரும் பெரிய பெரிய இடங்களில் இருந்து வந்தவர்கள். இவர்கள் நடுவே, உன்னை எந்தக் குடும்பத்துப் பெண் என்று, நாங்கள் உன்னை அறிமுகம் செய்வது, சொல்லு? யாருமற்ற அனாதை இல்லத்துப் பெண் என்ற அறிமுகம், உனக்கே அவமானமாக இராது? கொஞ்சம் கற்பனை செய்து பார்!"

கற்பனையில், தெளிவற்ற முகத்துடன் கூடிய பலர் நடுவில், சுமனாவும் மதுசூதனனும் கூனிக் குறுகி நிற்பது போலத் தோன்றியது.

ஆனால், இருவருக்கும் இடையே உள்ள அன்பு, மற்ற எதையும் விட மேலானது அல்லவா?

இந்தக் கேள்விக்கு, சரளா வேறு விதமாகப் பதில் சொன்னாள்.

"உன்னுடைய இந்த அன்பை மற்றவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா? ஒன்றுமில்லாத ஆசிரமத்துப் பெண், பணத்துக்காக மதுவை வளைத்துப் பிடித்துவிட்டாள் என்பார்கள். . ."

குறுக்கிட்டு, "அப்படியெல்லாம் எதுவும் கிடையாது." என்றாள் சுமனா, அவசரமாக. "தப்பான முயற்சி எதையும் நான் செய்தது இல்லை!"

"இருக்கலாம்மா. ஆனால், யாரும் அதை நம்ப மாட்டார்கள். அத்தோடு . ..........................................................................................

பணத்துக்காக மது மேல் நீ முதலில் ஆசைப்பட்டிராவிட்டாலும், அவனது குடும்ப நிலை தெரிந்த பிறகு, கார், நகைகள் என்று கொஞ்சம் . .கொஞ்சம் மயக்கம் வந்துதான் இருக்கும். பொறு., அனுபவசாலியாக நான் ஒன்று சொல்கிறேன், கேட்டுக்கொள். இந்த ஏசி, கார், நகைகள் எல்லாம் இப்போது பெரிதாகத் தெரிந்தாலும், காலப் போக்கில், பழகிப் போய் சாதாரணம் ஆகிவிடும். அப்போது இதெல்லாம் கொஞ்சமும் மகிழ்ச்சியைத் தராது. எனவே, இதைப் பெரிதாக நினைத்து அவனை மணக்க எண்ணாதே." என்று புத்தி சொன்னாள் சரளா.

"ஐயோ! பணம் நகை பற்றி, நான் நினைத்ததே கிடையாதும்மா. நிஜம்!" என்றாள் சுமனா வருத்தத்துடன்.

அவளுக்கும் உள்ளூர ஓர் அச்சம் தோன்றியிருந்தது. ஆனால்,

அவளது கலக்கமே வேறு. மதுசூதனனுடைய அன்னை முதலில் சொன்ன விஷயம்தான், அவளைப் பெரிதாக உறுத்திக் கொண்டிருந்தது.

சரளா சொன்ன அந்தப் பெரிய பெரிய மனிதர்களின் முன்னிலையில், தன்னால், மதுசூதனன் தலை குனிய நேருமோ என்று மனம் கலங்கினாள் அவள்.

இது போல, அவள் எண்ணிப் பார்க்கவில்லையே!

அவனுடைய தாயார் சொன்னது போலப் புது மோகத்தில், தனாவும் இப்போதைக்கு அதை எண்ணிப் பார்க்கவில்லையோ, என்னவோ!

ஆனால், எல்லாருமே பெரிய இடத்து மனிதர்களாக இருக்கும் நெருங்கிய உறவினர் கூட்டத்தில், பின்புலமற்ற மனைவி என்று தலை குனிந்து நிற்கையில், இவளால்தானே என்று தோன்றாமலா போகும்?

அப்போது, இந்தக் காதலும் நேசமும் எந்த அளவுக்கு நிலைத்து நிற்கும்?

ஆனால், வாழ்க்கை முழுவதும் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில்தானே, மணக்க முடிவு செய்தார்கள்?

இதை எல்லாம் தாங்காத காதல், கடைசி வரை எப்படி நிலைத்து நிற்கும்? தனா அப்படி இடையில் விடுகிறவன் அல்ல. நஷ்டம் என்று ஆன பிறகும், அந்த வேலையை முடிக்காமல் விடவில்லையே!

அத்தோடு, இது போன்ற கூட்டங்களில், அவளும்தானே, தலை குனிய நேரிடும்?

சந்தோஷத்தைப் போல, துன்பத்தையும், இருவரும் சேர்ந்தே அனுபவிக்க வேண்டியதுதான். வாழ்க்கை என்பது, அதுதானே?

சுமனாவின் முகத்தில் இருந்த கலக்கம் மாறி, திடம் பரவுவதைப் பார்த்து, இப்போது சரளாவுக்கு வயிறு கலங்கியது.

பார்வைக்கு மென்மையாகத் தோற்றினாலும், இந்தப் பெண்ணை விரட்டுவது கடினம் போலத் தெரிகிறதே என்று கலங்கினாள் அவள். அவளது உறவுகளில், அத்தனை பேரும், பெரிய பணக்காரக் குடும்பங்களில் பெண் எடுத்திருக்கும்போது, அத்தனை பேரிலும் கல்வியிலும், தோற்றத்திலும் சிறப்பானவனான மதுசூதனன் மட்டும், எதுவுமே இல்லாத ஓர் அனாதைப் பெண்ணை மணப்பதா? அவளால் எப்படி சகிக்க முடியும்?

இந்தப் பெண் அழுது ஆர்ப்பாட்டம் செய்வாளோ என்றுதான்,

சரளா தனியிடம் தேடியது. ஆனால், இருக்கும் நிலையைப் பார்த்தால், பெரியவளான அவளல்லவா, அழ நேரும் போல
இருக்கிறது!

இந்தச் சிறு பெண்ணிடம், அவள் தோற்பதா?

மனதைத் திடப்படுத்திக்கொண்டு, சரளா அடுத்த முயற்சியைத் தொடங்கினாள்.

"பார் சுமனா, இப்போது மதுவுக்கு ஒரு பெரிய நஷ்டம் நேர்ந்திருக்கிறது என்று, உனக்குத் தெரியுமா?" என்று குண்டு போடுவது போன்ற பாவனையில் கேட்டாள்.

"ம். தெரியும் தனா சொன்னார்." என்று சுமனா சாதாரணமாகப் பதில் கூறவும், அவள்தான் சற்று ஆடிப் போனாள் எனலாம்.

ஆனாலும் விடாமல், "எவ்வளவு என்று தெரியுமா? சில கோடிகள்!" என்றாள் மறுபடியும், இன்னும் பெரிய குண்டு போடும் பாவனையில்.

சரளாவின் முகத்தையே பார்த்தபடி, சும்மா உட்கார்ந்திருந்தாள், சுமனா.

"இதிலிருந்து மீண்டு, அவன் அடுத்த முயற்சி செய்து ஜெயிப்பதற்கு, இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ, அது தெரியாது. அவனே செய்வதானால், நிறையக் காலம் பிடிக்கும் என்பது நிச்சயம். ஆனால், இதே ஒரு பணக்காரப் பெண்ணை, அவனுக்காகவே காத்திருக்கும் "நிஷா ஃபேஷன்ஸ்"காரருடைய ஒரே மகளை மணந்தான் என்று வை., அவளுடைய குடும்பமே மதுசூதனனின் பின்னே நின்று, அவனை உயரே தூக்கி விட்டு விடுவார்கள். அவனது இறக்கமே ஒரு கனவோ என்பது போல, யாருக்கும் தெரியாமலே கூடப் போய்விடும். மாறாக உன்னை மணந்தால், என் பிள்ளை தலை தூக்க எவ்வளவு காலம் ஆகுமோ? அவன் செட் உறவுப் பிள்ளைகள் எல்லாம், "பென்சி"லும், "ஆடி"யிலும் வழுக்கிக்கொண்டு செல்லும்போது, என் மகனின் இந்த "ஸ்விஃப்டே" நிலைக்குமோ என்னவோ? அவர்கள் உலக நாடுகளில் சுற்றி மகிழும்போது, என் பிள்ளை இங்கே . . . தனக்கு மட்டும் இது இல்லையே, அது இல்லையே என்று கட்டாயம் நினைக்கத்தானே செய்வான்? இல்லாததை எண்ணி, முதலில் ஏக்கம் வரும்., பிறகு, அதன் காரணம் நீதானே என்று ஆத்திரம் வரும்., சண்டை வரும். மற்றவர்களை விடு. கட்டின கணவனுக்கே பதில் சொல்ல முடியாமல் , அந்த நேரம் நீதானே தவிக்கப் போகிறாய்? சற்றுப் பிரிந்து, நாலுநாள் எங்காவது போய் வரலாம் என்றால், உனக்கு வேறு போக்கிடமும் கிடையாது! சண்டை வந்து, வெளியே போடீ என்று விரட்டினால், நிலைமை

எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்று எண்ணிப் பார். நான், அவனுக்காக மட்டும் சொல்வதாக நினைக்காதே. உனக்காகவும்தான் பார்க்கிறேன். எனக்கு, மகன், மருமகள் இரண்டு பேரும் நன்றாக இருக்க வேண்டும்!”

சரளா சொன்ன மற்ற எதையும் விட, அவனது தொழில் நஷ்டப் பேச்சு, சுமனாவை அதிகம்  பாதித்தது. ஏனெனில், அதே இழப்பு குறித்து, மதுசூதனனும் அவளிடம் சொல்லியிருந்தான். வருத்தப்பட்டே சொல்லியிருந்தான்.

அந்த வருத்தம் சகிக்காமல், அவளே, தனாவைத் தேற்றியும் இருக்கிறாள். ஆனால் அந்த நஷ்டத்தை, லெட்ஜரில் எழுதிக் கூட்டிக் கழிக்கும் வெறும் பணக் கணக்காக மட்டுமாகப் பார்த்தவளுக்கு, அதன் பின்னே அவளுடைய தனா இவ்வளவு துன்புற நேரும் என்றால், வேதனையாக இருந்தது.

ஆனால், அதை விடவும், மற்ற எதையுமே விட அவளைக் கலங்கடித்தது,  மதுசூதனனைப் பெற்ற இந்தத் தாய்க்கு, தன்னை மருமகளாகக் கொள்ள விருப்பம் இல்லை என்பதுதான். இப்போது முக்கியமான விஷயமே அதுதான். இத்தனை காரணங்களை, அந்தத் தாய் எடுத்துச் சொல்வதன் நோக்கமும், திருமணத்தைத் தடுப்பதுதான்.

குடும்பத் தலைவியே மறுக்கும்போது, அப்புறம், அவர்களது திருமணம் எப்படி நடக்கும்? மகனுக்காக வேறு பெண் வேறு தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார்கள்.  அப்படியானால், அவனுடைய தந்தையின் கருத்தும் அதுவாகத்தான் இருக்கும்!

மதுசூதனனுக்கு, சுமனா மேல் ஆசையிருக்கலாம். அவளுக்கும் ஆசைதான். ஆனால், பெரியவர்கள் மறுக்கும்போது, இந்த ஆசை நிறைவேற வாய்ப்பே கிடையாது.

ஆசிரமத்து நினைவுகள் சில மனதுள் தோன்றின.

கிடைக்காததற்கு ஏங்கக் கூடாது!

சுமனா முடிவு செய்துவிட்டாள்.

சரளா வந்த காரியம், அவளது விருப்பம் போலவே நிறைவேறியது.

“நம் இருவருக்கும் ஒத்து வராது.” என்று, அந்தத் தாயின் விருப்பம் போலவே கடிதம் எழுதி, மதுசூதனனுக்கு அனுப்பிவிட்டு, சுமனா ஊரை விட்டே வெளியேறிப் போனாள்.

# அத்தியாயம் - 4

சரளாவுக்கு மிகவும் சந்தோஷம்!

மகனிடம் மாற்றத்தை உணர்ந்து, அவனுக்கு ஒரு நிழலை ஏற்பாடு செய்து, இந்தப் பெண்ணையும், அவளது பூர்வீகத்தையும் கண்டுபிடித்து, அவளிடமே பேச வந்த கெட்டிக்காரத்தனம் எல்லாம் வீணாகிப் போகுமோ என்று, அவளுக்குக் கலக்கமாக இருந்தது.

இனிமையாகவும் மென்மையாகவும் பேசுகிற இந்தப் பெண் ஒரு மாதிரி உறுதியையும் காட்டுகிறாளே., மகனை விடாமல் அட்டையாகப் பற்றிக் கொள்வாளோ என்று, அந்த உரையாடலின்போது பல முறை, அவளுக்குத் தோன்றத்தான் செய்தது.

ஆனால், இரண்டு பேரும் கஷ்டப்படுவீர்கள் என்ற ஒரு மிரட்டலில் சுருண்டுவிட்டாளே!

பாவம். அனாதை ஆசிரமத்தில் வளர்ந்த பெண். மதுசூதனனின் காரையும் வளத்தையும் பார்த்ததும், பணம் நகை என்று ஆசை வந்திருக்கும்.

அப்படியில்லை என்று வாய் வார்த்தையாக மறுத்தபோதும், உள்ளே ஆசை கட்டாயம் இருந்திருக்கும்.

பணத்திலேயே பிறந்து வளர்ந்த நிஷா கூட, “ஆன்ட்டி, உங்கள் வைர ஆரத்தை எனக்குத் தருவீர்கள்தானே?” என்று கேட்கவில்லையா?

அவள் அளவு வைரத்தின் மதிப்புத் தெரியாவிட்டாலும், இவளுக்கும் தினுசு தினுசாய் ஆடை நகை என்று வலம் வரும் ஆசை நிச்சயம் இருந்திருக்கும்.

ஒன்றும் கிடைக்காது என்றதும், “சட்டி சுட்டதாடா, கை விட்டதடா” என்று கிளம்பிவிட்டாள் . . . என்று உற்சாகத்துடன் எண்ணும்போதே, சரளாவுக்கு உள்ளே லேசாக உறுத்தியது.

அப்படிப் பணத்தாசை உள்ளவள் என்றால், உங்கள் பிள்ளையை விட்டுத் தருவதற்காக, இப்போது என்ன தருவீர்கள் என்று பேரம் பேசியிருக்கலாமே! இவள் ஒன்றுமே கேட்கவில்லையே!

ஒரு வேளை, நகை, பணம் மீது ஆசை கிடையாது என்று உத்தமி போலச் சொல்லிவிட்டோமே, எப்படிக் கேட்பது என்று தயங்குகிறாளோ?

அதைவிட, பணக் கணக்கைப் பணக்காரியை மணக்கப் போகும்

பிள்ளையிடமே பேசிக் கொள்ளலாம் என்று திட்டமிட்டால்? சட்டென வயிறு கலங்கியது சரளாவுக்கு.

மகனின் நன்மை கருதித்தான், சரளா இந்த முயற்சி செய்வதே! சுமனாவிடம் அவள் சொன்னது எல்லாமே, அவள் மனதார நம்பியதைத்தான்.

ஆனால், இந்த வயதுப் பிள்ளைகளுக்கு ஒரு மாதிரி புத்தி தடுமாற்றம் வரும். நல்லது கெட்டது சரியாகப் புரியாது. அதிலும் பையன்களுக்கு வெறியே பிடிக்கும். உலகத்தையே தூக்கி எறியக் கூடத் தயங்க மாட்டார்கள்.

இந்தப் பெண், மதுசூதனனிடம் போய் இல்லாததையும், பொல்லாததையும் சொன்னால் . . நடந்ததைச் சொன்னாலே, அவன் பெற்றவளை வெறுத்துவிட மாட்டானா?

வீட்டையே துறந்து, இந்த சுமனாவின் பின்னால் போவதும் நடக்கக் கூடியதுதான்.

ஆனால், பணம் இல்லாத மதுவை இவள் ஏற்பாளா?

ஏற்பாளா, மாட்டாளா என்பது வேறு விஷயம். ஆனால், காதலியைப் பிரிப்பதற்கு முயற்சி செய்தாள் என்று தாயை விலக்குவது நிச்சயம்!

யோசித்துவிட்டு, “ஒரு நல்ல வாழ்வு வரும் என்று எண்ணியிருப்பாய். அதை விட்டுப் போவது கடினமாகத்தான் இருக்கும். ஊரை விட்டுப் போவதாகவும் சொன்னாய். வெளியூரில் வேலை தேடி முடிக்கும்வரை ஆகிற செலவை . .கூடுதலாகக் கூட, நான் பணம் தருவேன். எவ்வளவு தேவைப்படும் என்று சொல்கிறாயா?” என்று கைப்பையைத் திறந்தாள் சரளா.

கத்தை நோட்டை அவள் எடுக்கும்போதே, “வேண்டாம்மா. அதை உள்ளேயே வையுங்கள்.” என்று, பையிலிருந்து பணத்தை வெளியே எடுக்க முடியாமல், சுமனா தடுத்தாள்.

தடுத்து, பெரியவளது கைப்பையை மூடிவிட்டு, “இரண்டு ஆண்டுகளாக வேலை பார்த்ததில், நான் கொஞ்சம் சேமித்திருக்கிறேன், அம்மா. வேலைக்கு . . வேலை கிடைப்பதும் கடினமில்லை. என்னோடு பயின்ற ஒரு தோழி,எப்போது வந்தாலும் உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறாள். நான் சமாளித்துக் கொள்வேன். ஆனால், தனாவுக்குப் பெரிய நஷ்டம்! கஷ்டப்படுகிறார் என்று வேறு சொன்னீர்களே., அவருக்குக் கொடுத்தால், உதவியாக இருக்குமே. தயவு

பண்ணி, இதைத் தனாவுக்குக் கொடுக்கிறீர்களா? கொஞ்சமேனும் பயன்படுமே “ என்று  சுமனா, கெஞ்சுதலாகக் கேட்கவும்,  சரளாவுக்கு மனம் சுட்டது.

என்னென்ன கொடுத்தேனும், தன் பிள்ளையை மீட்க, பிள்ளைக்ககாகச் செலவு பண்ண, அவள் தயாராத்தான் இருந்தாள். கையோடு ஒரு தொகையைக் கொண்டு வந்துமிருந்தாள்.

பணத்துக்குப் பார்க்கிறவள் என்றால், இந்தப் பெண், முழுதாக இதைப் பிடுங்கிக்கொண்டுதான் ஓடியிருப்பாள். இன்னும் கேட்டுமிருப்பாள்!

ஆனால், அந்தப் பணத்தை நஷ்டப்பட்டு வருந்தும் மகனுக்கே கொடுத்து உதவும்படி, பெற்றவள் அவளிடமே கேட்கிறாளே! மெய்யாகவே பெயருக்கேற்றபடி, இவள் நல்ல மனம் படைத்தவள்தான் போலும்!

ஒரு வேளை, மதுசூதனனுக்கு இவள்தான் பொருத்தமோ என்றுகூட, சரளாவுக்கு ஒரு கணம் தோன்றியது.

ஆனால், செல்வமும் செல்வாக்கும் நிறைந்த உறவினர் கூட்டம் அவளுடையது. என் மருமகள் இந்தக் குடும்பம்., என் சம்பந்தி இந்த நிறுவனம் வைத்திருக்கிறார் என்றெல்லாம் பெருமை பேசுகிறவர்களிடம், என் மருமகள் யாருமற்றவள்., அனாதை ஆசிரமத்தில் வளர்ந்தவள் என்று எப்படிச் சொல்லுவாள்?

ஒரு பெரிய இடத்திலிருந்து மருமகள் வந்தால், அவளும் தலை நிமிர்ந்து நின்று, பெருமை பேசலாம்!

அத்தோடு, அவளுடைய அருமை மகனுக்கும், அதுதானே சிறப்பு! மற்றபடி, உன் பையனுக்கு என்ன, வேறு பெண்ணே கிடைக்கவில்லையா என்று புரளி பேசுவார்களே!

மனதைக் கல்லாக்கிக்கொண்டு, சுமனா என்ன விதமாகப் பிரிந்து செல்லப் போகிறாள் என்பதை, அவளோடு சேர்ந்து திட்டமிட்டாள்.

ஒரு சுருக்கமான கடிதத்தோடு, செல்லில் இருந்த “சிம்”கார்டைக் கூட மாற்றிக்கொண்டு சுமனா ஊரை விட்டுக் கிளம்பிய பிறகே, சரளா நிம்மதியாக மூச்சு விட்டாள்.

எவ்வளவு பெரிய சாதனையை, யாருடைய உதவியும் இல்லாமல், தன்னந்தனியே செய்து முடித்திருக்கிறோம் என்று அவளுக்கு மிகவும் பெருமையாகக்கூட இருந்தது.

இந்தச் சாதனையைப் பற்றிக் கணவரிடம் கூட, அவள் சொல்லவில்லை. ஏனெனில், மகேச்வரனுக்கு மகனிடம் நம்பிக்கை அதிகம். “பையன் கெட்டிக்காரன், சரள். சாதிக்கப் பிறந்தவன். புதுமையாகச் சிந்திக்கிறான். அவன் விருப்பத்துக்கு விட்டால், நிறையச் செய்வான்.” என்பார்.

இந்த இழப்பைக் கூட, “முதல் முயற்சியில் ஒரு சில எதிர்பாராத தடைகள் நேர்வதுதான். எப்படியும், தரம் குறையாமல் முடித்துக் கொடுத்துவிட்டானே! இதை வைத்தே, அவன் முன்னேறுவான்.” என்றார்.

திருமணத்திலும், மகன் விருப்பம் போல விட்டுவிடலாம் என்றாரானால், அப்புறம் எதுவுமே செய்ய முடியாது. அப்பாவும் பிள்ளையும், ரொம்பவும் ஒரே மாதிரி!

ஒன்று சொன்னால், அதிலேயே நிற்பார்கள்.

அதனாலேயே, மதுசூதனனிடம் இயல்பு போலத் திருமணப் பேச்சை எடுத்தாள்.

மகன் கண்களில் ஒரு கணம் கனல் வீசியதோ?

சரளா உற்றுக் கவனிக்குமுன்பாகவே, அவன் மறுபடியும் பத்திரிகையுள் முழுகிவிட்டான்.

கவனியாதது போல, சரளா தொடர்ந்து பேசினாள். “நம் மஞ்சு அண்ணி நேற்று ரொம்ப நேரம், ஃபோனில் பேசினார்கள். அப்போது, கேட்டார்கள். யாரோ, நல்ல பெண்ணாம் சொத்து நிறையவாம் . . . “

அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, “அப்பா, “ என்று அழைத்துத் தந்தையிடம் பத்திரிகையைக் காட்டினான் மைந்தன்.

“இந்தச் செய்தி பார்த்தீர்களா, அப்பா? சிறு தொழில்களின் வரி விதிப்பில், உச்ச வரம்பை உயர்த்தி இருக்கிறார்கள். இந்தக் கணக்குப்படிப் பார்த்தால், எனக்கு நஷ்டக் கணக்கு, நிறையக் குறையும் போல இருக்கிறதுப்பா.” என்று தொழில் விவரம் பேசினான்.

“திரும்பத் திரும்ப அதை நஷ்டம் என்று சொல்லாதேடா! புத்தி கொள்முதல் என்று நினை! கிட்டத்தட்ட ஆயிரம் முயற்சிகளுக்குப் பிறகுதான், எடிசன் மின்சார பல்பைக் கண்டுபிடித்தார். பொருள், உழைப்பு எவ்வளவோ விரயம். ஆனால், அவர் சொன்னார்? அத்தனை விதமாகச் செய்யக் கூடாது என்று கற்றுக் கொண்டதாகத்தானே கூறினார்? நீயும், அப்படித்தான். எதெதில் கவனமாக இருக்க வேண்டும் என்று நேரடிப் பாடம்! அடுத்த முயற்சி, மிகப் பெரிய வெற்றியாகப்

போகிறது. அந்த நம்பிக்கையை அழுத்தமாகப் பிடி.” என்று, தென்பாகப் பேசினார் மகேசுவரன்.

இந்த முறை, சரளாவுக்குச் சந்தேகமே இல்லை! மதுசூதனன் கண்கள் தணல் துண்டங்களாகவே ஜொலித்தன.

“அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறதுப்பா. யார் யார் என்னை அலட்சியமாகக் கருதித் தூக்கி எறிந்திருந்தாலும், அவர்கள் கண் முன்னே, நான் ஜெயித்துக் காட்டுவேன், பாருங்கள்!”

மகன் பொதுப்படையாகச் சொல்கிறான் என்று மகேச்வரன் எண்ணினாலும், அவன் யாரைக் குறித்துப் பேசுகிறான் என்று, அவர் மனைவிக்குப் புரிந்து போயிற்று.

இக்கட்டான நேரத்தில், தன்னை விட்டுப் போனாள் என்பதற்காக சுமனா மேல், இவனுக்கு இவ்வளவு கோபம் என்றால், அவளை அப்படிப் போக வைத்தவள் தாயே என்று தெரிந்தால் . .
.அவ்வளவுதான்!

திருமணப் பேச்சை மேலும் தொடர, அப்போது அவளுக்குப் பயமாக இருந்தது.

ஆனால் அதற்காக, அது தொடர்பாகத் தொடர்ந்து பேசாமலே இருந்துவிடவும் இல்லை!

அவ்வப்போது, அவள் வயதுப் பெண்மணிகளுடைய குடும்பங்கள் பற்றி, முக்கியமாக மருமகள்கள் பற்றிச் சொல்லானாள். அடுத்து, அவர்களுக்குப் பிறந்த பேரன், பேத்திகளைப் பற்றியும் கூறினாள்.

அது போன்ற தருணங்களில், ஒரு சிறு உதட்டுப் பிதுக்கலோடு, மதுசூதனன் வேறு விஷயம் பேசுவான்.

“ஆன்ட்டி, ஆன்ட்டி் என்று ஜாடைப் பேச்சுகளோடு அந்த வீட்டைச் சுற்றி வந்த நிஷாவின் வளைகாப்புக்கே சென்று வந்த பின், சரளா மிகவும் கலங்கிப் போனாள்.

அவள் குறுக்கே நுழைந்து குளறுபடி பண்ணாமல் இருந்திருந்தால், அவள் வீட்டிலும், இப்படியொரு விழா நடந்திருக்குமோ?

ஆனால், நிஷாவுக்கு அவளுடைய தாயார் பெருமையோடு அணிவித்த வைர வளையல் போல, சுமனாவுக்கு யார் போடுவார்கள்?

ஆனாலும் . . .

“தொழில், தொழில் என்று அதே நினைவாக இருக்கிறீர்களே, நமக்கும் பேரன், பேத்தி என்று அடுத்த தலைமுறை வளர வேண்டாமா?

திருமணம் பற்றி மதுவிடம், நீங்கள் பேசுங்களேன். உரிய வயதில் கல்யாணம் எவ்வளவு முக்கியம் என்று எடுத்துச் சொல்லுங்கள்! " என்று கணவரிடம் போய் நின்றாள்.

"சொல்லலாம்மா. ஆனால், அதற்கு மரியாதை இருக்க வேண்டும் அல்லவா? ஜாடைமாடையாக நீ பேசும் பேச்சுகளுக்குக் கிடைக்கும் மதிப்பு, மரியாதை பற்றிக் கவனித்துக் கொண்டுதானே, இருக்கிறேன்!" என்றார் மகேசுவரன், சிறு முறுவலோடு.

"நான் படுகிற பாடு, உங்களுக்குக் கிண்டலாகவா இருக்கிறது?" என்றாள் மனைவி, கோபமும் குமுறலுமாக.

சரளாவின் கண்களில் கண்ணீரைக் கண்டதும், மகேசுவரன் தணிந்து பேசினார். "ஐயோ, அப்படி இல்லைம்மா. நான் ஒன்று சொல்லி, அதை அவன் மறுத்தால் நன்றாக இருக்குமா? அதற்காகத்தான், மது மறுக்கக் கூடியதை, நான் அவனிடம் சொல்லாமல் தவிர்க்கிறேன். நம் கௌரவத்தை, நாம்தானே காப்பாற்றிக்கொள்ள வேண்டும்." என்று எடுத்துச் சொன்னார்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டபோதும், "அதில்லைப்பா. நான் சொல்லும்போது, வீட்டுக்குள் இருக்கும் அம்மாவுக்கு என்ன தெரியும் என்று, என் பேச்சைப் பெரிதாக நினைக்க அவனுக்குத் தோன்றாது. அதே சமயம், தொழிலில் கூடவே இருக்கும் நீங்கள் சொன்னால், அவன் கட்டாயம் கேட்பான்." என்று, அதிலேயே நின்றாள் அவள்.

யோசனையோடு மனைவியைப் பார்த்தார் மகேசுவரன். "அதைச் சோதித்துப் பார்க்க, எனக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை, சரளா. இப்போதைக்கு, அவன் தொழிலில் தீவிரமாக இருக்கிறான். முனைந்து வேலை செய்கிறான். அதற்குப் பலனும் இருக்கிறது. நம்மைச் சுற்றியுள்ள அத்தனை பேருடையதுக்கும் மேலாக முதல் இடத்தை, "மது என்டர்ப்ரைசஸ்" அடைந்திருக்கிறது. காரணம், முழுக்க முழுக்க மதுவினது உழைப்புதான். ஒரே நினைப்பாக, அவன் செயல்படுவதுதான். . . ."

"அதற்காக? இன்னும் இன்னும் பணம் சேர்க்கட்டும் என்று, அவனைத் தனி மரமாகவே நிறுத்தி விடுவீர்களா?" என்று ஆத்திரத்துடன் குறுக்கிட்டுக் கேட்டாள் மனைவி.

"என்ன வார்த்தை பேசுகிறாய், சரளா? நீ சொல்லுகிற இந்தப் பேரன் பேத்தி ஆசை எனக்கு மட்டும் இராதா? என்னவோ, இப்போது அவன் மனம் முழுதாகத் தொழிலில் ஈடு பட்டிருக்கிறது. வேறு பேச்சு பிடிக்கவில்லை என்று சொல்லாமல் சொல்லுகிறான். உன்னிடம்

சொன்னாலும், என்னிடம் சொன்னாலும் பதில் ஒன்றுதான். பையன் கருத்து இதுதான் என்றால், அதை எனக்காகவும், அவன் மாற்றிக் கொள்ள மாட்டான். ஆனால், மது முட்டாள் அல்ல. சமயம் வரும்போது, தனக்கு ஒரு வாரிசு பற்றி அவனே முடிவெடுப்பான். அது வரை காத்திருப்போம்." என்றார் மகேசுவரன்.

நாலு ஆண்டுகளுக்கு முன்பாகவே, பிள்ளை முடிவு செய்திருந்தான். பொருத்தமற்ற இணை என்று பிரித்துவிட்டவள் நான்தான் என்று இப்போது கூடக் கணவரிடம் சொல்லத் தைரியம் வரவில்லை சரளாவுக்கு.

கணவர் திட்டக் கூடும் என்பது ஒரு புறம் இருந்தாலும், இன்னமும், சுமனா தன் மகனுக்குப் பொருத்தமான ஜோடி என்றும் அவளால் ஒப்ப முடியவில்லை. இவள் என் மருமகள் என்று பெருமை பேச, இயற்கையான அழகு தவிர , அந்தப் பெண்ணிடம் வேறு என்ன இருக்கிறது?

செயற்கையில் அவளை விடப் பிரமாதமான அழகியாகக் கூடக் காட்டிக்கொள்ள முடிகிற இந்தக் காலத்தில், அந்த இயற்கை அழகுக்கும்தான் ஏது மதிப்பு?

மேலும், இந்த அழகு இயற்கையானது என்பதே யாருக்குத் தெரியப் போகிறது? தமுக்குப் போட்டா சொல்லிக் கொண்டிருக்க முடியும்?

அப்படி அழகாக இருந்தாலுமே, அதற்காக மருமகளாக்குவது மடத்தனம். அவளைப் பற்றி எண்ணிப் பார்ப்பதே, வீண்!

எனவே, "அடுத்த பிறந்த நாளில், மது முப்பதைத் தாண்டி விடுவான் என்று நினைவில்லையா?" என்று மட்டும் கணவரிடம் கேட்டாள் அவள்.

"ஆண்பிள்ளைக்கு முப்பது ஒன்றும் அதிக வயதில்லை." என்றார் மகேசுவரன் அலட்டிக் கொள்ளாமல்.

ஆனால், இதைப் போலவே தொடர்ந்த சில பல நிகழ்ச்சிகளின் பின்னே, பேசாமல், அந்தப் பெண் சுமனாவையே மதுசூதனன் மணக்க விட்டிருக்க வேண்டுமோ என்று, சரளாவுக்கு அடிக்கடித் தோன்றலாயிற்று. கணவனுக்கும் மகனுக்கும் தெரியாமல், சுமனாவைத் தேடிக் கூடப் பார்த்தாள். ஆனால், அவளைப் பற்றிய தகவலே இல்லாது போயிற்று.

இந்தச் சமயத்தில், சென்னையில் மிகப் பெரிய தொழில்

குடும்பத்துத் திருமணம் ஒன்று நடப்பதாக ஏற்பாடுகள் நடந்தன. பல்வேறு தொழில்களில், அவர்களுக்குத் தொடர்பு இருந்தது.

நகரின் மிகப் பெரிய மண்டபத்தில் திருமணம். பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வரவேற்பு என்று திருமண ஏற்பாடுகள் தடபுடல் பட்டன.

உயர் நிலைக்கு வந்துவிட்டதால், மகேசுவரன் குடும்பத்தை, பெண், பிள்ளை இரு தரப்பாரும் வீட்டுக்கு வந்து அழைத்தார்கள். திருமணம் தொடர்பான அத்தனை நிகழ்ச்சிகளுக்கும், கட்டாயம் வரவேண்டும் என்று, குடும்பத்தின் மூன்று அங்கத்தினரையுமே, தனித் தனியே வற்புறுத்தி அழைத்தார்கள்.

“என்னவோ, பையன் தொழில் தொழில் என்று வேறு நினைவே இல்லாமல் கிடக்கிறான் என்று புகார் சொன்னாயேம்மா, இவர்கள் இரு குடும்பங்களிலும், சில ஆண்டுகளுக்கு முன்பும் திருமணங்கள் நடக்கத்தானே செய்தன? இப்படித்தான் வருந்தி வருந்தி அழைத்தார்களா? அவனது உழைப்பின் மகிமை என்ன என்று, இப்போது புரிகிறதா?” என்று கேலியாகக் கேட்டார் மகேசுவரன்.

சற்றுத் திகைத்து, “ஆ . . மாம். நீங்கள் சொல்வது சரிதான்ப்பா. ஆனாலும் . . நான் சொல்வதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்களோ, இல்லையோ, மது மட்டும் குடும்பமாக பிள்ளை குட்டி என்று வாழ்வான் என்றால், இந்த அளவு உயரம் தேவையில்லை என்று கூடச் சொல்லுவேன். ஆனால் . . . சரி, அதை விடுங்கள். இப்போது அவர்கள் அழைத்தது போல, எல்லா நிகழ்ச்சிகளுக்கும் போக வேண்டுமா, இல்லையா? அதைச் சொல்லுங்கள். அதற்குச் சரியாக, நான் லாக்கரில் இருந்து நகை எடுக்க வேண்டும். “ என்று விவரம் வினவினாள் மனைவி.

“முந்திய நாளை விட்டுவிடலாம். அது, குடும்பத்துக்குள் மட்டும் நடக்கிற சடங்கு. திருமணமும் வரவேற்பும் எல்லோரும் கலந்து கொள்கிற விழாக்கள். உறவோடு, தொழில் தொடர்பாகவும் நிறையப் பேர் கலந்துகொள்வார்கள். நமக்கும் இரண்டு குடும்பங்களோடும் தொழில் தொடர்பு இருப்பதால், இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளலாம் என்பது, மதுவின் கருத்து. நீ எப்படி?” என்று, மகேசுவரன் கேட்டார்.

அவரைப் பொறுத்த வரையில், “மகன் கருத்தே மகேசன் கருத்து என்று அவரே கிண்டலாகச் சொல்வது போல, இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளப் போகிறார் என்பது நிச்சயமாகத் தெரிந்தது.

“அடுத்து, நீ எப்போது இப்படி விருந்து போடப் போகிறாய்” என்று

யாரேனும் மூத்த உறவுகள் கேட்பார்களே என்று, சரளாவுக்கு சற்றுத் தயக்கம்தான். ஆனால், மகனுக்கு ஏற்ற பெண் எவளாவது கண்ணில் பட மாட்டாளா என்ற ஆசையில் அவளும் கிளம்பினாள்.

எதிர்பார்த்தபடியே, மேள தாளங்களும், தலைவாழை இலை நிறையப் பதார்த்தங்களோடு கூடிய விருந்துமாகத் திருமணம் மிகவும் கோலாகலமாக நிறைவேறியது.

சரளா எதிர்பாராததாக நடந்தது, மாலை ஹோட்டலில் வரவேற்பின் போது, அங்கே, அவள் சுமனாவைக் காண நேர்ந்தது! அவள் சற்றும் எதிர்பார்த்திராதது, சுமனாவின் நடை, உடை பாவனை அனைத்திலும் இருந்த மாற்றத்தை!

# அத்தியாயம் - 5

நான்கு ஆண்டுகளாக, சுமனாவின் மனதில் ஒரு தீ எரிந்துகொண்டு இருந்தது.

“ஒன்றுமில்லாத ஆசிரமத்துப் பெண் வளைத்துப் பிடித்துவிட்டாய” என்பார்கள்.”

மற்றவர்கள் சொல்வார்கள் என்று மாற்றிச் சொன்னபோதும், அது, மதுசூதனனுடைய  தாய் சரளாவின் சொந்த அபிப்பிராயமே.

ஏதோ சில காரணங்களால், மதுசூதனனை நீ மணப்பது முடியாத காரியம் , ஒதுங்கிப் போய்விடு என்று சொன்னாலே, சுமனா விலகிப் போய்த்தான் இருப்பாள்.

மதுசூதனன், அவளது உயிரினும் மேலானவன் என்றாலுமே, அவன் உனக்கு இல்லை என்று அவனுடைய தாயே சொல்லும்போது, மறுத்து, பெற்றவர்களை எதிர்த்துப் போராடியிருக்க மாட்டாள்.

“எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி” விட்டு, அவளுக்குப் பழக்கம் இல்லை! “கிட்டாதாயின் வெட்டென மற” என்று மிகவும் சிறு வயதிலேயே அவளுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அதனால், மாட்டேன்., முடியாது என்று அவள் ஒன்றும் தகராறு செய்திருக்கவே மாட்டாள்.

மதுசூதனனுடைய தாயார், அந்த அளவில் மட்டுமே நிறுத்தியிருக்கலாம்.

ஆனால், “ஒன்றுமில்லாத ஆசிரமத்துப் பெண் பணத்துக்காக அவனை வளைத்துப் பிடித்து” என்று, அவளிடமே வந்து சொல்வதற்கு, எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்!

அந்தப் பெண்மணியின் வட்டத்தில் எந்தப் பெண்ணிடமாவது, இந்த வார்த்தை சொல்லும் துணிச்சல், அவர்களுக்கு வருமா?

“ஒன்றுமில்லாத ஆசிரமத்துப் பெண்” என்ன செய்துவிடுவாள் என்கிற அலட்சியம்தானே, இப்படிப் பேசும் துணிவைத் தந்தது!

மதுசூதனனை “வளைத்துப் பிடிக்க” அவள் எதுவுமே செய்தது இல்லை என்று, அந்தக் கடவுளுக்குத் தெரியும்.

ஆனால், அப்படியென்று அவளிடமே சொல்லும் தைரியம், திருப்பி அடிப்பதற்கான பின்புலம் அவளுக்கு இல்லாததால்தானே வந்திருக்க

வேண்டும் என்ற சீற்றம். அவளுள் கனன்றுகொண்டே இருந்தது.

ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கானவர்களில் ஒருத்தியாக, மிகவும் சாதாரண நிலையில் இருந்ததால்தானே, இந்த இழப்பும் அவமானமும், இப்போது அவளுக்கு நேர்ந்திருக்கின்றன! இந்த நிலையை மாற்றியே தீர வேண்டும்!

அவளும் பெரிய ஆளாக உயர்ந்தே ஆக வேண்டும் என்ற பிடிவாதம், அவளது மனதில் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போயிற்று.

உடன் பயின்ற கல்லூரித் தோழி பார்க்கவி இருந்த பங்களூருவை அடைந்து, பார்க்கவியைப் பார்க்கும் வரை, அவளுக்குப் பசி தாகம் கூடத் தெரியவில்லை.

இதே நினைவு! இதே தவிப்பு!

சுமனாவின் வேகத்தைப் பார்த்த பார்க்கவிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

கல்லூரியில் எல்லோரும் “காந்தி” என்று அழைத்துக் கேலி செய்கிற அளவுக்கு அமைதியாக இருக்கிறவள், சுமனா. கேலியும் கிண்டலுமாக அவள் பழகக் கூடும் என்பதே, ரொம்பவும் நெருங்கிப் பழகிற மிகச் சில தோழிகளுக்குத்தான் தெரியும்.

படிக்கும்போதே, இறுதி ஆண்டிலேயே திருமணம் செய்துகொண்டு, பங்களூருவில் குடி புகுந்த பார்க்கவி, சுமனா படித்து முடித்த அப்போதே, தான் இருக்கும் இடத்துக்கே வருமாறு, சுமனாவை அழைத்திருந்தாள்.

மேலே படித்து தகுதியை வளர்த்துக் கொள்வதற்கும், அதன் மூலம் பல்வேறு வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும் கணவன் மூலமாகத் தோழிக்கு உதவி செய்ய முடியும் என்று பார்க்கவி நினைத்தாள்.

ஆனால், சுமனாவுக்குத்தான், ஆசிரமத்து மேலாளர் நல்ல மனதோடு ஏற்பாடு செய்திருந்த வேலையை உதறிவிட்டு, எங்கு செல்லவும் விருப்பம் இல்லாதிருந்தது.

நன்றி கெட்டதனமாக, அவளுக்கே எண்ணம். ஆனால், அதற்கும் எல்லை இருந்தது, இப்போது அவளுக்கே தெரிய வந்தது.

முதல் முறையாக உதவி என்று கேட்டு, தோழியின் பதில் வருமுன், சுமனா அங்கே கிளம்பி வந்ததே.

வந்ததும் வராததுமாக, வாழ்க்கையில் உயர்வதற்கு உரிய வழி

பற்றி, சுமனா கேட்டது, பார்க்கவிக்கு இன்னமும் வியப்பூட்டியது.

ஆனால், தோழியின் கண்களில் மேலும் எதையோ படித்து, அவள் கணவனிடம் சொல்ல, அவனும் முன்னேறுவதற்கான வழியைக் காட்டினான்.

ஒரு புறம், சிறப்புக் கல்விப் பயிற்சிகள். அதற்குரிய செலவுப் பணத்திற்காக, இன்னொரு பக்கம் கடுமையான உழைப்பு!

கட்டாயம் உயரத்துக்கு வருவேன் என்று சுமனா உழைத்தாள்.

சின்னச் சின்ன ப்ராஜெக்ட் , பணம் அதிகம் வராது என்பதைக்கூட, எடுத்துச் செய்கிதாள்.

குறைவோ, நிறையவோ, என்ன வந்தாலும், பணம்தானே? கல்விக் கட்டணமும் பணமே அல்லவா? பண உதவி மட்டும் தோழியிடம் வாங்கிக்கொள்ளக் கூடாது என்பதிலும், சுமனா உறுதியாகவே இருந்தாள்.

ஒரு வினாடியைக் கூட வீணாக்காமல் சுமனா உழைத்ததில், அவள் பங்களூரு சென்ற நாலாவது ஆண்டில்,  அவள் பணி புரிந்த அந்தப் பெரிய நிறுவனத்துடைய  நிர்வாக அதிகாரி பதவியே அவளுக்குத் தரப்பட்டது!

பல முக்கியமான நிகழ்ச்சிகளில், நிறுவனச் சார்பாகக் கலந்துகொண்டு, வெற்றிகரமாகத் தொழில் உறவோடு, தொழிலையும் வளர்ப்பவள் என்று, புகழ் பெற்றாள் .

அவள் பணி புரிந்த நிறுவனத்தோடு, பெருமளவு வணிக உறவு கொண்ட ஒரு பணக்காரக் குடும்பத்துத் திருமண விழாவில், பங்களூரு கிளையின் சார்பில் கலந்து கொள்ளுமாறு, தலைமை அலுவலகத்திலிருந்து, அவள்தான் சென்னைக்கு அனுப்பப் பட்டாள்.

பழைய சுமனா என்றால், சென்னை செல்ல வேண்டும் என்றதிலேயே, உள்ளூர மருண்டு, கலங்கிப் போயிருப்பாள். இப்போதோ, அந்தத் திருமணத்தில் மதுசூதனனைச் சந்திக்க நேர்ந்தால், எந்த உணர்ச்சியையும் காட்டிக்கொள்ளாமல், யாரோ போலப் பழகுவது எப்படி என்று மனதில் ஒரு திட்டமே வகுத்து வைத்ததோடு, அவனைப் பற்றிய நினைவையே ஒதுக்கவும் அவளால் முடிந்தது.

மற்ற தொழில் துறைக் கூட்டத்தைப் போல, அவளும் மாலை வரவேற்பில்தான் கலந்துகொண்டாள்.

புது மணமக்களும், இருவருடைய பெற்றோரும் மேடையில்

இருந்து எல்லோரையும் வரவேற்றார்கள்.

பரிசளிக்க மேடைக்கு வந்தவர்களோடு கலந்து பேசியவாறே, அழகான  பெரிய பூங்கொத்து ஒன்றை மணமக்கள் இருவருக்கும் சேர்த்துப் பரிசளித்தாள். மாப்பிள்ளை, பெண் இரு குடும்பங்களும் தொழில் ரீதியாக அறிமுகம் ஆனவர்கள் என்பதால்,  அவர்களிடமும் தனித் தனியே இரண்டு வார்த்தை பேசி, வந்ததைப் பதிவு செய்துவிட்டு, மேடையை விட்டு இறங்கினாள்.

இந்தச் சமயத்தில் மதுசூதனன் அங்கிருந்தால், அனேகமாகத் தன்னைப் பார்த்திருக்கக் கூடும் என்பது, சுமனாவின் ஊகம்.

ஆனால், பொது இடத்தில் வைத்து, ரசாபாசம் செய்கிற தன்மை அவனுக்குக் கிடையாது. எனவே, சத்தமின்றிக் கிளம்பிப் போய்விட்டால், எந்த விதமான பிரச்சினையும் ஏற்படாமலே போய்விடும்.

ஒருவேளை, வேறு யாருடனாவது பேசிக் கொண்டிருந்து, மேடையைத் தனா கவனிக்கவே இல்லை என்றால், இன்னமும் நல்லது! இடைச் சலனம் எதுவும் இல்லாமலே கிளம்பி விடலாம்.

யாரையும், அதிலும் உயரமான எந்த ஓர் உருவத்தையும் நிமிர்ந்தே பாராமல், திருமணக் கூடத்தை விட்டுக் கிட்டத்தட்ட வெளியேறிக் கொண்டிருந்தபோது, “கொஞ்சம் நில்லும்மா, சுமனா.” என்ற பெண் குரலில், அவள் சட்டென உறைந்தாள்.

சரளாவின் குரல் அவளுக்கு மறக்கவில்லை. சொல்லப் போனால், இரவும் பகலும் விழித்திருந்த நேரமேல்லாம் அவளை உந்தி உயர வைத்துக் கொண்டிருப்பதே, அவளது குரல்தானே? மறப்பதற்கு வாய்ப்பும் இல்லை!

சென்னையில் திருமணம் என்றதுமே, சரளாவின் சந்திப்பையும் ஓரளவு எதிர்பார்த்துதான், சுமனா வந்தாள்.

ஆனால், “ஆசிரமத்துப் பெண்”ணிடம் நின்று பேச, ஏன் அறிந்தவள் என்று காட்டிக்கொள்ளவே பிடிக்காமல் அகன்று போய்விடுவாள் என்று நினைத்த சரளா, தன்னை நிறுத்திப் பேச முனைந்ததுதான், அவளுக்கு ஆச்சரியம்.

கூடவே, அது பிடிக்கவுமில்லை.

விரும்பியவனோடு திருமணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் மனம் என்ன பாடு படும் என்று, அவள் எண்ணிப் பார்க்கவே இல்லையே!

தனாவை மறக்க முடியாமல், அவள் என்ன பாடு பட்டாள்! வெளியே காட்டிக் கொள்ளாமல் இருக்கப் பயின்றுவிட்டாளே தவிர, இப்போதும், கவனமற்று இருக்கும் சமயங்களில் அவனது நினைப்பு, அவளை எப்படித் தாக்கி விடுகிறது! முழுக் காரணமும், இந்தப் பெண்மணியின் மறுப்புதானே?

உணர்ச்சி துடைத்த முகத்தோடு மெல்லத் திரும்பி, "வணக்கம், அம்மா." என்று பிசிரற்ற குரலில், சுமனா முகமன் தெரிவித்தாள்.

மறுபடியும் சுமனா கண் காணாமல் போய்விடுவாளோ என்ற பதட்டத்தில், அவள் பின்னோடு வந்து அழைத்தாளே தவிர, உடனடியாக அவளிடம் என்ன பேசுவது, என்று சரளாவுக்குப் புரியவில்லை.

சுமனா பணத்துக்காக வந்து வழிகிற ரகம் அல்ல என்பது, அவளுக்கு முதலிலேயே தெரிந்திருந்த விஷயம்.

அன்று நடந்ததற்காக வருத்தப் பட்டாலோ, கோபமே காட்டினாலோ கூட, சமாதானமாக ஏதாவது பேசி சமாளிக்கலாம்.

ஆனால், யாரோ பார்த்தறியாத அன்னியள் போல சுமனா வணக்கம் தெரிவித்த விதம், அவளைத் திகைக்க வைத்தது.

பழைய எளிமையும் மென்மையும் காணாமல் போய், ஓர் அதிகாரியின் தெளிவும் கம்பீரமும் சுமனாவிடம் வெளிப்பட்டன.

ஆடையில், அலங்காரத்திலும் கூட, மரியாதையை தோற்றுவிக்கும் பாங்கு!

சொல்வது அறியாமல் சரளா நிற்கவும், "எனக்கு நேரமாகிறது. நான் போக வேண்டும்." என்று வெளிப்புறமாக மறுபடியும் சுமனா திரும்பினாள்.

பேசாமலேபோய்விடுவாளோ என்று, சட்டெனச் சின்னவளின் கையைப் பற்றி, "போகாதேம்மா. முதலில் நான் சொல்லுவதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேள், சுமனா! ப்ளீஸ்!" என்று கெஞ்சுதலாகக் கேட்டாள் சரளா.

இறுகப் பற்றியிருந்த கைப்பிடியும், குரலும், நின்று என் பேச்சைக் கேளாமல், உன்னைப் போக விட மாட்டேன் என்று தெளிவாகத் தெரிவித்தன.

முரட்டுத்தனமாகக் கையை உதறி விடுவிக்கும் முயற்சி செய்து, அடுத்தவர் கவனத்தைக் கவர விருப்பமின்றி, "பாருங்கள், என்ன

சொல்வதானாலும் சீக்கிரமாகச் சொல்லி முடியுங்கள். எனக்கு நேரமாகிறது.” என்றாள் தணிந்த குரலில், சுமனா.

எதற்கு நேரமாகிறது?

யாரையும், மகனையும்கூடக் கண்டுகொள்ளாமல் சுமனா ஒதுங்கி ஓடுகிறாள் என்றால், அவள் மனதில் இன்னமும் பாதிப்பு இருப்பது நிச்சயம். இவள் பிரிந்து சென்றது தன்னால்தானே என்று, இப்போது சரளாவுக்கு மிகவும் வருத்தமாக இருந்தபோதும், அதை ஈடு கட்டத்தானே, இப்போது முயற்சிக்கிறோம் என்று எண்ணியபோது, தென்பும் உண்டாயிற்று.

மற்ற அனைத்தையும் விட, மகன் மணம் புரிந்து வாழ்வது, அவளுக்கு மிகவும் முக்கியம். அதற்கு, இப்போது சுமனாவை விட்டுவிடக் கூடாது என்றும் தோன்றிவிட, பிடித்த கையை விடாமலே, “என்னை மன்னித்துவிடு, சுமனா. என் மகன் உன்னைத்தான் மிகவும் நேசிக்கிறான். அதனால், உன்னையே, அவனுக்கு மணமுடித்து வைக்கலாம் என்று, எனக்குமே ரொம்பவும் தோன்றிவிட்டது. அதற்குத் தோதாக, நீயும் இங்கே கண் முன்னே வந்து நிற்கிறாய், பார். அதனால்தான், இது தெரியாமல் நீ போய்விடக் கூடாதே என்றுதான், உன் பின்னோடு ஓடி வந்தேன் “ என்று, மனதில் தோன்றியதை எல்லாம், சரளா சொல்லலானாள்.

பெரியவளாகப் பேசி நிறுத்தும்வரை, சுமனா எதுவும் கூறவில்லை.

சரளாவின் பேச்சு நின்ற பிறகு, தன் கேள்வியைக் கேட்டாள். “அன்றைக்கு உங்கள் மகன் என்னை விரும்பினார் என்று தெரிந்துதானே, என்னை விலகிப் போகச் சொன்னீர்கள். இப்போது என்ன மாற்றம்?”

“அதுவாம்மா? எங்கள் மதுப் பையன் திருமணப் பேச்சையே எடுக்க விடக் காணோம்! எனக்கோ பேரன், பேத்தி என்று மனம் தவிக்கிறது. அதனால் . . .”

“இது சரியான பதிலில்லையே.” என்றாள் சுமனா தெளிவாக.

புரியாமல் சரளா விழிக்கவும், “மதுசூதனனை நான் மணக்கக் கூடாது என்பதற்கு, நீங்கள் அன்று சொன்ன காரணங்கள் இப்போதும் அப்படியே இருக்கின்றன. அன்று போலவே, நான் யாருமற்று, ஆசிரமத்தில் வளர்ந்த அதே அனாதைப் பெண்ணேதான்! ஆனால், இப்போது மட்டும் எங்கள் திருமணம் எப்படிச் சரியாக முடியும்? எனக்குப் புரியவில்லையே!” என்று வினவினாள்.

“அது . . அது வந்து . .”

என்ன சொல்வது என்று அறியாது கைகளைப் பிசைய முயன்றபோது, அவளது  பிடியில் இருந்த சுமனாவின் கை கண்ணில் பட்டது.

பார்லர் பராமரிப்பில் பளீரிட்ட ஓவல் வடிவ நகங்கள். முன்பும், சுமனாவின் கைகள் சுத்தமாக இருந்ததாகத்தான், சரளாவுக்கு ஞாபகம். ஆனால், இப்படி மென்மையும் எழிலுமாக ஒளி வீசவில்லை!

காரணம் புரிந்தபோது, அவளுக்கு எடுத்துச் சொல்லப் பதிலும் கிடைத்தது.

“அது . . இப்போது பெரிய வேலையில் இருக்கிறாயே! என் மருமகள் இவள் . . . என்று நானும், மனைவி நல்ல நிலையில் இருப்பதாக என் மகனும் சொல்ல முடியுமே! அதனாலேயும், உன்னை மருமகளாக ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவு செய்தேன்.”

“அப்படியானால், என் வேலைதான், எனக்குத் தகுதியா? ஏதாவது காரணத்தால், என் வேலை போனால், என்னை உதறிவிடுவீர்கள், புதிதாக என் இடத்துக்கு வரும் இன்னொருத்தியை மகனுக்கு மணமுடிக்கவும் செய்வீர்கள். அப்படித்தானே?”

இது விதண்டாவாதம்தான். அந்த மாதிரி ஏதும் செய்ய மாட்டார்கள், செய்ய முடியாது என்று, சுமனாவுக்கு நன்றாகவே தெரியும். ஆனால், அவள் வலிக்க அடி பட்டவள் ஆயிற்றே! சொல்லாதிருக்க, அவளால் முடியவில்லை.

குறி சரியாகத் தாக்கிவிட, சரளாவின் முகமும் வாடி விட்டது. “என்னம்மா, நீ இப்படிச் சொல்லுகிறாய்? மது உன் மேல்தானே ஆசைப்பட்டான்? அவன் வேறு பெண்ணை எப்படி மணப்பான்? அதனால்தான் . . இப்போது எல்லாம் கூடி வந்திருப்பதால், சந்தோஷமாக உன்னனை மருமகளாக ஏற்றுக் கொள்ளலாம் என்று பார்த்தால் . .”

அந்த வார்த்தைகளில், சுமனா இன்னமும் கொதித்துப் போனாள்.

சந்தோஷமாம்! ஏற்றுக் கொள்வதாம்!

யாருக்கு சந்தோஷம்? யார், யாரை ஏற்பது?

ஆத்திரத்தில் குரல் நடுங்க, “என்னை நீங்கள் என்னவென்று எண்ணிக் கொண்டீர்கள்? நீங்கள் வா என்றால் குடுகுடுவென்று ஓடி வருவதற்கும், போ என்றால் வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடிப்

போகவும், நான் என்ன, உங்கள் வீட்டுக் குச்சு நாயா? இன்றைக்கு, எனக்கு என்று ஒரு நல்ல நிலைமை இருக்கிறது, மேடம்! இன்னும் எவ்வளவோ உயர் நிலைக்குச் சென்று, மிகவும் சிறப்பாக வாழக் கூடிய வளமான எதிர்காலம் இருக்கிறது. அதைக் கெடுத்து , உங்கள் மகனை மணந்து, உங்கள் வீட்டுக் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்ட வேண்டும் என்று எனக்கென்ன கட்டாயம்? தேவையே இல்லை, தெரியுமா?"

சரளா மிரண்டு போனாள்.

இந்தப் பெண்ணை விடுத்து, வேறு ஒருத்தியை, மதுசூதனன் மணக்கப் போவது இல்லை! இந்த நாலு ஆண்டுகளில், அவளுக்கு நன்கு தெளிவாகிவிட்ட உண்மை இது!

ஆனால், பெரிய பதவியில் அமர்ந்து, நிறைய சம்பாதித்து, செல்வமும் செல்வாக்குமாக வாழ்வதே போதும் என்று, அவன் காதலிக்கும் ஒரே பெண்ணான இவள் சொல்கிறாளே!

அவள் செய்த ஒரு பிழையால், உள்ளத்தில் அன்புள்ள இவர்கள் இரண்டு பேரும், தனித் தனியாக வாழப் போகிறார்களா? எப்படி விட முடியும்?

நாலு ஆண்டுகளுக்கு முன்னராக, மணந்துகொள்ள விரும்பியவர்கள். இப்போது அப்படியில்லை என்று சொன்னால் நம்பிவிடலாமா?

அதிலும், இரண்டு பேருமே, வேறு மணம் புரியாமலும் இருக்கிறார்கள்.

இரண்டும் இரண்டும் நாலுதானே?

பற்றியிருந்த கையை அழுத்தி விட்டுவிட்டு, "என்னம்மா, சும்மா மிரட்டுகிறாயே! அன்றைக்கே கல்யாணம் செய்யத் தயாராக இருந்த காதலர்கள். நேரம் வரவில்லை., தட்டிப் போயிற்று. இன்றைக்கும் அந்தக் காதல் அப்படியே இருப்பதால்தானே, நீ வேறே துணை தேடவே இல்லை? எல்லாம் எனக்குத் தெரியும்!" என்று புன்னகை செய்தாள் சரளா.

வெறித்துப் பார்த்துவிட்டு, ஒரு வரண்ட குரலில் சுமனா பேசினாள். "கொஞ்சம் மறந்து பேசுகிறீர்களே. காதலுக்கு உரிய மதிப்பு என்ன என்று, எனக்குக் கற்றுக் கொடுத்ததே நீங்கள்தானே? இனியொரு தடவை, இந்த மாதிரிப் போச்சு என்னிடம் பேசா . . ஏன், நீங்கள் இனி என்னாளுமே என்னிடம் பேசாமலே இருந்துவிட்டால் எல்லோருக்குமே நல்லது! நான் போக வேண்டும் கையை விடுங்கள்" என்றவள்,

அப்போதும்  விடாமல் பற்றியிருந்த கையை விலக்கி விடுவித்துக்கொண்டு, வேகமாக வெளிப்புறமாகச் சென்றாள்.

விழாக் கூடத்திலிருந்து வெளியே செல்ல்லக் கிளம்பியவளை, அடுத்திருந்த அகன்ற வழியின் வாயிலில் நிறுத்தி, ஏதோ பெரிய பாக்கைட்டை உள்ளடக்கிய கல்யாணப் பையைக் கொடுத்தார்கள்.

கூடவே கிளம்பிக் கொண்டிருந்த யாரோ அவளோடு பேசியவாறே போவதும் நின்ற இடத்திலிருந்து, சரளாவுக்குத் தெரிந்தது.

என்ன இயல்பான கம்பீரம்! எழில்! கையில் சும்மாக் கிடைத்த மாணிக்கம்! இவளைப் போய் விட்டுவிட்டாளே!

சுமனா கையை விடுவித்துக்கொண்டு போன விதத்துக்குப் பிறகு, அவளைப் பின்தொடர்ந்து போய் மேலே பேசவும் சரளாவுக்குத் தைரியம் வரவில்லை.

ஆனால் . . .போகிறாளே!

செய்கை அறியாத தவிப்புடன் சரளா கலங்கி நின்றபோது, “என்னம்மா?” என்று மகனின் குரல் அருகில் கேட்டது.

“மது . . “ என்று அவசரமாகத் தொடங்கியவளுக்கு, தொண்டையில் வார்த்தைகள் விக்கின. இவனிடம் என்னவென்று சொல்வது?

# அத்தியாயம் - 6

பெற்ற மகன். அன்பான பிள்ளை. திருமண விஷயத்தில் மட்டும்தான், மதுசூதனன் தாயின் விருப்பத்தை நிறைவேற்றவில்லை. 1

ஆனால், அந்த நிலை ஏற்படவே, இந்தத் தாய்தான் காரணம் என்று அறியும்போது, அவனுக்கு எப்படி இருக்கும்?

கோபம்? ஆத்திரம்? சீற்றம்?

ஆனால், ஓரிரு கணங்களுக்கு மேல், இவையெல்லாம் சரளாவின் மனதில் நிற்கவில்லை!

சுமனா போய்க் கொண்டிருக்கிறாள்! அவளோடு, வாழையடி வாழையாகத் தலைமுறை தலைமுறையாகத் தழைத்து வளரக் கூடிய மகனின் வாழ்வும் போகிறது.

மறுபடியும் அவளை கண் மறைய விட்டுவிட்டால், மகன் தனி மரமாகவே நின்று விடக் கூடும்!

பேசமுடியாமல், வேளியே சென்றுகொண்டிருந்த சுமனாவைக் கையால் காட்டினாள் அவள்.

பார்வை சென்று கொண்டிருந்தவளிடம் பதிய, “அவளைத் தெரிந்திருக்கிறீர்கள் என்று புரிகிறது. என்ன விஷயம்?” என்று கேட்டான் அவன்.

“ததம்பீ, எல்லாவற்றுக்கும் காகாரணம் நான்தான். ஐயோ, அவள் கிளம்புகிறாளே., தடுத்து நிறுத்தேன்.” என்று தவித்தாள் அன்னை.

“ம்.” என்ற சின்னத் தலையசைப்புடன், “நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் உள்ளே, அப்பாவிடம் போங்கள்.” என்றுவிட்டு, ஹோட்டலின் கார்ப் பார்க் நோக்கி விரைந்தான் மதுசூதனன்.

முதலாளியைக் கண்டதும் காரோட்டி ஓடி வந்தான்.

ஒரு பெரிய “ட்ராவல்ஸ்” நிறுவனத்தின் வண்டியில் சுமனா ஏறுவதைக் கவனித்தவாறே, வரும்போதே பாக்கெட்டிலிருந்து எடுத்த இரு நூறு ரூபாய் நோட்டுகளை டிரைவரிடம் நீட்டினான் மதுசூதனன்.

“கார்ச் சாவியைக் கொடு. இந்தப் பணத்தில், ஆட்டோவில் வீட்டுக்குப் போய், வேறு காரை எடுத்துவந்து, அம்மா, அப்பாவை அழைத்துப் போ.” என்றவன் சாவியை வாங்கிப் போய்க் காரை எடுத்தான்.

சென்னையின் போக்குவரத்தின் நெரிசல் காரணமாக, முன்னே கிளம்பிய வண்டி அதிக தூரம் சென்றுவிடவில்லை. விரைவிலேயே சுமனா சென்ற காரைக் கண்டுபிடித்து, அவளைப் பின் தொடர அவனால் முடிந்தது.

நட்சத்திர ஹோட்டல் ஒன்றினுள் கார் புகுவதையும், காரிலிருந்து இறங்கி, சுமனா ஹோட்டலுக்குள் செல்வதையும் கவனித்துவிட்டு, மதுசூதனன் திரும்பிச் சென்றான்.

நாலு ஆண்டுகளுக்கு முன், வசந்த காலக் கனவுகளோடு வாழ்வைத் தொடங்கத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தபோது, "நம் இருவருக்கும் ஒத்து வராது" என்று ஒற்றை வரியில் எழுதியனுப்பிவிட்டு, இருக்குமிடமே தெரியாமல் காணாமல் போனவள்!

செல்லும் வழியிலேயே, தொழில் தொடர்பாகப் பயன்படுத்தும் "உங்களுக்காக"" துப்பறியும் நிறுவனத்தின் அலுவலகம் இருந்தது.

புதிதாக ஒப்பந்தம் போட முன்வரும் அறிமுகமற்றவர்களைப் பற்றி விசாரிப்பதை, இவர்களிடம்தான், "மது என்டர்ப்ரைசஸ்" ஒப்படைப்பது வழக்கம். விரைவாகவும், அதே சமயம் திறமையோடும் செயல் படுவதில் வல்லவர்கள். அதன் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ரகோத்தமன், நல்ல மனிதர். நம்பிக்கையானவர்.

இப்போது, முதல் முறையாகச் சொந்த விஷயத்தில், மதுசூதனன் அவர்களை ஈடுபடுத்துகிறான்.

இதையே முன்பும், சுவடின்றி சுமனா மறைந்தபோதே செய்திருக்க வேண்டுமோ என்று, அவனுக்குத் தோன்றியது.

அப்போதும், ஒரு தரம் அப்படி நினைக்கத்தான் செய்தான்.

ஆனால், அந்தச் சமயத்தில், வேறு மாதிரி எண்ணங்களும் அவனுக்கு ஏற்பட்டன. ஒளிவு மறைவில்லாதபடி, தொழில் விவரங்களை எல்லாம் சொன்னதன் பலனோ என்று தோன்றவே, சுமனாவைத் தேடாமலே, சும்மா இருந்துவிட்டான்.

"ஒத்து வராது" என்று அவள் , அவளது கையெழுத்தே என்பது அவனுக்கு நிச்சயம், எழுதியிருந்தது, அவனது அந்தக் கருத்தையே உறுதி செய்வதாகவும் இருந்தது.

"எல்லாவற்றுக்கும் தானே காரணம்" என்று தாய் சொல்வதைப் பார்த்தால், அப்படிச் சும்மா இருந்ததே பிழையாக இப்போது தோன்றியது.

ஆனால் . . . முதலில் என்ன நடந்தது என்று தெரியவேண்டும்.

வீட்டுக்குச் செல்லும்போது, மதுசூதனனால், வேகமாகப் போக முடியவில்லை.

நடந்தது என்ன என்று தெரிய வேண்டும்தான். ஆனால், பெற்ற தாயிடம் அல்லவா, விளக்கம் கேட்க வேண்டியிருந்தது!

கூடவே, தந்தையின் முன்னிலையில், தாயைக் குற்றவாளி போல விசாரிக்கவும், அவனுக்குப் பிடிக்கவில்லை.. அவருக்கு சுமனா பற்றி ஏதேனும் தெரிந்திருக்குமா என்பதே, அவன் அறியாத விஷயம்.

யோசித்தபடியே அவன் உள்ளே வந்தபோது, அப்போதுதான் வீடு திரும்பியவர்கள் போல, உடை கூட மாற்றாமல், அவனுடைய பெற்றோர் ஹாலிலேயே இருந்தனர்.

மகனைப் பார்த்ததும், அவனிடம் விரைந்தோடிச் சென்று, “சுமனாவைப் பார்த்தாயா, மது? அவளிடம் பேசினாயா? அவள் மறுபடியும் போய்விட மாட்டாளே? போய் விடுவாளோ என்று எனக்குப் பயமாக இருக்கிறதே. என்னய்யா, ஒன்றுமே சொல்லாமல் சும்மாவே நிற்கிறாய்? ஒரு வேளை . . . அவள் . . . “ என்று தவிப்புடன் கேள்விகளை அடுக்கினாள் அன்னை.

“ஷ்ஷ். . . சரளா, நீ பாட்டில் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகிறாயே தவிர, அவனுக்குப் பதில் சொல்ல, எங்கே அவகாசம் கொடுத்தாய்? நீ கொஞ்சம் சும்மா இருந்தால், எல்லாவற்றையும் அவனே சொல்லி விடப் போகிறான்.” என்று மனைவியை வாய் மூட வைத்துவிட்டு, மகன் புறம் திரும்பினார் மகேசுவரன். “ம், சொல்லப்பா.” என்று பணித்தார்.

வரும்போது இருந்த தயக்கம் தீர்ந்துவிட, “சுமனா தங்கியிருக்கும் இடம், பார்த்துவிட்டேன். மற்ற விவரங்கள், ஓரிரு தினங்களில் தெரிந்துவிடும். அதன் பிறகு, அவளிடம் பேசலாம் என்று நினைத்தேன். ஆனால் . . .” என்று நிறுத்தினான் மதுசூதனன்.

இதற்கு மேல், தாயார் விஷயம், அவள்தான் சொல்ல வேண்டும்.

மனைவியைப் பார்த்து, “இப்போது உன் முறை.” என்றார் மகேசுவரன்.

ஒரு சில கணங்கள் இறுகி நின்றபோதும், சரளா எதையும் மறைக்கவில்லை.

“எந்த வித உதவியையும் சுமனா பெற்றுக் கொள்ளவில்லை.

மறுத்து வாதாடவுமில்லை. என் காரணங்களை ஒத்துக்கொண்டு விலகிப் போய்விட்டாள். . . " என்று இழுத்தவாறே மகன் முகத்தைப் பார்த்தவள், அங்கே ஜொலித்த கோபத்தைக் கண்டு கலங்கிப் போனாள்.

"மடத்தனமாகத் தலையிட்டுக் குட்டை குழப்பி விட்டேன். அது எவ்வளவு பெரிய தப்பு என்று, இப்போது தெரிகிறது. நான் வேண்டுமானால், சுமனாவிடம் போய், மன்னிப்புக் கேட்கட்டுமாடா?" என்று மிகவும் தணிந்து, இறங்கிக் கேட்டாள்.

முகம் மாறி, "எதற்கம்மா, நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும்?" என்று கேட்டான் பிள்ளை. "தேவையில்லை!" என்றான் தீர்மானமாக.

"அதில்லையடா. என் வார்த்தைகளால், அன்று சுமனா மனம் எவ்வளவு நொந்ததோ? நீங்கள் திட்டமிட்ட திருமணமும் நின்று, அது வேறு, இருவருக்கும் வேதனை! செய்த தப்புக்கு . . ." என்று வருத்தத்துடன் பெற்றவள் விளக்க முயன்றபோது, மதுசூதனன் குறுக்கிட்டுப் பேசினான்.

"என்ன தப்பு? தப்புமில்லை, ஒன்றுமில்லை. நீங்கள் சரியென்று நினைத்ததை நீங்கள் செய்தீர்கள். அவ்வளவுதானே? இதற்கு, எதற்கு மன்னிப்பு? தேவையே இல்லைம்மா. அத்தோடு, என் அம்மா யாரிடமும் போய் மன்னிப்புக் கேட்க, நான் விட மாட்டேன். அதனால், இந்த எண்ணத்தை அடியோடு விட்டு ஒழியுங்கள். இந்த விஷயத்தையே மறந்துவிட்டு, போய்ப் படுங்கள். இந்த வரவேற்பு வேறு! நீங்கள் இருவரும் தூங்க வேண்டிய நேரம் எப்போதோ தாண்டி, ரொம்பத் தாமதம் ஆகிவிட்டது. அப்பா, அம்மா, இரண்டு பேரும், போய்த் தூங்குங்கள். " என்றான் அழுத்தமான குரலில்.

மகனின் பேச்சும், அதைக் கூறிய விதமும், சரளாவுக்குப் பெருமிதமாகத்தான் இருந்தது.

ஆனால், தாய்க்குத் தேறுதலாக மகன் என்ன சொன்னபோதும், அவளது செயலால் விளைந்தது என்ன? மகனின் இல்லற வாழ்வு பறி போனதுதானே?

நல்ல மகனின் வாழ்வை வீணாக்கிவிட்டோமே என்று, அவளது மனம் மறுகி, மறுகிப் பரதவித்தது!

ஏதோ பேச முயன்றவளின் கையை லேசாக அழுத்தித் தடுத்துவிட்டு, "நீயும் போய்ப் படு, கண்ணா. நாளைக்குத் திங்கள் கிழமை. வரவேற்பில் பார்த்த சில பேர், புது ஒப்பந்தங்கள் பற்றிப் பேசுவதற்காக வரப் போவதாகச் சொன்னர்களே? நீயும் சற்று ஓய்வு

எடுத்தால்தான், நாளைய வேலையை நல்லபடியாகப் பார்க்க முடியும். போம்மா.” என்றார் மகேசுவரன்.

மகன், அவனது அறைக்குள் மறைந்ததும், “அவன் கொஞ்ச நேரம் தனியாக இருந்தால்தான், வேண்டியது, வேண்டாதது பற்றி ஒரு தெளிவு ஏற்படும். அப்புறம் . . “ என்று நிறுத்தி, மனைவியைக் கேள்வியாய் நோக்கினார்.

“நான் செய்தது தப்பு என்று, இப்போது எனக்கே புரிகிறது. ஆனால், அப்போது, மதுவின் தொழிலுக்குத் துணை தேவை என்று மனதில் பட்டது. அத்தோடு, அந்தப் பெண்ணை மது மணந்தால், நமக்குக் கௌரவக் குறைச்சல் என்றும் நினைத்தேன்.

ஆனால், இப்போது தலைமுறையே தட்டுக் கெட்டுவிடும் போல இருக்கிறது! வெறும் வயதுக் கவர்ச்சி., கண் மறைந்தால் போய்விடும் என்று நினைத்தேனே தவிர, இது, இவ்வளவு ஆழம் என்று எண்ணவில்லையே . . “ என்று புலம்பினாள் அவள்.

“நம் பிள்ளையைப் பற்றி நீ அறிந்தது, இவ்வளவுதானா? ராமபிரானைச் சொல்வார்களே, ஒரே பாணம், ஒரே பேச்சு, ஒரே மனைவி என்று? தொழிலில் கூடவே இருந்து பார்க்கிறேனே! சொன்னால் சொன்னபடி நடத்திக் காட்டுவான் என்று பெயர். முதலிலேயே, எவ்வளவு நஷ்டம் வந்தபோதும், வேலையை முடித்துக் கொடுத்து விடவில்லையா? சரி, நடந்ததை ஒன்றும் செய்ய இயலாது. அவன் என்ன செய்கிறான் என்று, நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால், நீயாகக் குட்டை குழப்புகிற வேலை, இனி வேண்டாம். “ என்றார் மகேசுவரன்.

அவரை ஏக்கமாக நோக்கி, “இப்படித் தடுத்து விடுவீர்களோ என்றுதான், அப்போது உங்களிடம் சொல்லாமலே சுமனாவிடம் போனேன். இவ்வளவு பெரிய விஷயத்தில், உங்களைக் கலந்துகொள்ளாமல் முடிவெடுத்ததும், செயல்பட்டதும் தப்புதான் மன்னித்து விடுங்கள்.” என்று கண் கலங்கினாள் சரளா.

“சரி சரி, விடு.” என்று மனைவியின் தோளைத் தட்டிக் கொடுத்தார், கணவர். “பையன் சொல்லவில்லை, யாரிடமும் நீ மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை என்று?

அது, என்னிடமும்தான். வருத்தப் படுவதையும் நிறுத்து. எல்லாம் நல்லபடியாகவே நடக்கும். கடவுள் பார்த்துக் கொள்ளுவார்.” என்று முடித்தார்.

சற்றே ஆறுதலுற்றவளாக, சரளாவும் கடவுளை வேண்டிக் கொண்டாள்.

ஆனால், எல்லோரின் வேண்டுதல்களுக்கும் செவி சாய்த்துக் கொண்டிருந்தால், “நன்மையும் தீமையும் பிறர் தர வாரா”, “இட்டார்க்கு இட்ட பலன்” என்பன எல்லாம் பொருள் இல்லாமல் போய்விடாவா?

ஒன்று செய்தால், அதன் பலனை அனுபவித்துத்தானே, ஆக வேண்டும்?

எல்லோருமே அனுபவிக்கவும் நேர்ந்தது!

மதுசூதனனை விட்டு விலகிப் போனாளே தவிர, சுமனா ஒன்றும் ஒளிவு மறைவாக வாழ்க்கை நடத்தவில்லை. எனவே, அவளைப் பற்றி அறிவது, “உங்களுக்காக” ரகோத்தமனுக்குச் சிரமமாகவும் இருக்கவில்லை.

அவள் தங்கியிருந்த ஹோட்டலிலேயே, அவள் யார், என்ன ஊர், பணி புரியும் நிறுவனம் போன்ற அப்போதைய வெளி விவரங்கள், உடனேயே கிட்டிவிட்டன.

பங்களூருவில் உள்ள துணை நிறுவனத்தின் மூலம், இங்கே கிடைத்த தகவல்களைச் சரி பார்த்துவிட்டு, பங்களூருவுக்கு ஆளை நேரில் அனுப்பினார்.

எப்போது அந்த ஊருக்குச் சென்றாள், யாரோடு பழக்கம், இருப்பிடம், பழக்க பழக்கங்கள் போன்ற விவரங்களும் இலகுவாகவே அறியப்பட்டன.

அறியப்பட்ட விவரங்களும், “கண் சிமிட்டும் நேரத்தில்” என்று சொல்லத் தக்க விதமாக, உடனேயே, மதுசூதனனின் “லாப்டாப்”புக்கு அனுப்பப் பட்டன.

சற்று யோசித்துவிட்டு, மதுசூதனன், தந்தையிடம் சென்றான்.

இரு தினங்களாக, சுமனாவுக்குச் சரியாக வேலை ஓடவில்லை. அடுத்து என்ன, என்ன என்று இருக்கும் வழக்கமான, வேகம், பரபரப்பு ஏனோ வரவில்லை.

எல்லாம் போரடித்தது. உலகமே மந்தமாகி விட்ட மாதிரி ஒரு தோற்றம்.

இந்தக் கிளையில் இப்படி., அந்தக் கிளையில் ஆளில்லை.., இந்த விவரம் உடனே அனுப்ப வேண்டும் . . . திரும்பத் திரும்ப, இதையே எத்தனை தரம் பார்ப்பது?

வெறுப்புடன் தலையைத் தாங்கி அமர்ந்திருந்த உணவு இடைவெளியில்தான், அவளுக்குக் காரணம் புரிந்தது.

புரிவது என்ன? சுய கௌரவம் பாராட்டிக்கொண்டு, தனக்குத்தானே அப்படி எதுவும் இல்லை., பயண அலுப்பு, சரியாகச் சாப்பிடாதது என்று பல்வேறு காரணங்களைக் எடுத்துச் சொல்லி அலுத்துப் போன மனது, இப்போதுதான் உண்மைக் காரணத்தை ஒப்புக் கொண்டிருக்கிறது.

அது . . . அவளது மந்த கதியின் காரணம் சென்னையில் இருந்தது.

மதுசூதனனுடைய தாயைச் சந்தித்திருக்கிறாள். ஆனால், அவனை, அவள் கண்ணால் பார்க்கக் கூட இல்லை!

பார்க்கக்கூடாது என்பதற்காகவே, பார்வையை உயர்த்தாமல் சுற்றுமுற்றும் பாராமல் நடந்தது, தாமதமாகச் சென்று சீக்கிரமாகத் திரும்பியது எதுவும் இப்போது மனதில் நிற்கவில்லை.

சென்னை வரை சென்றும், மதுசூதனனைக் கண்ணால் கூடக் காணவில்லையே! அவனைப் பார்க்கவே இல்லையே என்று நெருஞ்சி போல ஒன்று, உள்ளே குத்திக்கொண்டே இருந்தது.

அதை, அவளால் நிறுத்த முடியவில்லை!

அவளும் மதுசூதனனும் திட்டமிட்டபடி எல்லாம் நடந்திருந்தால், இப்படியா, தன்னந்தனியாக, பங்களூருவிலிருந்து போய்விட்டுத் தனியாக ஓடி வந்திருப்பாள்?

தனாவுடைய மனைவியாக, உரிமைக்காரியாக அவனோடு சென்றிருப்பாளே! இப்படித் தனியாகக் கிடந்து தவிக்க நேருமா?

சரளாவைப் பார்க்காமல் இருந்திருந்தாலாவது . . . அந்த அம்மா, அவளை மருமகளாக ஏற்பது பற்றிக் கூறாமல் இருந்திருந்தாலேனும், மனது இவ்வளவு சோர்ந்து போயிருக்காது!

இன்னமும், சுமனாவை அவளுக்காக மருமகளாக்கிக் கொள்ளும் எண்ணம் அவர்களுக்கு இல்லையே!

அவள், அந்த வீட்டு மருமகள் ஆகாதது விதி, அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், தனாவும் அல்லவா, தனியனாகவே இருக்கிறான்!

ஆனால், அவளால் எப்படி இன்னொரு மனிதனோடு தன்னைக் கற்பனை கூடச் சொய்ய முடியாதோ, அதைப் போலவேதானே, அவனுக்கும் இருக்கும்?

அவனுடைய தாயார் விலகிப் போய்விடும்படி சொன்ன போதே, இந்த எண்ணம், அவளுக்கு வரத்தான் செய்தது.

ஒருவேளை, தாயின் சொல், அவனுக்கு இன்னும் முக்கியமோ, தாய்க்குப் பணிந்து மணந்து கொள்வானோ என்று, அப்போது எண்ணிக் கொண்டாள். ஆனால், அப்படியில்லை என்று அறியும்போதும், அவளால் பெரிதாக ஆறுதல் அடைய முடியவில்லை.

மதுசூதனனின் சிறப்புகளை எல்லாம் கொண்ட ஒரு குட்டிப் பையன் பிறக்காமலே போய் விடுவானே என்று, கண்ணீர்தான் வந்தது!

ஆண்மை மிக்க அவனது கம்பீரத் தோற்றம், செதுக்கினாற் போல முக அமைப்பு, விழி உயர்த்திப் பார்க்க நேரும் உயரம், சாது போலப் பேசிக்கொண்டு கண்ணால் சிரிப்பது . . .

தன்னை அடக்கிக் கொள்ள முடியாமல், ஓய்வறைக்குப் போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வந்தாள்.

ஒழுங்காக வேலை செய்வது இயலாது என்று தோன்றிவிட, அரை நாள் விடுப்பு எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

தங்கியிருக்கும் ஃப்ளாட்டின் தனிமை இன்னமும் மருட்டியது. வழியிலேயே இறங்கிக்கொண்டு, அலுவலகக் காரைத் திருப்பி அனுப்பினாள்.

கால் போன போக்கில் உடம்பு அலுக்க நடந்தாள்.

பழைய “ட்ரிக்”தான். பங்களூருவுக்கு வந்த புதிதில், மன உளைச்சல் அதிகமாக இருக்கும்போது, இப்படித்தான் செய்வாள். களைத்துப் போன உடல், தானாகத் தூங்கிவிடும்.

மாலையானதும், ஒரு பூங்காவில் அமர்ந்து, போவோர் வருவோரை, முக்கியமாகச் சிறு பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இருள் பரவத் தொடங்கியதும், உணவகம் ஒன்றில் எதையோ வாங்கிக் கொண்டு, வீடு திரும்பினாள்.

உடம்பு கழுவி, உடை மாற்றி வந்தபோது, அழைப்பு மணி ஒலித்தது.

பாதுகாப்புச் சங்கிலியை மாட்டிக்கொண்டு லேசாகத் திறந்து பார்த்தால், வெளியே நின்றவன் மதுசூதனன்.

அவளது இருப்பிடம் அறிந்து, அவன் வந்தது, பெரிய விஷயமாக, சுமனாவுக்குத் தோன்றவில்லை. அது, அவன் முன்பும் செய்ததுதான்.

அவன் தாயிடம், சுமனா சொன்ன பதிலுக்குப் பிறகும், ஏன் வந்தான்?

“உன்னிடம் எனக்கு ஒரு விவரம் தெரிய வேண்டும். அதைத் தெரிந்துகொண்டு, உடனே போய் விடுவேன். கதவைத் திற.” என்றான் அவன்.

# அத்தியாயம் - 7

என்ன விவரம் தெரிய வேண்டும்? எல்லாமேதான், அவனுடைய தாயார் சொல்லியிருப்பளே என்று எண்ணியபோதும், ஒன்றும் பேசாமல், சுமனா கதவைத் திறந்தாள்.

உள்ளே வந்தவன் சுற்றிலும் ஒரு தரம் பார்த்துவிட்டு, "பரவாயில்லை. இருப்பிடம் சிறப்பாகத்தான் இருக்கிறது." என்றான்.

குற்றம் சாட்டுகிறானா?

"நான் வகிக்கும் பதவிக்கான, அலுவலக வீடு." என்றாள் அவள்.

ஒரு சிறு அமைதியின் பின், "உட்காருங்கள்." என்றுவிட்டு உள்ளே போனாள்.

திடப்படுத்திக்கொள்ளத் தேவைப்பட்ட சில நிமிஷங்களுக்குப் பின், இரண்டு கப்புகளில் "இன்ஸ்டன்ட்" காஃபியோடு முன்னறைக்குச் சென்றாள்.

டீபாயில் அவன் முன்னே வைத்து, "எடுத்துக் கொள்ளுங்கள்." என்றாள்.

அவனுக்குமே தொண்டை காய்ந்திருந்ததோ, என்னவோ? மறுக்காமல் ஒன்றை எடுத்து அருந்த, அவளும் ஒரு கப்பை எடுத்துக் கொண்டாள்.

எந்த விதப் பேச்சும் இல்லாமல், இருவருமாக அமர்ந்து, காஃபியை அருந்திய அந்தச் சில நிமிஷங்கள், ஏனோ விலை மதிக்க முடியாதன போல, சுமனாவுக்குத் தோன்றியது. ஆண்டுக் கணக்கில், இப்படி நடப்பது போல ஒரு பிரமை! அதிலிருந்து விடுபட மனமற்றவள் போல, பானத்தை மெதுவாகவே குடித்தாள்.

ஆனால், என்ன மெதுவாகக் குடித்தாலும், கப்பில் இருக்கும் காஃபி முடிந்துவிடும்தானே? காலிக் கப்பை மனமற்று, மேஜையில் வைத்தாள் அவள்.

அதற்காகவே காத்திருந்தவன் போல, மதுசூதனன் பேச்சைத் தொடங்கினான்.

"நாலு ஆண்டுகளுக்கு முன், நம் இருவருக்கும் ஒத்து வராது என்று ஒற்றை வரியில் எழுதிவிட்டு, நீ கண் காணாமல் போனாய். ஏன் அப்படிச் செய்தாய்?" என்று ஒரு நிதானத்துடன் வினவினான்.

சற்றுப் புரியாமல் பார்த்துவிட்டு, "உங்கள் அம்மா

சொல்லவில்லை?” என்று பதில் கேள்வி கேட்டாள், சுமனா.

“கடிதம் எழுதியது நீ. காணாமல் போனவளும் நீயே. எழுதப்பட்டது எனக்கு. இதில், அம்மா எங்கிருந்து வந்தார்கள்?”

கட்டுப்படுத்தப்பட்ட ஆத்திரம், அவனது குரலில் நன்றாகவே தெரிந்தது.

ஆனால், அவனுடைய தாயார்தானே, அவர்களது பிரிவுக்கே மூல காரணம்?

“பாருங்கள், தனா. அன்று உங்கள் அம்மா நான் தங்கியிருந்த விடுதிக்கு வந்து என்னைப் பார்த்தார்கள். நம் திருமணம் ஏன் சரிவராது என்று, அவர்கள் சில காரணங்கள் சொன்னார்கள். குடும்பத்துக்கே தலை குனிவு, இழப்பு . . . உங்களுக்குக் கஷ்டம் . . . அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றும் தெரிந்தது. அவர்கள்தான் அப்படி எழுதும்படியும் சொன்னார்கள். நீங்கள் வேண்டுமானால், ஆன்ட்டியிடமே கேட்டுப் பாருங்கள்.” என்று விளக்கம் கொடுத்தாள் சுமனா.

ஆனால் இந்த விளக்கத்தை ஒப்பாதவன் போல, “இதோ பார்., காதலித்தது, நாம். கல்யாணம் செய்ய முடிவு செய்ததும் நாம் இருவருமே. அதை நீ உடைத்துவிட்டுப் போனதில், என் அம்மா எப்படிப் பழியேற்க முடியும்?” என்று, முன்னைப் போலவே கேட்டான் மதுசூதனன்.

என்ன இவன்? “இதுதான் அந்தப் பழம்” காமெடி மாதிரி, சொன்னதையே சொல்லுகிறானே என்று நினைத்தான் சுமனா. தாய் மீது தப்பு வந்துவிடக் கூடாது என்று எண்ணுகிறானா?

யோசித்து, “பழி என்று இல்லை, தனா. நம் திருமணம் எப்படித் தோற்றுவிடும் என்று சில பல காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். அத்தோடு, அவர்களது சம்மதமும் கிடைக்காது என்று தெரிந்ததால்தான், நான் விலகிப் போனேன்.” என்றாள அவள் மேலும் விளக்கமாக.

அப்போதும், “என் அம்மாவின் சம்மதம், எனக்கும் அவர்களுக்கும் இடையே உள்ள விஷயம். அதில், உனக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது? உனக்குச் சம்பந்தமற்ற ஒன்றை, எப்படிக் காரணம் சொல்கிறாய்? “ என்றே கேள்வி கேட்டான் அவன்.

“சம்பந்தம் இல்லாதது என்று எப்படிச் சொல்லுகிறீர்கள், தனா? உங்கள் நன்மை எனக்கு முக்கியம். உங்கள் அம்மாவும் அதையே பெரிதாகக் கருதிப் பேசும்போது, அதை எப்படி அலட்சியம் செய்ய முடியும்?” என்று வாதாடினாள் சுமனா.

“அப்படியானால், என் நன்மை, தீமை பற்றி எனக்குத் தெரியாது என்றா எண்ணினாய்? வருங்காலம் பற்றிய யோசனையே இல்லாமலா நாம் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தோம்? “ என்று மடக்கினான் மதுசூதனன்.

பேச்சு போகும் திசை, சுமனாவுக்குப் புரிந்தது. அவனைப் பெற்றவளின் பேச்சையே என்றாலும், அதைக் கேட்டு, அவனைப் பிரிந்தது தப்பு என்று, கொண்டு வருகிறான்.

தப்பு என்று ஒத்துக்கொண்டு, அதற்காக மன்னிப்புக் கேட்டு, அவன் காலில் விழுந்து, அவள் கதற வேண்டும் என்று எதிர்பார்க்கிறானா?

மன்னித்து . . ? மேலே என்ன?

ஆனால், அவனது ஒவ்வொரு வார்த்தையிலும், சின்னச் சின்ன அசைவுகளிலும்,

கண் இடுக்கத்திலும், சட்டென்று எடுத்து விடும் வேக மூச்சிலும் கூட, வெளிப்படும் ஆத்திரம்? சீற்றம்?

வேறு ஏதோ முடிவு செய்துகொண்டு மதுசூதனன் வாதம் புரிகிறான் என்கிற அளவுக்கு, சுமனாவுக்குப் புரிந்தது.

ஆனால், அது என்ன என்று, அவளால் கண்டுகொள்ள முடியவில்லை! அது, அவளுக்குச் சாதகமானது இல்லை என்பது மட்டும் நிச்சயம்!

ஆனால், எப்படியும் நன்மை தீமை பற்றித் தாயை விடத் தனக்குத் தெரியும் என்று அவன் பேசியதை ஒத்துக் கொள்ள முடியாமல், “உங்களை இருபத்தாறு

வருஷம் வளர்த்த அம்மா சொல்லும்போது, அதை ஒத்துக் கொள்ளாமல் இருப்பது எப்படி, தனா?” என்றாள் அவள்.

கண் வழியே, அவளது இதயத்தையே துளைத்துவிடும் கூர்ப் பார்வையோடு, “நீ அம்மாவையா நேசித்தாய்? என்னைத்தானே? அல்லது, ஒருவேளை என் அம்மாவை, என் அம்மாவின் பேச்சை நம்பித்தான் என்னை மணப்பதாக இருந்தாயா?” என்று கேட்டான் மதுசூதனன்.

என்னவோ, வேறு யார் பேச்சையோ கேட்டு, அவனைத் தூக்கி எறிந்துவிட்ட மாதிரிப் பேசுகிறானே! அவனைப் பெற்றவள்!

தன்னை நியாயப்படுத்திவிடும் வேகம் அவளுக்கு. “அவர்கள்,

உங்களைப் பெற்றவர்கள், தனா. நான் அவர்கள் பேச்சை மதிக்காமல் எப்படி இருக்க முடியும்?” என்று பதில் கேள்வி கேட்டாள் அவள்.

எதிர்பார்த்த பதில் கிடைத்தது போல, முகம் அருவருப்பும் இளக்காரமும் காட்ட, “கரெக்ட்!” என்றான் அவன். “கடைசியாக உண்மையைச் சொன்னாய்! “

என்னவோ பெரிய தப்பு என்று உணர்ந்து, “தனா, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?” என்று அவனிடமே கேட்டாள்.

“என்னவா?” எழுந்து நின்று, அவ்வளவு உயரத்திலிருந்து, கீழ்க் கண்ணால், அவளை ஏளனமாகப் பார்த்தான் மதுசூதனன். “உன்னைக் கடைசியாகச் சரியாகப் புரிந்து கொண்டேன், என்கிறேன்! நான் உன்னிடம் வைத்த அளவு, நீ என்னிடம் அன்பு வைக்கவில்லை என்று, தெள்ளத் தெளிவாகத் தெரிந்துகொண்டேன் என்கிறேன்.” என்றான் அவன்.

அண்ணாந்து பார்த்துப் பேசுவதே, நிலையிறக்கமாகத் தோன்ற, சுமனாவும் எழுந்தாள். “என்ன உ . .இது என்ன பேச்சு, தனா? உங்கள் மேல் அன்பு இல்லாமலா, உங்கள் நன்மைக்காக, உங்களைப் பிரிந்து வருவேன்? “ என்று சற்றுத் தணிந்த குரலிலேயே கேட்டாள்.

ஆனால், “அந்தக் கதையை இன்னொரு தரம் சொல்லாதே!” என்று சீறினான். “அன்பாம், அன்பு! அத்தனை செல்லச் சுருக்கங்களைச் சொன்னவள், “தனா” என்று அழைத்தபோதே, எனக்குப் புரிந்திருக்க வேண்டும். என்னை மணந்து, பணக்காரி ஆகலாம் என்று எண்ணியிருப்பாய். அம்மா எதிர்த்ததுமே, சொத்துபத்து வராதோ என்று உன் அன்பு அடியோடு மறைந்துவிட்டது. கூடவே, தொழிற்சாலை நிலைமை வேறு சரியாக இல்லாததும் சேர்ந்திருக்கும். அப்போது நஷ்டமல்லவா பட்டிருந்தேன்! மூழ்குகிற கப்பல் எலியாய், விழுந்தடித்து ஓடி விட்டாய்!” என்றான் அவன் வெறுப்புடன் நோக்கி.

மூழ்குகிற கப்பலை விட்டு ஓடுகிற எலி!

திகைத்துப் போனாள் சுமனா! அவனைப் பெற்ற அன்னையின் சொல் கேட்டு, அவள் செய்த தியாகத்துக்கு, இப்படி ஒரு பட்டம் கிடைக்கும் என்று, அவள் எட்டாத கனவில் கூட எண்ணவில்லையே1

அவனைப் பிரிந்து வந்து, அப்போது எவ்வளவு கஷ்டப்பட்டாள்! இப்போதும், இந்த இரண்டு நாட்ளாக அவள் அனுபவிக்கும் துன்பம்! அவளுக்கு அன்பே இல்லை என்று எவ்வளவு சாதாரணமாகச் சொல்லிவிட்டான்!

“அநியாயமாகப் பேசாதீர்கள் தனா. என்னுடையது, உண்மையான அன்பு!” என்றாள் கொதிப்புடன்.

அவன், அவளுக்கு மேல் சீறினான். “ஹூம், உண்மையான அன்பாவது, மண்ணாங்கட்டியாவது? அந்த வார்த்தை சொல்ல, உனக்கு அருகதையே கிடையாதே!” என்றவன், அவள் ஏதோ பேச முற்படவும், அதற்கு இடம் கொடுக்காமல், இன்னமும் அழுத்தத்துடன் தொடர்ந்தான்.

“ஆமாம். உனக்கு அருகதை கிடையாதுதான்! மெய்யாகவே உனக்கு என்மேல் அன்பு இருந்திருந்தால், அவ்வளவு எளிதாக, என்னை விட்டுப் பிரிய, உன்னால் முடிந்திருக்குமா? அந்த அன்பு வெற்றி பெறப் போராடியிருக்க மாட்டாய்? அப்படி என்ன, போராடத் தெரியாதவளா? வாழ்க்கையில் இந்த நிலையை அடைய எப்படிப் போராயிருக்கிறாய்! எவ்வளவு உழைத்திருக்கிறாய்! ஆனால், எனக்காக, நீ ஒரு விரலைக்கூட அசைக்கவில்லையே! காரணம், முன்பு நீ அன்பாக இருந்தது, வெறும் நடிப்பு! நாடகம்! ஒன்று தெரியுமா? உன்னை விட, என் அம்மா பார்த்த பெண்கள் எல்லோரும், எல் . . லாருமே ஒரு வகையில் சிறந்தவர்களே. அவர்கள் யாருமே, எங்கள் பணத்துக்காக, தொழிலுக்காக என்னை மணப்பதை மறைத்ததில்லை. ஆனால், பணத்தைப் பெரிதாக நினைக்காதவள் என்று நான் எண்ணிய நீயோ, அது வராதோ என்று தோன்றியதுமே, பச்சோந்தி போல, அடியோடு நிறம் மாறிவிட்டாய். பணமற்ற நான், உனக்கு ஒத்து வராதவன் ஆகி விட்டேன்! சுட்ட சட்டியாய், அன்பு, காதல் எல்லாவற்றையும், கூடவே என்னையும் தூக்கிப் போட்டுவிட்டு, ஆளே மறைந்துவிட்டாய்!

“பாவம்! இந்த உண்மை தெரியாமல், அம்மா என்னை மணக்கும்படி, அன்று வரவேற்பின்போது உன்னிடம் கேட்டார்களாமே! ஆனால், இப்போது சொல்கிறேன், கேட்டுக்கொள். இனி, நீயாக என்னை வேண்டி வந்தாலும், உன்னை ஒருபோதும், நான் மணப்பதாக இல்லை! பேசாமலே இருந்தால் நல்லது என்று அம்மாவிடம் நீ சொன்னது மட்டும், அன்று என் காதில் விழுந்தது. அதற்கும் மேலாக, நாம் கண்ணால் பார்ப்பது கூட வேண்டாம் என்பது என் இறுதி முடிவு! அன்று நீ செய்தது போல, உன் வாழ்வை விட்டு, நான் அடியோடு போய் விடுகிறேன். எட்ட முடியாத தூரம்! நேரே சென்னைக்குச் சென்று என் அம்மா காட்டும் பெண் எவள் என்றாலும், அவள் கழுத்தில் தாலியைக் கட்டப் போகிறேன். நன்றாகத்தான் வாழ்வேன். உன்னையே நினைத்து தேவதாசாகக் குடித்து  உயிரை விட்டுவிட மாட்டேன். இது நம் இறுதிச் சந்திப்பு. “ என்று நெருப்பு மழையாகப் பொரிந்து கொட்டியவன், அந்தச்

சூட்டில் அவள் திக்கு முக்காடித் திணறி நிற்பதைத் திரும்பியும் பாராமல், அங்கிருந்து வெளியேறிப் போய்விட்டான்.

மதுசூதனன் கிளம்பிச் சென்ற பிறகு, சுமனா ஒரேயடியாகக் குழம்பிப் போனாள்.

அவளை இவ்வளவு தப்பாக, இவ்வளவு மோசமான பேராசைக்காரியாக, ஒருவர் நினைக்க முடியும் என்பதை, அவளால் நம்பக் கூட முடியவில்லை.

அதுவும் மதுசூதனன்!

அவள் மனதை முழுதாக அறிந்தவன். வாழும் காலம் முழுவதையும் அவளோடு கழிக்க முடிவு செய்து, அவளை மணம் புரியவும் விரும்பியவன்.

சுமனா, தனா என்றால் இன்னிசை போலக் கேட்க இனிமையாக இருக்கிறது என்று அவளது “தனா” அழைப்பை மகிழ்ச்சியோடு ஒத்துக் கொண்டவன், இப்போது என்ன வார்த்தை சொல்லிவிட்டான்!

செல்லுமிடம் தெரிந்தால், பின்தொடர்ந்து வந்து, மணந்து கொள்ளச் சொல்லி வற்புறுத்துவானே, அவனிடம் மறுக்க முடியாமல் போனால், அவனுடைய அன்னை சொன்ன அத்தனை இழப்புகளுக்கும் அவன் ஆளாக நேரிடுமே என்று அஞ்சியல்லவா, அது பற்றி அவனிடம் சொல்லாமலே கிளம்பினாள்!

ஆனால், அதிலே ஏதும் தப்பு[ப் பண்ணி விட்டாளா?

அவன் சொன்னது போல, அங்கேயே இருந்து போராடியிருக்க வேண்டுமோ?

ஆனால், என்னவென்று போராடுவது?

அப்போது, சுமனாவின் ஊதியம் வெறும் மூன்று ஆயிரம் ரூபாய்கள். இன்னும் அதிக நேரம் வேலை செய்தால், கூடுதலாக ஓர் ஆயிரம் ஈட்டக் கூடும் . இதை வைத்து, மதுசூதனனின் சில கோடி ரூபாய் இழப்பை எப்படி, எப்போது ஈடுகட்டுவது?

நாலு ஆண்டுகளுக்குப் பிறகு, பார்க்கவியுடைய கணவனின் பல் வேறு உதவிகள் வழி காட்டுதல்களின் பின், கிட்டத்தட்ட ஆறு இலக்கத்தைத் தொடும் இந்தச் சம்பளம் வருகிறது.

மதுசூதனன் அன்று அடைந்திருந்த கோடிகளின் இழப்புக்கு, இன்றைய இந்த வருமானமும்கூடப் பயன்படாதே! வட்டி கட்டத் தாங்குமா? இல்லையே!

ஆனால் . . .

ஒன்று தோன்றவும், சுமனா திடுக்கிட்டு நிமிர்ந்து அமர்ந்தாள்.

அவன் தாயார் சொன்னது போல, மதுசூதனன் எந்தப் பணக்காரப் பெண்ணையும் மணக்கவில்லை. அப்படியானால், மனைவி குடும்பத்துப் பணத்தையோ, செல்வாக்கையோ, அவன் நிச்சயமாகப் பயன்படுத்தவே இல்லை.

ஆனாலும், நகரின் முக்கியப் பணக்காரர்களில் ஒருவனாக இருக்கிறானே!

இங்கே சுமனா எப்படிப் போராடி, அவளது நிலையை உயர்த்திக் கொண்டாளோ, அதே போல, அவனும் உழைத்து உயர்ந்திருக்கிறான்!

அவள் தனி ஆளாக ஆயிரங்களைப் பல மடங்கு பெருக்கிக் கொண்டால், அவன் தொழில் மூலம் கோடி கோடியாகச் செல்வ நிலையை உயர்த்தியிருக்கிறான்.

இதில், சரளாவைக் குற்றம் சொல்லவும் சுமனாவுக்குப் பிடிக்கவில்லை.

தான் உண்மை என்று நினைத்ததையே, ஒரு பணக்காரப் பெண்ணின் வருகைதான், மகன் மூழ்கி விடாமல் காப்பாற்றும் என்று அவள் நிச்சயமாக நம்பியே, சுமனாவிடம் அப்படிச் சொல்லியிருக்கலாம்.

ஆழ் கடலில் விழுந்தவன் மூழ்கிப் போவதும் உண்டு., இரண்டொரு முறை மூச்சு முட்டி, உப்புத் தண்ணீரைக் குடித்துவிட்டாலும், கையைக் காலை அடித்து, உதைத்து, நீரை விலக்கி, மேலே வந்து, எப்படியோ கரை சேர்வதும் நடப்பதுதான்.

அது போல, மகனும் மீண்டு வருவான் என்று, அவள் எதிர்பார்க்கவில்லை போல. மீளாமல் போய் விடுவானோ என்று, அந்தத் தாய் மனம் அஞ்சியிருக்கலாம்!

இப்போது கூட, மதுசூதனன் மீண்டு, உயர்ந்தும் விட்ட பிறகு, இன்னும் பெரிய பெரிய கோடீசுவரர்களே பெண் கொடுக்க முன் வரலாம். நிச்சயமாய் வந்திருப்பார்கள்!

ஆனால், மகனுக்கு விருப்பம் இல்லை என்பதாலேயே, அவர்களை ஒதுக்கி, சுமனாவிடமே வந்து, மகனை மணக்கும்படி கேட்கவில்லையா?

மதுசூதனன் ஏன், தாயிடம் குற்றம் காணவில்லை என்பது, இப்போது சுமனாவுக்குப் புரிந்தது.

ஆனால், சுமனா? இந்தப் பிரச்சினையில், அவளை ஒரேயடியாகத்

தப்பாகச் சித்தரித்துவிட்டானே!

மதுசூதனன் சொன்ன பணத்தாசையால், அவள், அவனைப் பிரிந்து வரவில்லை என்பது உண்மையே என்றாலும், அப்படி விலகிப் போனது தவறோ என்று, இப்போது அவளுக்கே தோன்றிவிட்டதே!

அவன் சொன்னது போல, அவள் எதிர்த்துப் போராடவே இல்லாமல் கிளம்பி விட்டாளே!

ஏன் அப்படிச் செய்தாள்? எதற்காக?

இயன்றவரை நினைக்காமல் ஒதுக்கி வைத்த அன்றையத் தினத்தை, மறுபடியும் சுமனா மனதில் ஓட்டிப் பார்த்தாள்.

தனாவுடைய தாயாருக்கு, இந்தத் திருமணம் பிடிக்கவில்லை என்று உணர்ந்த தருணம் நினைவு வந்தது.

அடுத்து, ஆசிரமத்து ஞாபகம் . . .

தெரிந்துவிட்டது! குடும்பத் தலைவி இல்லை என்று மறுப்பது தெரிந்ததும், அதை உடனே ஒத்துக்கொண்டு ஏன் கிளம்பினாள் என்று, சுமனா கண்டுபிடித்துவிட்டாள்.

இதை அவனிடம் சொல்ல வேண்டுமே! எடுத்துச் சொல்லி, மதுசூதனனுக்குப் புரிய வைக்க வேண்டுமே!

உடனே! உடனே! காலம் தாழ்த்தாமல், உடனே செய்ய வேண்டும்.

அவளைப் பற்றித் தவறாக எண்ணிக்கொண்டு அவன் இருக்கவே கூடாது!

தனா சொல்லிச் சென்றது போல, இன்னொரு பெண்ணை அவன் மணக்கிறானோ, என்னவோ . . .

ஏன்? அதையும்தான் தடுக்க வேண்டும். அவர்களுடையது, உண்மையான நேசம்! அது ஜெயிக்க வேண்டாமா? போராட்டம் இல்லாமல் வெற்றி ஏது?

அதற்காகவும், அவள் போராடியே தீர வேண்டும்.

அவள் பிரிந்து சென்றதன் காரணத்தை எடுத்துச் சொல்லி, அவனுக்குப் புரிய வைத்து, இந்த நாலு ஆண்டு ஏக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தே ஆக வேண்டும்!

மதுசூதனனைச் சந்தித்து விளக்கம் சொல்ல முடிவு செய்தபின், அதை ஒரு நாள் தள்ளிப் போடவும், சுமனாவுக்கு மனமில்லை.

இரண்டு நாட்கள் விடுப்பு கேட்டுத் தலைமை நிர்வாகிக்கு

“மெயில்” அனுப்பிவிட்டு, மறுநாள் காலை விமானத்திலேயே கிளம்பி விட்டாள்.

ஆனால், அவள் என்ன வேக வேகமாகச் சென்னைக்குப் போய்ச் சேர்ந்தபோதும், அவளது ஒரு வார்த்தையைக் கூடக் காது கொடுத்துக் கேட்கும் நிலையில், அங்கே மதுசூதனன் இருக்கவில்லை!

# அத்தியாயம் - 8

யாரோ விஜபி அந்த விமானத்திலேயே பயணம் செய்ய, அவருக்காகச் சென்னை விமான நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வளையம், கூடியிருந்த கூட்டம் எல்லாம் சென்று, சுமனா விமான நிலையத்தை விட்டு வெளியே வரவே, வெகுவாகத் தாமதமாகிப் போயிற்று.

இந்த நேரத்துக்கு, மதுசூதனன் தொழிற்சாலையில்தான் இருப்பான்! நல்ல வேளையாக, அவனது தொழிற்சாலை கிண்டியில் இருந்தது.

டாக்சியில் நேராகக் கிண்டிக்குப் போய், அங்கே விசாரித்து, “மது என்டர்பிரைச”சைக் கண்டுபிடித்துச் சென்றால், தொழிற்சாலையே அழுது வடிந்தது.

அங்கங்கே சிறு சிறு கூட்டங்களாக நின்று பேசிக் கொண்டிருந்தவர்களின் முகங்களில் வருத்தம் தெரியவும், சுமனாவுக்கு வயிற்றுக்குள் பிசைந்தது.

செக்யூரிடி உடை அணிந்த ஒருவரிடம் சென்று, மதுசூதனனைப் பார்க்க வேண்டும் என்று கேட்டாள்.

“எங்கேம்மா!” என்று பெருமூச்சு விட்டார் அவர். “உங்களுக்கு விஷயமே தெரியாது போல! சின்னவருக்கு நேற்று ராத்திரி, பெரிய்ய விபத்தும்மா. இப்ப சத்தியா, மருத்துவமனையில் இருக்கிறாரு. ரொம்ப அடியாம். பிழைக்கிறதே, கஸ்டம் என்கிறாங்க. வெளி ஆளுங்களைப் பார்க்க வுடுவாங்களோ என்னமோ? எதுக்கும், நீங்க போயிட்டு, இன்னொரு நாள் வாங்களேன்!” என்று யோசனை கூறினார்.

இறுகிப் போய், “எந்த மருத்துவமனை?” என்று, விவரம் கேட்டாள் அவள்.

“ஏம்மா? எதுக்கும் போய்ப் பார்க்கலாம்னு பார்க்கிறீங்களா? பெரிய முதலாளி கூட, அங்கயேதான் இருக்கிறாரு. போய்ப் பாருங்க.” என்று மருத்துவமனை விவரம் சொன்னார் செக்யூரிடி.

மருத்துவமனையில் டாக்சியை விட்டு இறங்கிய சுமனாவுக்குக் கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது.

அவள் என்ன எண்ணிக் கிளம்பினாள்? இப்போது, எங்கே வந்து நிற்கிறாள்! அவளுடைய தனா எங்கே?

மருத்துவமனை வரவேற்பில் கேட்டால் விவரம் தெரியும் என்ற சின்ன விஷயம் கூட மறந்து, எங்கே போவது என்று மலைத்து நின்றாள் அவள்.

நல்லவேளையாக, அவள் டாக்சியில் இருந்து இறங்குவதையும், மலைத்து நிற்பதையும் பார்த்த மதுசூதனன் வீட்டு டிரைவர், அவளிடம் ஓடி வந்தார்.

சுமனா யார் என்று, அவருக்கு விவரம் தெரியாதுதான். ஆனால், அன்று ஹோட்டல் கார்ப் பார்க்கில், மதுசூதனன் பின் தொடர்ந்து சென்றது அவளை என்கிற அளவு, அவருக்குத் தெரியும். அவருடைய சின்ன முதலாளி, வேறு எந்தப் பெண் பின்னேயும், அப்படிப் போனதில்லை என்பதும் அவருக்கு நிச்சயமாகத் தெரியும்!

எனவே, திகைத்து நின்றவளை அணுகி, “அம்மா, தம்பியைப் பார்க்க வந்தீங்களா? நான், மது அய்யா வீட்டுக் காரோட்டிம்மா. எதுக்கும், நீங்க முதலிலே பெரியவங்களைப் பார்க்கிறீங்களா? வாங்க. கூட்டிப் போய் விடுகிறேன்.” என்று பரிவாகப் பேசி, அழைத்தார்.

டிரைவரின் பின்னே ஓர் எட்டு எடுத்து வைத்த சுமனா, “மேடம் . . “ என்ற டாக்சி ஓட்டியின் குரலில் நின்றாள். “என்னை அனுப்பிவிட்டால், நன்றாக இருக்கும்.” என்று, அவளது தோள்ப்பையைக் காரிலிருந்து எடுத்து வெளியே வைத்தான் அவன்.

மறுபடியும் மலைத்து நின்றவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு, மதுசூதனன் வீட்டுக் காரோட்டி, அவளது பையைக் கையில் தூக்கிக்கொண்டார். “கொஞ்சம் நில்லுப்பா. இதோ, நான் வந்து, உனக்குப் பணம் செட்டில் பண்ணுகிறேன்.” என்று, டாக்சிக்காரனிடம் சொல்லிவிட்டு, அவளை உள்ளே அழைத்துப் போனார்.

தாய், தந்தை இருவருமே, ஐசியு வெளியேதான் நின்று கொண்டிருந்தனர்.

சுமனாவைப் பார்த்ததும், “ஐயோ, என் கண்ணே . . . “ என்று, சரளா ஓடி வந்து அவளை அணைத்துக்கொண்டு, ஓசையற்று அழுதாள்.

மகேசுவரனை நெருங்கி விவரம் தெரிவித்த காரோட்டி, “வரவேற்பிலே பையைக் கொடுத்திருக்கிறேனுங்க. நீங்க செலவுக்குத் தந்த பணத்திலே டாக்சிக்குக் கொடுத்திட்டு, பையை வாங்கி நம்ம காரிலே வச்சிடறேன்.” என்றுவிட்டுப் போனார்.

“இங்கேதான்மா. கண்ணைத் திறக்கவே இல்லையே . . .” என்று கண்ணீருடன் கூறியவாறே, ஐசியு அறைக் கண்ணாடி வழியே,

மகனைக் காட்டினாள் சரளா.

தலை, உடல் முழுவதும் கட்டுகளோடு, அசைவற்றுக் கிடந்த மதுசூதனனைப் பார்த்த சுமனாவுக்குத் திடுமெனக் கால்கள் துணியால் ஆனவை போலத் துவண்டன. ஆதாரமாக எதையாவது பற்றிக் கொள்ளவேண்டும் என்று நினைத்ததைச் செயலாற்று முன்னரே , அப்படியே தன் நினைவிழந்து, மயங்கிச் சரிந்தாள், அவள்.

சுமனாவுக்குச் சுய உணர்வு வந்தபோது, அவள் சரளாவின் தோளில்தான் சாய்ந்திருந்தாள். கீழே விழுந்தவளைத் தூக்கித் தாங்கிக்கொண்டு . . . தரையில்தான், சரளாவும் அமர்ந்திருந்தாள். ஏதோ ஈரத் துணியால், அவள் முகத்தை, ஒத்தித் துடைத்தவாறு.

கையில் எதையோ தூக்கிக்கொண்டு வந்த ஒரு நர்ஸ் பெண்மணி “என்ன? நான் சொன்னபடி செய்ததும் கண் விழிச்சாச்சுதா? கூட்டிப் போய், அந்த நாற்காலியிலே வசதியாக உட்கார வைத்து, நீங்களும் உட்காருங்கள். குடிக்க ஏதாவது, சூடாகக் கொடுங்கள் சார். எல்லாம் சரியாகிப் போகும். “ என்று உரைத்தவாறே, வேகமாக அடுத்த ஐசியு அறைக்குள் போனாள், .

என்ன நடந்திருக்க வேண்டும் என்று புரிகையிலேயே, “குடிம்மா.” என்று மகேசுவரன் காஃபி கப்பை நீட்டவும், சுமனாவுக்குக் கூசிப் போயிற்று.

இவர்கள் இருவரும், மதுசூதனனைப் பெற்றவர்கள். அவர்களை விடவும், தனக்குத்தான் ஏதோ பெரிதாக என்பது போல மயங்கி விழுந்து, அவர்களையே பணிவிடையும் பண்ண வைத்துக் கொண்டிருக்கிறாளே!

வெளுத்திருந்த முகம் கன்றிச் சிவக்க, “சாசாரி அங்கிள், சாரி ஆன்ட்டி! நா . நான் வேறு தொல்லையாக . . .” என்று வருந்தி உரைத்தவாறு, சரளாவின் தோளிலிருந்து விலகி, நேராக அமர்ந்தாள்.

அப்போதும், சரளா தரையிலேயே உட்கார்ந்திருப்பது மனதில் உறுத்த, காலை ஊன்றி எழுந்து, “ஆன்ட்டி, நீங்கள் முதலில் எழுந்திருங்கள். நீங்கள் தரையில் உட்கார்ந்திருப்பது, மனதுக்குக் கஷ்டமாக, என்னவோ போல இருக்கிறது.” என்று சுமனா கூற, சரளாவும் மெல்ல எழுந்தாள்.

எழுந்ததும், மீண்டும் அறைக்குள் எட்டிப் பார்க்கத் தோன்றிவிட, மனதைத் திடப்படுத்திக்கொண்டு, மறுபடியும், எட்டிப் பார்த்தாள் சுமனா.

அவனிடம் மாற்றமில்லை.

அவளை அடுத்து, சரளாவும் எட்டிப் பார்த்துவிட்டுக் கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

மகேசுவரனின் அழைப்புக்கிணங்கி, இரு பெண்களும், அங்கே வரிசையாகப் போடப்பட்டிருந்த, குஷன் வைத்த நாற்காலிகளில் அமர, "ஆர்டர்" எடுக்க வந்த கான்டீன் பையனை அழைத்து, மூன்று காஃபி கொண்டு வரச் சொன்னார், அவர்.

கையில் இருந்ததை, அவனிடம் கொடுத்து, "இது ஆறிவிட்டதப்பா. இதை நீ குடித்தாலும், தூரக் கொட்டினாலும், பணம் நாலு காஃபிக்கு வாங்கிக்கொள்." எனவும், கான்டீன் ஆள் சந்தோஷமாகச் சென்றான்.

அவன் எல்லோரையும் பார்த்து "ஈ"யென்று அத்தனை பற்களையும் காட்டிச் சிரித்துவிட்டுப் போனது, எல்லோருக்குமே ஆறுதலைத் தந்தது.

அவன் விரைந்து கொணர்ந்து தந்த சூடான காஃபியை அருந்தியபடியே, மகேசுவரன், சுமனாவுக்கு விவரம் சொன்னார்.

"உள்காயம், வெளிக் காயம் எல்லாமே, மதுவுக்கு அதிகம். ஏதோ, இதிலும் நல்ல காலமாக, சீட்பெல்டைப் போட்டிருந்தான். அதனால், முக்கியமான உறுப்புகள் தப்பியிருக்கின்றன. ரத்த சேதம் அதிகம். நாலைந்து இடங்களில், எலும்பு உடைந்திருந்ததாம். பயப்பட வேண்டாம். அதையெல்லாம் சரிப்படுத்தியாயிற்று.

"இப்போது பிரச்சினை, இதை . .இந்த விபத்து, சிகிச்சை எல்லாவற்றையும், மதுவின் உடம்பு எவ்வளவு தூரம் தாங்கும் என்பதுதான். அறுபது, அதற்கு மேல் என்றால், ரொம்பக் கஷ்டமாம்.

"ஆனால், மதுவுக்குச் சிறு வயது. கெட்ட பழக்கங்கள் கிடையாது. "ஊனுறை ஆலயம்" என்ப போல, உடம்பை ஆரோக்கியமாகப் பாதுகாக்கிறவன். அதனால் பிழைத்து விடுவான் என்கிறார்கள், மருத்துவர்கள்." என்று முடித்தார்

"பின்னே, அவன் கண்ணே திறக்கவில்லையே! " என்றாள் சரளா கலக்கத்துடன்.

"திறப்பான்மா. மதுவுக்கு அடி பட்டிருக்கும் இடங்கள், அதனால் ஏற்பட்ட ரத்த சேதம், அவனுக்கான சிகிச்சை, அதற்குக் கொடுக்கப்பட்ட மயக்க மருந்து . . .எல்லாவற்றுக்கும், அவன் உடம்பு ஈடுகொடுக்க வேண்டும் அல்லவா? வலி தெரியாமல் இருக்கவும், ஏதாவது கொடுத்திருப்பார்கள் . . .பொறுமையாக இரு." என்றார் மகேசுவரன்.

மனைவியிடம் தேறுதலாக ஏதேதோ சொன்னபோதும், அவரது

கண்களில் அவ்வப்போது தென்பட்ட கலக்கம், சுமனாவை நடுங்க வைத்தது.

உள்ளே போய்ப் பரிசோதித்துவிட்டு வந்த தலைமை மருத்துவர் மறைக்காமல் நிலைமையைச் சொன்னார்.

நிலைமை மோசமாகவில்லை. இதை நல்ல அறிகுறியாகவே எடுத்துக் கொள்ளலாம். ஆனால், இன்னும் இருபத்துநாலு மணி நேரம் கழித்துதான், மதுசூதனன்  பிழைப்பது பற்றி, உறுதியாகச் சொல்ல முடியும்!

வெளிப்படையான இந்தப் பேச்சில், சரளா தள்ளாடவும், ஏற்கனவே சற்றுப் பழக்கமானவரான அந்த வைத்தியர், அவளுக்கு அறிவுரை கூறினார். “கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால், அதற்காக, நான் பொய் சொல்லமாட்டேன். ஆனால், மதுசூதனனின் இளமையும், இயல்பான ஆரோக்கியமும், அவனை மீட்டுவிடும் என்பது என் நம்பிக்கை. தைரியமாக இருங்கள்.” என்று சொல்லிவிட்டுத் திரும்பப் போனவர், நின்று சுமனாவைப் பார்த்தார்.

என்ன நினைத்தாரோ? “பயப்படாதேம்மா. மதுசூதனனுக்கு ஒன்றும் ஆகாது.” என்றுவிட்டுப் போனார்.

மேலும் இரண்டு “இருபத்துநாலு மணி நேர” ஈரெட்டான நிலைக்குப் பிறகு, மதுசூதனன் பிழைத்துக் கொண்டான் என்ற அமுத வார்த்தைகளைக் கூறி, வெளியே காத்துக் கிடந்த மூன்று நெஞ்சங்களையும் குளிர வைத்தார் மருத்துவர்.

“இயல்பான உறக்கம், மகேசுவரன். விழித்த பின், சில சோதனைகளின் பிறகு,  . . . . சோதனை என்றதும் பயப்பட வேண்டாம். ஐசியுவிலிருந்து அனுப்புமுன் செய்கிற சாதாரண டெஸ்டுகள்தான். அதன் பிறகு, நாளைக்குத் தனியறைக்கு மாற்றச் சொல்லியிருக்கிறேன். அங்கே ஒரு வாரம் , பத்து நாள். அப்புறமாக வீட்டுக்குப் போகலாம். ஆனால், ரொம்ப உணர்ச்சி வசப்பட வைக்க வேண்டாம். நீங்களும், கண்ணீர், கதறல்கள் இல்லாமல், சாதாரணமாக இருங்கள். மதுவையும், நன்றாக ஓய்வெடுக்கச் செய்யுங்கள். “ என்று உற்சாகத்துடன் கூறியவர், சுமனாவிடம் திரும்பி, “என்னம்மா, சந்தோஷம்தானா என்று கேட்டுவிட்டுப் போனார்.

மூன்று நாட்களுமே, மதுசூதனனுடைய பெற்றோர்கள் கூடவே, அவளும் இருந்ததைக் கவனித்திருக்கிறார் என்று எண்ணினாள் சுமனா.

மூன்று தினங்களாக, மதுசூதனன் பிழைக்க வேண்டும் என்பது

தவிர, வேறு எதையும் நினைக்காத அவளது மனது, இப்போது அலைபாய்ந்தது.

பங்களூருவில், அவளை அடியோடு வெறுத்து, உதறிவிட்டு வந்தவன் மதுசூதனன். அது, அவனது கடைசி நினைவுகளில் ஒன்றாகவும் இருக்கலாம்.

இந்த நிலையில், அவன் முன்னே போய் சாதாரணமாக நிற்கலாமா?

அவனது குற்றச்சாட்டுக்கு, உடனடியாகப் பதில் சொல்லிவிடும் வேகத்தில் வந்தவள்தான். ஆனால், அவன் இப்போது இருக்கும் நிலையில், அதுபோல விளக்கங்கள், வாதப் பிரதிவாதங்கள், உணர்ர்ச்சிகரமான பேச்சு வார்த்தைகள் எல்லாம், சரியாகுமா?

கூடாது என்று, சுமனா, நிச்சயமாக நினைத்தாள்.

பின்னே, எப்போது சொல்வது?

மதுசூதனனுக்கு உடம்பு நன்றாகக் குணமாகி, வீட்டுக்குத் திரும்பிச் சென்ற பிறகு சொல்வதுதான் நல்லது!

ஆனால், அது வரையுமா, ஒட்டுண்ணி போல, இவர்கள் செலவிலேயே வசிப்பது?

மதுசூதனன் பிழைத்துவிட்டான் என்பதால், அவள் பங்களூருவுக்குப் போய்,ஒரு வாரம் வேலையைச் செய்துவிட்டுக் கூடத் திரும்பி வரலாம்!

இதுதான் சிறந்த யோசனை என்று அவளுக்கு நன்றாகவே தெரிந்தபோதும், பங்களூருவுக்குச் செல்ல, அவளுக்குக் கால் எழ மறுத்தது.

இந்த நிலையில், மதுசூதனனைப் பிரிந்து, பங்களூருவுக்குத் திரும்பிப் போவதா, இல்லையா என்ற அவளது குழப்பத்துக்குத் தானாக ஒரு முடிவு வந்தது.

நேரே வந்து, தன்னிடம் அனுமதி பெறாமல், சுமனா வெறுமனே ஈமெயில் மட்டும் அனுப்பிவிட்டுப் போனது, தலைமை நிர்வாகி ஜெயராமனுக்கு, உள்ளூர எரிச்சலாகவே இருந்தது.

வந்து நாலு ஆண்டுகளுக்குள், பதினைந்து ஆண்டுகளாகப் பணி புரியும் தனக்கு அடுத்த நிலைக்கு வந்துவிட்டாளே என்கிற பொச்சரிப்பு, அவனுக்கு எப்போதுமே உண்டு. விரைவிலேயே, தன்னையே மிஞ்சி விடுவாளோ என்ற கலக்கமும் நிறையவே இருந்தது.

கடுமையான உழைப்பாளி, செய்வதைத் திருந்தச் செய்பவள் என்பதால், அவளைப் பற்றிய சிறு விமர்சனங்களுக்குக் கூட, மேலிடம் இடம் கொடுத்தது இல்லை. தவறாக விமர்சிப்பதற்கு, சுமனா வாய்ப்பளித்ததும் கிடையாது.

நிறுவன உரிமையாளர் திருவாளர் காசிராஜன் என்றாலும், நிர்வாகத்தை, அவருடைய மகளே கவனித்ததால், “முதலாளியை மயக்கி, கியக்கி” என்று அது போலக் கதை பரப்பவும் ஜெயராமனால் இயலாது போயிற்று.

தன் இனம் என்பதாலோ, என்னவோ, சின்னப் பெண்., தனியாக நின்று சிறப்பாகச் செய்கிறாள் என்று சுமனா மீது, அந்தம்மாளுக்கு ஒரு கனிவும் இருந்தது.

நீறு பூத்த நெருப்பாய் அவனுள் எரிந்து கொண்டிருந்த பொறாமைத் தீக்கு, இப்போது ஒரு வடிகால் கிடைத்தது. அனுமதி பெறாமலே, சுமனா விடுப்பு எடுத்திருக்கிறாள்!

ஆனால், இன்னமும், இதை மேலிடத்துக்குக் கொண்டு செல்ல, அவனுக்குத் துணிவில்லை. ஏதாவது தவிர்க்க முடியாத காரணம் இருக்கும். அவள் வந்து சொல்லட்டும் என்று, அந்தம்மாள் சும்மா விட்டு விடலாம்.

இரண்டு நாள் விடுப்பு, அதன் பிறகு சனி, ஞாயிறு!

ஆனால், திங்களன்றும், மதியம் வரை சுமனாவைப் பற்றின தகவலே இல்லை எனவும், ஜெயராமன் துணிச்சலோடு, தானே செயல்படலானான். அவனது பதவிக்கு அந்த உரிமை உண்டு.

சுமனாவை செல்லில் அழைத்து, அவ்வளவு நாள் ஆசைப்பட்டபடி, திட்டித் தீர்த்தான்.

அவள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்? இது என்ன, அலுவலகமா? அவள் விருப்பம் போல வந்து போகிற பூங்காவா? ஒழுங்கான அனுமதி பெறாமல், சும்மா ஈமெயிலில் ஒரு வரி அனுப்பிவிட்டு, ஆளே காணாமல் போய்விட்டாள். அதுதான் போகட்டும் என்று பார்த்தால், அந்த மெயில் செய்தியில் குறிப்பிட்டபடியும் வந்து சேரவில்லை.

அவளுக்குக் கடமை என்றால் என்னவென்று தெரியுமா? ஓர் அலுவலகம் சிறப்பாகச் செயல்பட வேண்டுமானால், அங்கெ பணி புரிகிறவர்கள் ஒழுங்கு முறைமை கடைப் பிடித்தாக வேண்டும். அதை மீறுகிறவர்களுக்கு அங்கே இடம் கிடையாது.

அதுவும், இந்த ஜெயராமன், அலுவலக ஒழுங்குமுறை விஷயத்தில், கொஞ்சமும் வளைந்து கொடுக்கிறவன் இல்ல!

இப்போது, அவளாக வேலையை விடுகிறாளா? அல்லது, அவளைத் தூக்கி எறிய வேண்டுமா?

உடனே பதில் வந்தாக வேண்டும்!

ஜெயராமன் பேசப் பேச, சுமனாவின் முகம் வெகுவாக வாடிப் போயிற்று.

இந்த ஐடி நிறுவனங்களில், இது ஒரு பிரச்சினை உண்டு. வேகமாக வளர்ந்து பெரிய வருமானத்தை விரைவிலேயே எட்ட முடியும். ஆனால், நிர்வாகத்தின் சட்டதிட்டங்களை அப்படியே கடைப்பிடிக்கவில்லை என்றால், கருணையை எதிர்பார்க்கவே முடியாது.

இப்போது, கடும் உழைப்பினால் கிடைத்த இந்த வேலையே போகப் போகிறதே!

சுமனா வந்து மயங்கி விழுந்ததில் இருந்தே, மகேசுவரன், அவள் மீது ஒரு கவனம் வைத்திருந்தார்.

மனைவி சொன்ன விவரங்களோடு, திருமண வரவேற்பன்று நடந்ததாகக் காரோட்டி சொன்னதும் அவர் மனதில் இருந்தது.

சுமனாவின் வருகை, அவற்றோடு பொருந்தவில்லைதான். ஆனால், கட்டுகளும், குழாய்களுமாக கண் மூடிக் கிடந்த மகனைப் பார்த்ததும் மயங்கி விழுந்தாளே!

சுமனாவின் கைப்பையில் இருந்து செல் ஒலி கேட்கவுமே, மகேசுவரனின் கவனம், அங்கே சென்றுவிட்டது.

நாலு நாட்களாகச் சும்மாக் கிடந்த செல்! இன்று என்ன?

அடுத்தவர் உரையாடலைக் கவனிப்பது, அநாகரீகம்தான். ஆனால், மகன் விஷயத்தில், அவர், அந்த நிலையைக் கடந்திருந்தார்.

செல் பேச்சு, கிட்டத்தட்ட மறு முனையில் மட்டும்தான் நடந்தது எனலாம்.

சுமனா சொல்ல முயன்ற ஓரிரு வார்த்தைகளையும், அங்கிருந்த நபர் காது கொடுத்துக் கேட்பதாக இல்லை!

பேச்சு முடிகையில், அவள் முகம் மிகவும் வாடியிருந்தது.

ஒரு கணம் யோசித்துவிட்டு, சுமனாவின் அருகே வந்து அமர்ந்து, “என்னம்மா, விஷயம்?” என்று விசாரித்தார்.

என்னவோ, கிட்டத்தட்ட நாலு நாட்களாக, அவர்கள் மூவரும் சேர்ந்து அனுபவித்த துன்பத்தில், அவரை அன்னியராக எண்ண, அவளுக்குத் தோன்றவில்லை.

எனவே, விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, "எனக்கு ஒரு வேலை ஏற்பாடு செய்து தர முடியுமா, அங்கிள்? சாதாரணமானதாக, என் செலவுக்குக் கட்டி வருவதாக இருந்தாலும் போதும்." என்று அவரிடமே உதவி கேட்டாள் அவள்.

லேசாக முறுவலித்து, "மிகமிக நல்ல வேலைக்கே, நானே ஏற்பாடு செய்வேன்மா. ஆனால், இப்போதைக்கு, இந்த வேலையை ஏன் விடுவது?" என்றுவிட்டு, அவளது பங்களூரு வேலை பற்றிய விவரத்தைக்  கேட்டார்.

ஜெயராமனிடம் நேரடியாகப் பேசினார்.

"மது என்டர்ப்ரைசஸ் சேர்மன் மகேசுவரன் " என்று, தன்னை அவர் முதலில் அறிமுகப்படுத்திக் கொண்டதுமே, ஜெயராமனின் குரல் குழைந்துவிட்டது.

அடுத்து, "சுமனா எங்களுடைய உறவினள். என் மனைவிக்காகத்தான், அவள் இங்கே வந்திருப்பதே. சற்று முன் என்னவோ சொன்னீர்களாம். நான் வேண்டுமானால், உங்கள் முதலாளி காசிராஜனிடம் பேசவா? அல்லது, இப்போது அவருடைய மகள்  . . புவனேசுவரிதானே தொழிலைப் பார்ப்பது? அவளிடம் சொல்லட்டுமா?" என்று கேட்டார்.

சொல்வதா? என்னவெல்லாம் சொல்லுவார்? சண்டாளி! இப்படி ஒரு பெரிய இடத்து உறவு இருப்பதைச் சும்மாப் பெருமையாவது, அடித்திருக்கலாம். அவர் வீட்டுக்குப் போவதாகவேனும் சொல்லியிருக்கலாம்! அவன் இவ்வளவு பேசியிருக்க மாட்டான்!

அதுவும், முதலாளியோடு நல்ல பழக்கம் வேறு இருக்கிறது!

அவன் பேசியதை, இவர் சொல்லுகிற விதத்தில் சொன்னால், "அதிகார துஷ்பிரயோகம்" என்று, அவன் வேலையல்லவா, காலியாகும்!

அவசரமாக, "ஐயோ வேண்டாம்,சார். இங்கே உதவி ஆளை வைத்து, வேலையைப் பார்த்துக் கொள்ளுகிறேன். சுமனா வருகிறபோது வரட்டும்.விடுப்புக் கேட்டு ஒரு கடிதம் மட்டும் எழுதி விடட்டும்." என்றான் அந்த நிர்வாகி.

விஷயம் அறிந்ததும், சுமனா, நிம்மதியோடு அவருக்கு நன்றி

உரைத்தாள்.

அவளை ஆழப் பார்த்தார் மகேசுவரன்.

மகன் உறக்கம் கலைந்து எழுமுன், குளித்து உடை மாற்றி வருவதாகச் சரளா சென்றிருந்தாள். எந்த விதமான உணர்ச்சிக் குறுக்கீடும் இல்லாமல் பேச, இது நல்ல தருணம்.

சுமனாவை அழைத்து, "பாரம்மா, எனக்கு இந்த விவரம் நீ சொல்ல வேண்டும். அன்று நள்ளிரவில் எழுப்பி, மதுவுக்கு விபத்து என்றார்கள். விழுந்தடித்துக்கொண்டு போனால் . . அந்தக் காட்சி, ஜென்மத்துக்கும் மறக்காது. மது கவனக்குறைவாகக் காரை ஓட்டுகிறவனே அல்ல. ஆனால், சாலையோரத்து மரத்தில், வழி விலகிப் போய் மோதியிருந்தது. பங்களூர்ச் சாலை! நீயும் அங்கிருந்துதான், அவசர அவசரமாகக் கிளம்பியிருக்கிறாய். அங்கே என்ன நடந்தது.? சொல்லம்மா." என்று வினவினார்.

வந்ததிலிருந்து, மதுசூதனன் பிழைக்க வேண்டும்., பிழைக்க வேண்டும் என்று அதையே உருப் போட்டதில், சுமனா, வேறு நினைவே இல்லாதிருந்தாள்.

இப்போது மகேசுவரன் கேட்டதும், எல்லாம் படம்போல் மனதில் விரிய, அவரிடமும் அவள், எதையும் மறைக்கவில்லை!

பங்களூருவிலிருந்து கிளம்பும்போது மதுசூதுனன் சொன்ன வார்த்தைகள், அவரையுமே அதிரச் செய்தன.

சுமனாவிடம் ஏதேதோ சொன்னபோதும், அவனாலேயே, தன் பேச்சையே தாங்க முடியவில்லை. அந்த அளவுக்கு, அவளது பாதிப்பு அவனிடம் இருக்கிறது.

அவளும் . . . ஏதோ எடுத்துச் சொல்லத்தான் பின் தொடர்ந்து வந்திருக்கிறாள்! ஆனால், இப்போது நேரம் சரியில்லையே!

மனைவி குளித்துவிட்டு வந்ததும், "நீயும் போய் வாம்மா." என்று சுமனாவை அனுப்பி வைத்தார்.

சுமனா சென்றதும், மனைவியை அழைத்து, "பார், ஏதோ நல்லது செய்கிறோம் என்று, இருவரையும் தனியேவிட்டு எங்கேயும் போகாதே. அவர்கள் இருவருக்கும் இடையே, இப்போது பெரிய பிரச்சினை இருக்கிறது. அவன் நல்ல குணமாகும் வரை, ரொம்பக் கவனமாக இருக்க வேண்டும். அல்லது, உள்ள தகராறு பெரிதாகி, பையன் நல்லபடியாகப் பிழைப்பது கூட சந்தேகமாகிவிடும்!" என்று எச்சரித்தார்.

# அத்தியாயம் - 9

கணவரின் வார்த்தைகளில், சரளா வெகுவாக அதிர்ந்து போனாள் எனலாம்.

மகன் பிழைத்துவிடுவான் என்று ஆனதும், அவள் மனதில் ஏராளமான திட்டங்கள் தோன்றிவிட்டன.

நாலு ஆண்டுகளுக்கு முன்பாக, இந்த நேசப் பறவைகளைப் பிரித்த பாவத்தை அவள் செய்திருக்கிறாள். அதற்குச் சரியான பிராயச்சித்தம் செய்ய வேண்டும்.

அவர்கள் இருவரையும், இயன்றவரை தனியே விட்டுவிட்டு, நல்ல மாமியாராக ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

நல்ல வேளையாக, மறுத்துப் பேசிய சுமனாவும் மனம் மாறி வந்துவிட்டாள்.

மதுசூதனன் நன்கு குணமாகி, அவர்கள் இருவருக்கும் திருமணத்தையும் செய்து வைத்துவிட்டால், அப்புறம் என்ன? பேரன் பேத்திகளைத் தூக்கிக் கொஞ்சிக்கொண்டு, சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்க வேண்டியதுதான்!

மருத்துவமனையை ஒட்டியிருந்த பெரிய ஹோட்டல் ஒன்றில் , மகேசுவரன் போட்டிருந்த அறைதான். அங்கே போய்க் குளித்துவிட்டு வருமுன், அவள் மனதில், இப்படி என்னென்னவோ திட்டங்கள்!

சுமனா பணத்தைப் பெரிதாக மதிக்கக் காணோம். ஆனாலும், தன் வைரங்களை அவளுக்குப் பூட்டி, அழகு பார்க்க வேண்டும் . . பொருத்தமாகப் பட்டுச் சேலைகள் . .

இப்படியெல்லாம் நினைத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு வந்தால், மகேசுவரன் பேச்சு அவளுக்குக் குண்டைத் தூக்கிப் போட்.டது போல இருந்தது.

அதிர்ந்து போய், "என்னப்பா நீங்கள் வேறு, ஏதாவது பயமுறுத்தாதீர்கள்! சுமனாதான் வந்துவிட்டாளே! அப்புறம் என்ன தகராறு? " என்று கேட்டாள்.

இவளிடம் எந்த அளவுக்குச் சொல்வது என்று மகேசுவரன் யோசித்தார்.

சரளா நல்லவள்தான் கெட்டிக்காரியும்தான். ஆனால், அதிகமாக வெளி உலகம் தெரியாதவள்.

எல்லாவற்றையும் சொன்னால், கெட்டிக்காரனான மகன் தப்பாக யோசிப்பானா? ஒருவேளை, அவன் நினைப்பது போலவும் இருக்குமோ என்று, குழம்பத் தொடங்கினாலும், வியப்பதற்கில்லை.

அது, அவர் நம்பிக்கையோடு எதிர்பார்க்கும் பிற்கால வாழ்க்கைக்கு நல்லதில்லை.

எனவே, “பார் சரளா, இப்போதைக்கு மது ரொம்பவும் உடம்பு சரியில்லாதவன். பிழைத்துவிட்டான்தான். ஆனால், கடைசி நிலைவரை சென்றுதான் திரும்பி வந்திருக்கிறான். உடம்பு, மனது இரண்டுமே, மிகவும் பலவீனமாக இருக்கும். சரி தப்பை விட, தன் கோப தாபங்கள்தான் பெரிதாகத் தெரியும். இந்த நேரத்தில், அவன் என்ன நினைப்பான், என்ன செய்வான் என்று சொல்ல முடியாது. நீ சொல்லித்தான் என்றாலும், முன்பு சுமனா தன்னை விட்டுப் போனது, அவனுக்கு இன்னும் கோபம் போலத்தான் தெரிகிறது. அவளும் ரொம்பக் கலங்கியிருக்கிறாள். இந்த நேரத்தில், இருவரும், அவரவர் நியாயத்தைப் பேசத் தொடங்கி, பேச்சுப் போக்கில் நிதானமற்று ஏடாகூடமாக ஏதாவது வார்த்தைகள் விழுந்துவிட்டால் . . .நம் பிள்ளையைப் பற்றி உனக்குத் தெரியாதா? சொன்னதிலேயே நின்றுவிடுவான். அது எல்லோருக்கும் பாதிப்பாகிப் போகும். அந்தப் பெண் சுமனா, தன் வேலையைக் கூடப் பெரிதாகக் கருதாமல், இங்கேயே விழுந்து கிடக்கிறாள். இந்த நேரத்தில், மது ஏதாவது தப்பாகப் பேசிவிட்டால், இரண்டாவது தடவையாக, அந்தப் பெண்ணின் பாவம் நமக்கு வந்து சேரும்! அதனால், இப்போதைக்கு அவர்களைத் தனியே விட வேண்டாம். பையன் கூடவே இருந்து அவனை நன்கு கவனி. அவனது எரிச்சல், கோபம் எல்லாம் பற்றி, கவனிப்பது தெரியாமலே கண்காணித்து, என்னிடம் சொல்லு.” என்று, அவளுக்கு ஒரு பொறுப்பைக் கொடுத்தார்.

“ஐயோ, நானா? நான் மட்டுமா? அப்போது, நீங்களும் கூட இருக்க மாட்டீர்களா?” என்று அஞ்சினாள் சரளா.

“அதெப்படிம்மா? தொழிலைப் பார்க்க வேண்டாமா? இல்லாவிட்டால், அதை வேறு நினைத்து, பிள்ளை கவலைப்படுவானே!” என்று அவர் காரணம் கூறி, “ஆனால் முடிந்தவரை சீக்கிரமாக வந்துவிடுகிறேன்.” என்றும் உரைக்க, ஒத்துக்கொண்டு தலையாட்டினாள் மனைவி.

எதற்கும் இருக்கட்டும் என்று, “சுமனாவிடமும் எதையும் கேட்கவோ, பேசவோ வேண்டாம்மா. சொன்னேனில்லையா? அவளும்

மனது கலங்கித்தான் இருக்கிறாள்.” என்று கடைசியாக ஒரு வார்த்தையும் போட்டு வைத்தார்.

சரளாவைப் பொறுத்த வரையில், தானாக ஒன்றிரண்டு செய்வாளே தவிர, அவர் ஒன்று சொன்னால் மீற மாட்டாள் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு. .

தலைமை மருத்துவர் கூறியது போல ஒரே நாளில், மதுசூதனனைத் தனி அறைக்கு மாற்றி விட்டார்கள்.

முதல் இரு நாட்கள், பெரும்பாலும் உறக்கத்திலேயே கழிந்தாலும், கண் விழித்த தருணங்களில், மதுசூதனன் எல்லோரையும் இனம் கண்டு, நல்லபடியாகவே பேசினான்.

சுமனாவிடம் கூட, “நீயும் வந்திருக்கிறாயா?” என்று ஒரு கேள்வி, ஆறுதலாகவே கேட்டான்.

ஆனால், விழித்திருக்கும் நேரம் அதிகமாக, ஆக, எந்நேரமும் புருவம் சுளித்தவாறே இருக்கலாயிற்று. அதுவும், சுமனாவைப் பார்க்கையில், அதிகமாவது போலத் தோன்றவும், சரளா கவலைப்படத் தொடங்கினாள்.

கணவர் கொடுத்த பணியில், மிகவும் கவனமாகவும் இருக்கலானாள். மதுசூதனன் தூங்கும்போது கூட, அங்கேயே காவலிருந்தாள்.

தொழிற்சாலையிலிருந்து கணவர் திரும்பி வந்து, நடந்த, நடக்க இருக்கிற வேலை பற்றிப் பேசுகையில்தான், அவள் தன் வேலைகளைப் பார்க்கச் செல்வதே.

மகனது இப்போதைய பார்வை, அவருக்குத் தெளிவாகப் புரிந்தது.

இப்போதைக்கு மகனிடம், பிரச்சினைக்குரிய விஷயம் எதுவும் பேச வேண்டாம் என்று சுமனாவிடம் சொல்லலாமா என்று மகேசுவரன் ஒருதரம் யோசித்தார். ஆனால், கூடவே இன்னொரு பயம் வந்தது.

அப்படியானால், வேலைக்குப் போய்விட்டு, மதுவுக்குக் குணமானதும் வருகிறேனே என்று, சுமனா கிளம்பிவிட்டால்?

அவள் இன்னொரு தரம் பிரிந்து செல்ல விடக் கூடாது என்று மனதுள் நிச்சயமாகத் தோன்றவே, பெரியவர்கள் ஒருவர் மாற்றி ஒருவர், பிள்ளை கூடவே இருந்தார்கள்.

சுமனாவும் முட்டாளல்ல. மதுசூதனன் உடம்பு பலவீனப்பட்டு, மனதும் குழம்பி இருக்கும் இந்தச் சமயத்தில், தன் வாதங்களை அவன்

ஏற்பது கடினம் என்று உணர்ந்து, பெரியவர்களின் பின்னணியிலேயே ஒதுங்கியிருந்தாள்.

அவர்களுக்கு உதவியாக, மதுசூதனனுக்கு ஏதாவது எடுத்துக் கொடுப்பது போன்ற உதவிகளைச் செய்தாளே தவிர, தானாக அவனிடம் போய் நிற்கவே இல்லை.

மாறாக, மகேசுவரனுக்கும், சரளாவுக்கும் தேவைப்பட்ட, தன்னாலான உதவிகளைச் செய்தாள்.

தொழிற்சாலையிலேயே உட்கார்ந்து பார்த்தால் தாமதம் ஆகிவிடும் என்று, மகனைப் பார்க்க வரும்போது, தான் நேரடியாகப் பார்வையிட வேண்டிய ஃபைல்களை, மகேசுவரன் கையோடு கொண்டுவந்து விடுவார்.

அவர் மதுசூதனனோடு தொழில் விஷயம் பேசிக் கொண்டிருக்கையில், வெறும் கையெழுத்து மட்டும் போட வேண்டிய அளவில், சுமனா அந்த ஃபைல்களைப் பார்த்து வைப்பாள்., கணக்குகளை “டாலி” பண்ணிக் கொடுப்பாள்.

இன்னும் சிலதைக் கொடுத்து, “சும்மா இருக்கும்போது, இவைகளைப் பார்த்து வையம்மா. நாளைக்கு எடுத்துப் போகிறேன்.” என்று அவர் சொல்வதும் உண்டு.

கல் மாதிரி முகத்துடன், மதுசூதனன் அசையாமல் கிடப்பான்.

இதே போல் சரளாவுக்கும் சிலபல உதவிகளை சுமனா செய்யலானாள்.

ஒரு விடுமுறை நாளன்று மகேசுவரன் மகனோடு உட்கார்ந்திருக்க, காரில் கூட்டிப் போய், சரளா வீட்டில் செய்யக் கூடிய உதவிகளைக் காட்டிக் கொடுத்துவிட, தினமும் அதே போல டிரைவரோடு வீட்டுக்குப் போய், அவைகளைச் செய்துவிட்டு, உணவையும், மறு நாளைக்குத் தேவையான துணிகளையும் எடுத்து வருவாள்.

இப்படியே, அவளுக்கும் பொழுது பயனுள்ளதாகக் கழிந்தது.

இந்நிலையில், “பிசியோதெராப்பி” மட்டும் விடாமல் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையோடு, மருத்துவமனையில் இருந்து, மதுசூதனன் வீடு செல்ல அனுமதிக்கப் பட்டான்.

வீட்டிலும் பெற்றோரின் கண்காணிப்பு தொடர்ந்தது. சுமனாவின் பணியும் தொடர்ந்தது.

சொல்லப் போனால், மகேசுவரன், அவளுக்கு இன்னும் அதிக

வேலைதான் கொடுத்தார் எனலாம். “பேசாமல், உனக்கு பதவியைத் தந்து, சம்பளமே போட்டுவிடலாம் போல இருக்கிறது! ஓசி வேலை அவ்வளவு வாங்குகிறேன்!” என்று வேடிக்கையாகக் கூறவும் செய்தார்.

வீட்டிலிருந்தபடி, “லாப்டாப்”பின் மூலமாக, மதுசூதனன் தொழிலைக் கவனிக்கத் தொடங்கினான்.

ஆனால் அதில் கூட, மிகவும் களைப்படைந்து, உடனே படுத்து நன்கு உறங்கி விடுவான். செல் அழைப்பில் கூட எழ முடியாத அளவு, அயர்ந்த உறக்கம்.

கொஞ்ச நாட்கள் பொறுத்திருந்து, உடம்பு நல்ல வலுவடைந்த பிறகு, இந்த வேலையெல்லாம் செய்யலாமே என்று, பெற்றோர் அவனிடம் சொல்லிப் பார்த்தார்கள்.

“அதுதான், உடனே இடி விழுந்தால் கூடத் தெரியாத அளவு ஆழ்ந்து தூங்கி விடுகிறேனே! உழைப்புக்குச் சமமாக ஓய்வும் எடுத்து விடுவதால், உடம்பில் எந்தப் பாதிப்பும் இராது.” என்றுவிட்டு, வேலை செய்வதில் மதுசூதனன் பிடிவாதமாக இருந்தான்.

சும்மாக் கிடந்து மனதைக் குழப்பிக் கொள்வதை விட, இது மேலோ என்று தோன்ற, மருத்துவரையும் ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு, பெற்றோர் மகனுக்கு விட்டுக் கொடுத்தனர்.

அன்று சம்பள நாள் என்று மகேசுவரன் காலையில் சீக்கரமே கிளம்பிப் போய்விட்டார்.

தானும் கூடப் போய் உதவ முடியவில்லையே என்ற எரிச்சலைக் காட்டியபடி, மதுசூதனன் தாயிடம் அது வேண்டும், அது சரியில்லை, இது வேண்டும் என்று கேட்டு, அவனது அறையிலேயே சுற்றிக் கொண்டிருக்கச் செய்தான்.

அவனது “லாப்டாப்” வேலை முடிந்து, அவன் தூங்கிய பிறகுதான், பெற்றசவள் குளிக்கச் செல்லவே முடிந்தது.

அப்போதும், சற்று நேரம் அவன் அறையிலேயே உட்கார்ந்திருந்து, அடித்துப் போட்ட மாதிரி அவன் உறங்குவதைப் பார்த்த பிறகே, சரளா எழுந்து குளிக்கப் போனாள்.

அப்போதும், மகேசுவரன் கொடுத்திருந்த ஃபைலில் ஆழ்ந்திருந்த சுமனாவிடம் சென்று, “நான் குளிக்கப் போகிறேன், சுமிம்மா. மது தூங்கிக்கொண்டு இருக்கிறான். அவன் இடையில் விழித்தால் என்னைக் கூப்பிடு.” என்று சொல்லிவிட்டே சென்றாள்.

காரணம் புரிந்ததோடு, அவளுக்கு ஒப்புதலாகவும் இருந்ததால், "சரி ஆன்ட்டி." என்று சம்மதம் தெரிவித்துவிட்டு, சுமனா , கையிலிருந்த வேலையைத் தொடர்ந்தாள்.

சரளா குளிக்கச் சென்று ஓர் ஐந்து நிமிஷங்கள் ஆகியிருக்கும். மதுசூதனனின் அறையில், தடாரென்று பெரிய ஒலியோடு ஏதோ விழுகிற சத்தம் பலமாகக் கேட்கவும், சுமனா சட்டென எழுந்துவிட்டாள்.

தண்ணீர் குடிக்கவோ, எதற்காகவோ எழுந்த தனா, தூக்கக் கலக்கத்தில் ஏதாவது தட்டி விழுந்துவிட்டானா?

விபத்தில் உடைந்து, இப்போதுதான் கூடியிருக்கும் எலும்புகள் என்ன ஆகும்?

எழுந்தவள் யோசனையோடு நின்றாள்.

மதுசூதனனோடு சுமனா தனிமையில் பேசுவதைத் தடுக்கும் விதமாகப் பெரியவர்கள் நடப்பதை, அவள் உணராமல் இல்லை. அவளுக்குமே, தனா இன்னும் சற்றுப் பலம் பெறும் வரை, தனிமைப் பேச்சு நல்லதில்லை என்பதுதான். தனியாகப் பேசுவதே கூடாது எனும்போது, அதற்கு மேல், சுயவிளக்கம் சொல்லி வாதாடுவதை, நினைக்கக் கூட முடியாதே!

எனவே, தனாவுடைய பெற்றோரின் முயற்சிக்கு, அவளும் உதவியாகத்தான் இருந்தாள்.

ஆனால் இப்போது என்ன செய்வது? ஏதோ நாற்காலி போல ஒன்று விழுந்த சத்தம்தான், முதலில் கேட்டது. ஆனால், அவனும் சேர்ந்து விழுந்திருந்தால்?

"ம்ம்ம்மா . . . " என்ற முனகலில், அவளது தயக்கம் பறந்துவிட, மின்னலென, அவனது அறையை நோக்கி ஓடினாள் அவள்.

அறைக்குள் பாய்ந்து சென்று, பார்வையால் தேடும்போதுதான், அவன் கதவருகில், சாதாரணமாக நிற்பது தெரிந்தது.

அதாவது, அவன் கீழே விழவில்லை! சும்மா நாற்காலியைத் தட்டி விட்டிருக்கிறான்.

அவனுடைய பெற்றோர் இல்லாத நேரம், அவளை, அங்கே வரவழைப்பதற்காக, அவன் நடத்திய நாடகம்! அதாவது, அவளோடு தனியே பேச எண்ணுகிறான்.

மகேசுவரன் தடுக்க விரும்பியது. அவர் ஒன்று சொன்னால், அது சரியாகவே இருக்கும் என்று, இத்தனை நாட்களில் சுமனா

கண்டுபிடித்திருந்தாள்.

ஆனால், இப்போது என்ன செய்வது?

வந்த வேகத்தில் வெளியேறிவிடலாம் என்று பார்த்தால், அவளது எண்ணத்தை அப்படியே படித்தவன் போல, வழியை மறைத்துக்கொண்டு நின்றான், மதுசூதனன்.

ஓர் ஏளனப் பார்வையோடு!

இப்போது, இவனைத் தவிர்ப்பதற்கு வழியில்லை.

நடப்பது எதுவானாலும், அது நிச்சயமாக நல்லதாக இராது என்பது புரிந்துவிட, தடுக்கும் வகையற்று இறுகிப் போய் நின்றாள் அவள். குறைந்தபட்சம், அவளேனும் வார்த்தையை விட்டுவிடக் கூடாது!

சுமனாவின் ஊகம் தவறாகாமல், அவன் ஆத்திரத்துடன் தொடங்கினான்.

“ஏய், உனக்கு எவ்வளவு திமிர் இருந்தால், நான் அவ்வளவு சொன்ன பிறகும், என்னைப் பின்தொடர்ந்து வருவாய்? அதுவும், திருட்டுத்தனமாகப் பின் வாயில் வழியே நுழைகிற மாதிரி, அம்மா, அப்பாவை நைஸ் பண்ணி, உள்ளே வருகிறாயா? அப்பாவுக்கு உதவியாம்! அம்மாவுக்கு உதவியாம்! உத்தமி ரத்தினம், மாடாக உழைக்கிறாளாம்! அவர்களைப் போல, இதிலெல்லாம், நானும் ஏமாறுவேன் என்று நினைத்தாயா? கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகிற மாதிரி வைத்துக் கொள்ளாமல், இங்கிருந்து உடனே ஓடிவிடு.” என்று கண்கள் சிவக்க உத்திரவிட்டான்.

அவன் பேச்சு கூர்மையாகத் தாக்கிக் காயப்படுத்தியபோதும், தனாவுக்கு உடம்பு சரியில்லை., இன்னும் முழுக் குணம் அடையவில்லை. அதனால், அவனது பேச்சைப் பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று பிடிவாதமாகத் தனக்குத் தானே சொல்லி, சுமனா பொறுமையைக் கடைப் பிடித்தாள்.

“த . . மது, வேண்டாம். இன்னும் உங்களுக்கு உடம்பு முழுமையாகக் குணமாகவில்லை. கொஞ்சம் பொறுமையாக இருங்கள். இன்னும் கொஞ்சம் ஆரோக்கியம் திரும்பின பிறகு, நாம் அமைதியாகப் பேசலாம்.” என்றாள் நிதானமாகவே.

“ஏன்? என் பெற்றோரைச் சுண்டுவிரலால் ஆட்டிப் படைக்கிறமாதிரி, என்னையும் ஏமாற்றிக் காலடியில் போட்டுக்கொள்ள, உனக்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் தேவைப்படுகிறதோ? ஆனால்,

உனக்கு இன்னும் என்னைப் பற்றித் தெரியவில்லை. நீ என்ன மாய்மாலம் செய்தாலும், என்னை மயக்க மட்டும் முடியவே முடியாது! முதலில், அதைத் தெரிந்துகொண்டு பேசு! “

மாய்மாலமாம்! மயக்குவதாம்! என்னவெல்லாம் சொல்லுகிறான்!

அப்போதும் அமைதி காத்துப் பேசினாள் சுமனா. “நீங்கள் நினைக்கிற மாதிரி, எதுவும் இல்லை, . . மதுசூதனன். நான் வந்தது, ஒரு முக்கியமான விஷயத்தை, உங்களிடம் விளக்கிச் சொல்வதற்காகவே! வேறு நோக்கம் எதுவும் கிடையாது!” என்றாள் தெளிவாக.

மற்றபடி, அவன் சொன்ன மயக்கு வேலை, ஏமாற்றுவது எல்லாம், அவளது அகராதியிலேயே கிடையாதே!

ஆனால் மதுசூதனன் வேறு பொருள் எடுத்துப் பேசினான்.

“கிடையாது? வேறு நோக்கம் கிடையாது? இந்த வீட்டு மகாராணியாக வாழ வேண்டும் என்ற எண்ணம், உனக்கு, இல்லவே இல்லையாக்கும்! சொல்லு, அப்படி நினைப்பே கிடையாதா?”

எப்படிச் சொல்லுவது? அவனுக்காகப் போராட வேண்டும் என்றே வந்தவள் ஆயிற்றே! அது இல்லை என்று, எப்படிப் பொய் சொல்லுவாள்?

ஆனால், அந்தப் போராட்டத்தின் வழி முறையில்தான், அவ்வளவு வேறுபாடும்!

சொர்க்கத்துக்கும் நரகத்துக்கும் உள்ள வேறுபாடு. உண்மைக்கும் . . .

அவளது தயக்கத்தையே, தப்பை ஒத்துக்கொண்டதன் அறிகுறியாக எடுத்து, இகழ்ச்சியாக நகைத்தான் மதுசூதனன்.

“உன்னால் பேச முடியவில்லை அல்லவா? அத்தோடு, எனக்குத் தெரியாத என்னத்தை, நீ விளக்குவது? முதலிலேயே, பீச்சில் என் காரைப் பார்த்துவிட்டுத்தான், நீ என்னோடு பழகினாய் என்று எனக்குத் தெரியாதா? இப்போது, இங்கே உள்ள செழிப்பைப் பார்த்ததும் விட மனமில்லையாக்கும். ஆனால், சாயம் வெளுத்துவிட்ட, உன்னைக் கண்ணால் பார்க்கவும் எனக்குப் பிடிக்கவில்லை. அதனால், இங்கிருந்து உடனே ஓடிவிடு. முன்போல உடம்பு இருந்தால், நானே, உன்னைத் தரதரவென்று இழுத்துப் போய் வெளியே தள்ளுவேன். இப்போது, நீயாகப் போய்விடு. இல்லாவிட்டால் நான் என்ன பண்ணுவேன் என்று எனக்கே . .” என்று மிரட்டியவன், வேகமாகப் போய், படுக்கை அருகே இருந்த மேஜை மீதிருந்த ஃப்ளாஸ்கை எடுத்து, அவள் மீது வீசுவது

போலக் கையைத் தூக்கினான்.

அவனை வெறித்துப் பார்த்தாள் சுமனா. இதற்கு மேல், இவனிடம் பேச என்ன இருக்கிறது?

நிராசையுடன் நோக்கி, “வீணே, நீங்கள் கஷ்டப்படாதீர்கள், தனா. நானே போய் விடுகிறேன் .” என்றுவிட்டு, வேகமாக அங்கிருந்து வெளியே சென்றாள்.

யார் பார்க்கிறார்கள் என்ற எண்ணமே இல்லாமல், கண்ணீருடனே, அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்று, துணிமணிகளை எடுத்து வைத்தாள்.

கால் டாக்சிக்கும் சொல்லிவிட்டு அமர்ந்தவளுக்கு, நிறுத்த முடியாமல் அழுகை பொங்கியது. அவளை இந்த அளவுக்கா, மதுசூதனன் வெறுத்துவிட்டான்?

குளித்துவிட்டு வந்த சரளா, வழக்கம் போல, மகன் அறையில் எட்டி பார்த்தாள். தூங்கி விழித்த அடையாளமே இல்லாமல், மகன் சிலை போல அமர்ந்திருந்தான்! பெற்றவளைக் கண்டுகொள்ளவே இல்லை. அழைப்புக்கும் பதிலில்லை.

என்னவோ தப்பு என்று தோன்ற, சுமனாவிடம் விரைந்தாள்.

அவள் கொண்டு வந்த பையோடு, ஹாலில் டாக்சிக்குக் காத்திருந்தாள்.

“என்னை அடியோடு வெறுத்துவிட்டார் ஆன்ட்டி. போகச் சொல்லி விரட்டுகிறார். நானே போய்விடுகிறேன். கால் டாக்சி வரச் சொல்லிவிட்டேன்.” என்றாள், சுமனா வேதனையோடு.

எது கூடாது என்று கணவர் சொன்னாரோ, அது நடந்துவிட்டதே!

பெட்டி அடுக்கிவிட்டாள்! டாக்சி வேறு, வரச் சொல்லிவிட்டாள்!

இனி மகன் வாழ்வும், அவளது பேரன் பேத்திக் கனவுகளும் என்ன ஆகும்?

# அத்தியாயம் - 10

கதி கலங்கிப் போய் சரளா நின்றது, சில கணங்களே.

உடனேயே, கலக்கமும் பயமுமாகக் கணவரை அழைத்து, விவரம் சொன்னாள்.

நடந்ததைச் சொல்லி, "நீங்கள் சொன்னது போல, இரண்டாவது முறையாக, சுமனாவின் பாவம் எனக்கு வந்துவிட்டது போல இருக்கிறதே!" என்று அழுதாள்.

நடந்து முடிந்துவிட்டதைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பேசுவது, மகேசுவரனுக்குப் பழக்கமில்லை. பிடிக்காது. அந்த நேரத்தில், உருப்படியாக ஏதாவது செய்யலாம் என்பார்.

இப்போதும் விரைந்து யோசித்து, "நான் இப்போதே கிளம்புகிறேன். நான் வரும்வரை, சுமனாவை எப்படியாவது நிறுத்தி வை. இந்தத் தடவை போனாளானால், அவளைக் கண்டுபிடிப்பது கடினமாகிவிடும். முடியாது என்றே சொல்லலாம்! முன்பாவது, ரோஷத்தோடும் போனாள். இப்போது, நொந்திருப்பது தெரிகிறது. அவளுடைய சினேகிதி, அந்த பார்க்கவியும், அங்கே இல்லை. குடும்பத்தோடு வெளிநாடு போய்விட்டாளாம். " என்றார் அவர்.

சரளாவுக்கு மனம் பதைத்தது. இப்போது, பெரிய பாவம் சேர்ந்துவிடுமா?

நாலு ஆண்டுகளுக்கு முன்பு ஊரை விட்டுக் கிளம்பும்போது, சுமனா இப்படி அழவில்லை., சொல்லப் போனால் அழவே இல்லை என்பது, சரளாவுக்கு நினைவு வந்து, இன்னமும் பதைக்க வைத்தது.

ஆனால், டாக்சியைக் கொண்டு வரச் சொல்லிவிட்டு, கிளம்பத் தயாராக இருப்பவளை, எப்படித் தடுப்பது?

சுமனாவின் காலில் விழுந்தேனும், கிளம்பாமல் தடுத்தே ஆக வேண்டும் என்ற உறுதியோடு, அவள் அருகே சென்று அமர்ந்தாள்.

"நீ கட்டாயம் போயாக வேண்டுமாம்மா?" என்று கம்மிய குரலில் கேட்டாள்.

ஓரளவு நின்றிருந்த கண்ணீர் மீண்டும் வேகம் பெற, ஆமாம் என்பது போலத் தலையாட்டினாள் சுமனா.

சிறு மௌனத்தின் பின், "அங்கிளிடம் சொல்ல வேண்டாமா?"

என்றதற்குப் பதிலே இல்லாது போயிற்று. “அவருக்கு வேலையில் யார் உதவுவார்கள்?” என்றதற்கும், அப்படியே.

“நீ இல்லாவிட்டால், எனக்குக் கையொடிந்த மாதிரி இருக்குமே! காலையில் பூப்பறித்து, பூஜையறையில் விளக்கேற்றி, இதையெல்லாம், நானே எப்படிச் செய்வேன்? “ என்று புலம்பினாள் பெரியவள். “மதுவுக்குக் குணமாகும் வரை, எனக்காகக் இங்கேயே இரேன்!” என்றாள் கெஞ்சுதலாக.

நான்கு ஆண்டுகளுக்கு முன், இதே மகனை விட்டு, அவளைப் போகச் சொன்னது, இருவருக்குமே நினைவு வந்தது.

சுமனா பேசாது அமர்ந்திருக்க, அவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, சரளா கண்ணீர் வடித்தாள்.

அவளைத் தட்டிக் கொடுத்து சமாதானப் படுத்துவதில், சுமனாவின் கண்ணீர் நின்றது. ஆனால், பயணத்தைக் கைவிட, அவள் ஒப்பவில்லை.

“மதுசூதனனுக்குக் கிட்டத்தட்ட குணமாகிவிட்டது, ஆன்ட்டி. அவர் சோர்வு போலப் படுத்து, இன்று தூங்குவது போல நடித்தது, என்னைத் தனியே சந்தித்து, வெளியே போகச் சொல்வதற்காகத்தான். அதுவும் . . எப்படி வெறி பிடித்தது போல இருந்தார், தெரியுமா? இன்னும் ஒன்று ஆன்ட்டி, அது போல உணர்ச்சி வசப்படுவதுதான் அவருக்குக் கொஞ்சமும் நல்லதல்ல. ஆபத்து என்று கூடச் சொல்லலாம். அத்தோடு, உங்கள் மகனே, இனி அப்பாவோடு வேலையைப் பார்க்கத் தொடங்கி விடுவார். அவர், தந்தையோடு கிளம்பிவிட்டால், நீங்கள் வீட்டில் வழக்கம் போலப் பார்த்துக் கொள்ளலாம். நான் இங்கே இருந்தால்தான், எல்லாம் கெட்டுப் போகும், ஆன்ட்டி.” என்று சரளாவுக்குச் சமாதானம் சொன்னாள்.

கசப்புடன் நகைத்தாள் சரளா.

விழி உயர்த்திப் பார்த்தவளிடம், “நீ சொல்வது போல எல்லாம் வழக்கம் போல நடக்கத் தொடங்கிவிடும். மது, அவன் அப்பாவோடு பெரும்பகுதி வேலையைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கி விடுவான். நான் வழக்கம் போல, வீட்டில் எல்லாம் செய்யத் தொடங்கி விடுவேன். இன்னும் முப்பது நாற்பது வருஷங்களுக்கு, இதுவே தொடரும். மது அரைக் கிழவனாகி, நாங்கள் முழுக் கிழமாகி, மூவராகவே, வழக்கம் போலவே இருப்போம்!” என்றாள் சரளா வெறுத்த குரலில்.

ஐயோ என்று எண்ணிய சுமனாவுக்கு, மதுசூதனன் பங்களூரு வீட்டிலிருந்து கிளம்புமுன் சொன்னது நினைவு வந்தது.

புன்னகை புரிய முயன்றவாறு, “அப்படியெல்லாம் கவலைப்படாதீர்கள், ஆன்ட்டி. இப்போது குணமான பிறகு, தனா வேறு பெ . . வேறு ஏற்பாட்டுக்குச் சம்மதிப்பார். “ என்றாள், சுமனா.

“வேறு பெண்ணை மணப்பான் என்று சொல்ல முடியவில்லை! நீ, அவனை விட்டுப் பிரிந்து போகப் போகிறாயா?” என்ற மகேந்திரனின் குரலில், இரு பெண்களுமே, துள்ளிக் குதிக்காத குறையாகத் திகைத்துத் திரும்பிப் பார்த்தனர்.

அவரேதான். பெண்கள் முகத்தில் இருந்த வியப்பையும் திகைப்பையும் பார்த்துவிட்டு, அவர் லேசாக முறுவலித்தார். “இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டேனா என்று பார்க்கிறீர்களா? ஆடிட்டரைப் பார்ப்பதற்காக, வந்திருந்தேன். அவரது வீடு நகரத்துக்குள்ளேதான் .அதனால்தான் சீக்கிரமாக வர முடிந்தது.” என்றார் புன்னகையோடு.

உடனே முகம் மாற, “சொல்லம்மா. அந்த மூன்று வார்த்தைகளைச் சொல்ல, வாய் வரவில்லை. அவனைப் பிரிந்து செல்லப் போகிறாயா? சொல்லு, போய் என்ன செய்யப் போகிறாய்?” என்று கேட்டார் அவர்.

“நான் என்ன செய்தால், என்ன, அங்கிள்? அவர் நன்றாக இருந்தால், சரி.” என்றாள் சுமனா.

“இது அசட்டுப் பேச்சு. ஏதோ நல்ல காரணமாகத்தானே வந்தாய்? அது என்ன ஆயிற்று? அதை முடிக்காமலே விட்டுவிட்டுப் போய், என்ன செய்யப் போகிறாய் என்று உன்னைக் கேட்டால், அவன் நன்றாக இருக்கட்டும் என்று, வேறே ஏதோ அவனைப் பற்றிச் சொல்கிறாயே. “ என்றவருக்குப் பதிலாக, “மது போகச் சொன்னானாம்.” என்றாள் சரளா மெதுவாக.

“அவன் சொன்னால்? உடம்பு சரியில்லாதவன் அந்த வேதனையில், ஏதேதோ உளறுவான். அதைக் கேட்டு, வந்த வேலையை இடையிலே விட்டுவிட்டுப் போவாயா? என்னம்மா, நீ? நான், உன்னைப் புத்திசாலி என்று எண்ணினேனே!” என்றார் மகேசுவரன், குரலில் சிறு சந்தேகம் கலந்து.

“இங்குள்ள பணத்தைப் பார்த்துப் போகாமல் இருப்பதாகச் சொல்லுவார், அங்கிள். சும்மாவே, அப்படித்தான் சொன்னார்.” என்றாள் சுமனா கண்களில் நீர் மல்க.

“அதற்காக இப்போது போனால், உன் ரகசியத்தை அவன் கண்டுகொண்டதால் பயந்து போய் ஓடுவது போல , அதாவது, அவன் சொன்னதை மெய்ப்பிப்பது போல ஆகாதா? “

“அது . . ,” என்று தொடங்கியவள், மேலே எதுவும் சொல்ல மாட்டாமல் தயங்குகையில், “ஏ பெருமாளு, சின்னம்மா சொன்னாப்போல, அவங்களுக்குக் கால் டாக்சி வந்திட்டது . உள்ளார போய், அவங்க கிட்டே சொல்லிடு.” என்று வாசல் செக்யூரிடி, ஒரு பணியாளை உரக்க அழைத்துக் கூறுவது, காதில் விழுந்தது.

இந்தத் தருணத்தில்தான், இது வர வேண்டுமா என்று மகேசுவரனே மனம் சுளுக்குகையில், அவர் எதிர்பார்த்தது போலவே, சுமனா தொடங்கினாள். “எதற்கும், நான் இப்போது போய்விட்டே வருகிறேனே! டாக்சி கூட வந்துவிட்டது.” என்றாள்.

ஏற்றாற்போல, பெருமாளும் வந்து, டாக்சி வந்து போர்டிகோவில் நிற்பதைத் தெரிவித்தான்.

“ஓர் ஐந்து நிமிஷம் ஆகும் என்று நிற்கச் சொல்லு. வேண்டுமானால், மீட்டரைப் போட்டுக் கொண்டு நிற்கச் சொல்லு.” என்று பணித்து, வேலையாளை அனுப்பினார் மகேசுவரன்.

அவன் சென்றதும், “எப்படிப்பட்ட புத்திசாலிக்கும், ஓர் அதிர்ச்சி நேர்ந்தால், மூளைத் திறன் மட்டுப்பட்டுப் போய்விடும் என்று சொல்வார்கள். நீ பேசுவதைப் பார்க்கும்போதுதான், நீ எவ்வளவு அதிர்ந்திருக்கிறாய் என்று புரிகிறது.  . “ என்று மறுபடி தொடங்கினார்.

இரு பெண்களும் புரியாமல் பார்க்கவும், சுமனாவை மட்டும் நோக்கி, “பின்னே என்னம்மா? டாக்சி வந்துவிட்டது என்று, அதற்காக ஒரு பயணம் மேற்கொள்ளுவார்களா? அப்படியானால், ஏதோ காரணமாக, டாக்சி சற்றுத் தாமதமாக வந்திருந்தால், அதற்காகப் பயணத்தை நிறுத்தியிருப்பாயா? “ என்று அவர் கேட்கவும், சின்னவளுக்குச் சட்டெனச் சிரிப்பே வந்துவிட்டது.

என்ன மாதிரி வாதாடல்!

“அங்கிள், ஒரு நாளைக்கு ஒரு கோடி சம்பாதிக்கும் வாய்ப்பை அநியாயமாகக் கோட்டை விட்டுவிட்டீர்களே!” என்று, போலியாக வருத்தப்பட்டாள், அவள்.

கண்கள் வட்டமாக விரிய, “ஒரு நாளைக்கு ஒரு கோடியா? எப்படிப்பா? “ என்று ஆச்சரியத்துடன் சரளா விசாரித்தாள்.

“ஏய், சுமனா சும்மா கிண்டலடிக்கிறாள்மா. நான் வக்கீலாகியிருக்க வேண்டுமாம். நிறையச் சம்பாதிப்பேனாம். அவ்வளவு நன்றாக வாதாடுகிறேனாம்!” என்று விளக்கினார் மகேசுவரன்.

“வக்கீலுக்கெல்லாம் அவ்வளவா கிடைக்கும்?” என்று அப்போதும்

ஒரு சந்தேகம் கேட்டாள் சரளா.

"சுப்ரீம் கோர்ட் வக்கீல், ஆன்ட்டி! அவர்களிலே, புகழ் பெற்ற வக்கீல்களுக்கு அவ்வளவு வருகிறதாம்!" என்று சுமனா எடுத்துரைக்க, "அவ்வளவு பெரிய வக்கீல் அளவுக்கு அங்கிள் கெட்டிக்காரத்தனமாகப் பேசுகிறார் என்றால், நீயும் கேட்டுக் கொள்ள வேண்டியதுதானே? " என்று சரளா மடக்க, "அப்படிப் போடு!" என்று மகேசுவரன் பாராட்ட, மூவருக்குமே சற்றுச் சிரிப்பு வந்தது.

இறுக்கமாக இருந்த மன நிலை, இந்தச் சிறு கலகலப்பில் சற்று இலகுவாகி விட, மகேசுவரன் வாய்ப்பை விடாமல், வற்புறுத்தலைத் தொடர்ந்தார். "இப்போது போக வேண்டாம். பல்லைக் கடித்துக்கொண்டு, கொஞ்ச நாள் பொறுமையாக இரம்மா. மது நன்றாகக் குணமானபிறகும், இதே மனநிலையில் இருந்தான் என்றால், நானே உனக்கு வேறு வேலை ஏற்பாடு செய்து, அனுப்பியும் வைக்கிறேன். இது உறுதி." என்று வாக்குக் கொடுத்தார்.

"ஒரு டெஸ்ட் மாதிரி, நாலைந்து நாட்கள் அவன் கண் முன் செல்லாமலே இரும்மா. இதை எப்படி ஏற்கிறான் என்று பார்ப்போம். " என்றவர், வெளியே போய், குறைந்த அளவுக் கட்டணத்துக்குக் கொஞ்சம் கூடுதலாகக் கொடுத்து, டாக்சியை அனுப்பிவிட்டு வந்தார்.

வரும்போதே, அவர் வந்த காரிலிருந்து சில ஃபைல்களை எடுத்து வந்து, சுமனாவிடம் கொடுத்தார்.

"இவைகளை, உள்ளே வைத்திருக்கும் குறிப்புகளின்படி, எழுத வேண்டும் என்று ஆடிட்டர் சொன்னார். நாளைக்கே தரச் சொன்னாரம்மா. என் அலுவல் அறையில், பெரிய மேஜையில் வைத்துக் கொண்டால், அப்படியே கம்ப்யூட்டரில் ஏற்றி, சிடி எடுக்க வசதியாக இருக்கும். " என்று, அவளிடம் உதவி கேட்டார்.

அவள் ஒப்புதலாகத் தலையாட்டவும், "நல்லவேளை, சரியான நேரத்தில் வந்தேன். அல்லது, இரவு முழுதும் கண்விழித்து, இதையெல்லாம் நானல்லவா பார்க்க நேர்ந்திருக்கும்!" என்று, ஏதோ பெரிய கஷ்டத்திலிருந்து தப்பித்த மாதிரி மகேசுவரன் கூற, மற்ற இருவரும் முறுவலித்தனர்.

திருப்தியோடு சரளாவும், சிறு கலக்கத்தை மறைத்தபடி, சுமனாவும்.

வீட்டு வாரிசு. உரிமை உள்ள ஒரே பிள்ளை! ஆனால், அவள் வெளியே போகாமல், அங்கேயே உட்கார்ந்துகொண்டு இருக்கிறாளே!

இங்கே அவளைப் பார்க்கும்போது, என்ன நினைப்பான்?

நினைப்பதைத்தான், ஏற்கனவே சொல்லிவிட்டானே!

இப்போது கூடுதலாக, மான ரோஷம் இல்லாதவள் என்றும் நினைப்பான்.

ஆனால், அவனுக்காகவே அவனது பேச்சைப் பொருட்படுத்த வேண்டாம் என்கிறாரே, அவனைப் பெற்றவர்! பெற்றவளும் சேர்ந்துதான்.

சமயத்தில், இருவரும் என்னமாக மடக்குகிறார்கள்! மறுத்துப் பேசவே, அவளால் முடிவதில்லை.

ஆனால், அவளும், பெரியவர்களின் பேச்சுக்காக மட்டும்தான் நின்றாளா?

எப்படியாவது, அவனுடைய தனாவிடம் எல்லாம் சொல்லி, நிலைமையைச் சீர்ப்படுத்தி, நல்ல வாழ்வு வாழ வாய்ப்புக் கிடைக்காதா என்ற ஆசையும்தானே?

நல்ல வாழ்வு கிட்டுமோ, கிட்டாதோ?

குறைந்த பட்சமாக, அவன் சுமத்திய குற்றத்தையாவது, இல்லை என்று எடுத்துச் சொல்லிவிட்டுப் போகலாமே! நம்புவதும், நம்பாததும், அவன் விருப்பம்!

அவள் வீட்டை விட்டுப் போய் விட்டதாகக் கருதி, இப்போது தனா நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பான்!

மகேசுவரன் கொடுத்த வேலையைச் செய்து கொண்டிருக்கும் போதே, இடையிடையே, சுமனாவின் மனது கட்டுப்பாட்டை மீறிக்கொண்டு போய், இப்படி எதையெதையோ நினைத்துக்கொண்டுதான் இருந்தது.

அதனாலேயே, இரவு பதினோரு மணியளவில் முடிந்திருக்க வேண்டிய வேலையைப் பன்னிரண்டு தாண்டியே, அவளால் முடிக்க முடிந்தது.

படுக்கை அறைகள் இருந்த மாடிக்குப் படியேறிப் போனவளுக்கு, அப்புறமும், படுத்தால், உடனே உறங்கி விட முடியும் போலத் தோன்றவில்லை.

எனவே, கிரில் போட்டு அடைத்திருந்த மொட்டை மாடியில் சற்று நேரம் நின்று உடம்பு குளிர்ந்த பிறகே படுக்கச் சென்றாள்.

பழக்கப் பட்டுவிட்ட இடம் என்பதால், விளக்கைப் போடாமலே அறைக்குள் சென்று, படுக்கையில் அமர்ந்து, தலையணையை

ஏற்றவாறு வைப்பதற்காகக் கையை நீட்டினால், கதகதப்பாக ஒரு மனிதனின் தோள் கையில் பட்டது!

துள்ளிக் குதித்து எழுந்தவளுக்கு, இருதயம் தொண்டைக்குள் வந்து துடித்தது!

வெளியார் வர முடியாத பாதுகாப்பான வீடு!

இரண்டே எட்டில் விளக்கு ஸ்விட்சைப் போண்டுப் பார்த்தால் . . . தலையணையை அணைத்தாற்போல அதிலேயே முகம் புதைத்துக் கிடந்தவன் மதுசூதனன்!

சற்று நேரம் . .அது வெகு சில வினாடிகளாகவே இருக்கக் கூடும்., சுமனாவுக்கு ஒன்றுமே புரியாத திகைப்பு !

இவன் இங்கே எப்படி வந்தான்? ஏன் வந்தான்? அவள் போய்விட்டாளா, இல்லையா என்று பார்க்க வந்தானா? அல்லது, தூக்கக் கலக்கத்தில் இங்கே வந்து படுத்துவிட்டானா?

இதில், எந்தக் கேள்விக்குமே அவளால் பதில் காண முடியவில்லை. சொல்லக் கூடிய மதுசூதனனோ . . .யோசித்தபடியே பார்த்தால், அவனது இரு கண்களும் அகல விழித்து, அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தன.

அவள் கட்டிலில் உட்கார்ந்து எழுந்ததிலோ, விளக்கைப் போட்டதிலோ விழித்துவிட்டான் போல!

அவளும் தன்னைப் பார்ப்பதைக் கண்டு, “கால் டாக்சி திரும்பிப் போனதைப் பார்த்தேனே! அதில் நீ போகவில்லை?” என்று, மெதுவாக . . மிக மெதுவாகக் கேட்டான்.

திட்டுவானோ என்று யோசித்தபடி, “அங்கிள் என்னைப்  போக வேண்டாம் என்று டாக்சியைத் திருப்பி அனுப்பி விட்டார்.”என்று, அவசரமாக விளக்கம் கூறினாள் சுமனா.

ஏற்றானா இல்லையா?

அவன் முகத்தில் என்ன இருக்கிறது என்று புரியாமல் அவள் விழிக்கையில், “இங்கே வா!” என்று அழைத்தான் அவன்.

மறுக்க மாட்டாமல் அவள் நெருங்கவும், அவளது கையை, அவன் பற்றியிழுத்த வேகத்தில், அவன் மேலேயே அவள் சரிய, அவளை இறுக அணைத்துக் கொண்டான் மதுசூதனன்.

இறுக, இறுக அவன் அணைக்க, தன்னையறியாமல் நெகிழ்ந்தபோதும், சுமனா விடுபடவும் முயன்றாள்.

இல்லை., இது சரியில்லை. மதுசூதனன் அவளை வெறுக்கிறவன். கெட்டவளாக எண்ணுகிறவன்.

தூக்கக் கலக்கமோ? உடல் பலவீனம், மனதையும் பாதித்து, கட்டுப்படுத்த முடியவில்லையோ?

ஆனால், மனக் கட்டுப்பாடு உடைய அவன், நிதானத்துக்கு வந்ததும், அவளைத்தானே வெறுப்பான்?

"ப்ளீஸ் . . .என்னை விடுங்கள் தன . . ம . மதுசூதன் . " என்று அவசரமாகத் திருத்திக்கொண்டு வேண்டினாள், அவள்.

"பரவாயில்லை. "தனா" என்றே சொல்லு. எப்போது, அப்பா உன்னை அவ்வளவு நம்புகிறாரோ, அதன் பிறகு நீ தப்பானவளாக இருக்க முடியாது என்று எனக்குப் புரிந்திருக்க வேண்டும். . . " என்று கம்மிய குரலில் அவன் கூறியதை, அவளால் நம்பக் கூட முடியவில்லை!

அன்றுதான், என்னென்னவோ சொல்லி, என்ன மாதிரி விரட்டியவன்! அதற்குள் எப்படி மாற முடியும்?

பிடிவாதமாக விலகி, அவன் முகத்தைப் பார்த்தாள் சுமனா.

அதில் பொய்யிருப்பதாக, அவளுக்குத் தோன்றவில்லை. ஆனாலும், நாற்பது நாட்களாகப் பட்ட மன வேதனை, தெளிவு தேடியது.

எழுந்து அமர்ந்து, "நாம் பேச வேண்டும், தனா." என்றாள்.

ஒத்துக் கொண்டவன் போல, அவனும், அருகிலேயே அமர்ந்தான்.

அவளது ஒரு கையை மட்டும் தன் கைக்குள் அடக்கிக்கொண்டு, "நான் முதலில் சொல்கிறேன். ஏனென்றால், நிறையத் தப்புகள், என்னால் நேர்ந்தவைதானே? " என்று தொடங்கினான்.

"நீ டாக்சி ஏற்பாடு செய்துவிட்டு, வாட்ச்மேனிடமும் சொல்லி வைத்திருந்தாய் போல. அதன்படி, டாக்சி வந்ததும் உள்ளே அனுப்பிவிட்டு, அவன் பெருமாளைக் கூப்பிட்டுச் சொன்னது என் காதிலும் விழுந்தது. போவதாக முடிவு செய்துவிட்டாய் என்பதே, மனதிற்குப் பெரிய அடியாக, சுமை போல இருந்தது. சில நிமிஷங்களில், கார் போகிற சத்தமும் கேட்டது. ஓடிப் போய்ப் பார்த்தால், டாக்சி கேட்டைத் தாண்டி போய்க் கொண்டிருந்தது. பாதி உயிர் போன உணர்வு எனக்கு.

"போய்விட்டாய். இரண்டாவது முறையாக என் வாழ்வை விட்டுப் போய்விட்டாய்., இந்த முறை நானே விரட்டிவிட்டேன் என்று, இதுவே

திரும்பத் திரும்ப மனதில் தோன்றிக் கொண்டே இருந்தது.

“அப்படித் தோன்றத் தோன்ற, உடம்பின் சக்தியெல்லாம் வடிந்துகொண்டே போவது போலவும் இருந்தது!

“சென்ற முறை நீ போனபோது, பணம் இல்லாது போய்விடுமோ என்று ஓடிவிட்டாய் , ஐயோ இவ்வளவு பணமா என்று காட்ட வேண்டும் என்று உழைத்து, தொழிலை உயரே கொண்டு வந்தேன். . . என்ன?” என்று, அவளிடம் அசைவு உணர்ந்து கேட்டான்.

அவளும் அப்படி ஒரு வைராக்கியத்தில் நிலையை உயர்த்தியதுதான். ஆனால், அதைச் சொன்னால், அவன் தாயைக் குறை சொன்னது போல ஆகும். எதற்கு என்று எண்ணியவளாய், “இவ்வளவு உயர்த்தியிருக்கிறீர்களே என்று எண்ணினேன் மேலே சொல்லுங்கள்.” என்றாள் சுமனா.

“ஆனால், இந்த முறை எல்லாம் தலைகீழாக ஆகிவிடுமோ என்று . .ஏதேதோ தோன்றியது.

“இரவு அம்மாவும் அப்பாவும் வந்து பார்த்தபோது, தூங்குவது போல நடித்தேன். ..”

“அதில்தான் கெட்டிக்காரர் ஆயிற்றே!” என்றாள் சுமனா தன்னை மீறி.

பிடியில் இருந்த அவள் கையை லேசாக அழுத்திவிட்டு, அவன் தொடர்ந்தான். “அவர்களது நிம்மதிக்காகச் செய்தேனே தவிர, என்னால் தூங்கவே முடியவில்லை. உன்னைப் பார்க்க வேண்டும் போலத் தாங்க முடியாத ஏக்கம்! உன் வாசமாவது இருக்குமே என்று, உன் அறைக்கு வந்தேன். உன்னைப் போலவே, எல்லாம் கச்சிதமாக, சுத்தமாக இருந்தன.

“ஒவ்வொன்றாகத் தொட்டுத் தொட்டுப் பார்த்தேன். எல்லாம் நீ பயன்படுத்தியவை அல்லவா? அலமாரியைத் திறந்தால் . . .அம்மா உன்னை அணிய வைத்துப் பார்த்த நகைகள்! பெரிதாகத் தந்தால் மறுப்பாய் என்றோ, அல்லது அப்படி மறுத்து வாங்கியவைதானோ, சின்னச் சின்ன நகைகள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. உடைகள்! எல்லாமே புதிது போல மடித்து வைத்திருந்தாய். என்னதல்ல., இனி, இவைகளுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று சொல்லாமல் சொல்லியிருந்தாய்.

“அடியோடு வெறுத்தது போல, இனி ஒட்டுவதற்கு வழியே கிடையாது என்பது போல விரட்டிவிட்டேன். உண்மையாகவே,

பணத்தை எண்ணி வந்தவள் என்றால், இவைகளையேனும் அள்ளிச் சென்றிருக்கலாமே!

“இங்கிருந்து போகப் பிடிக்கவில்லை. உன் படுக்கையிலேயே படுத்துக்கொண்டேன். படுத்துக்கொண்டு யோசிக்கும்போது, இன்னும் ஒன்றும் தோன்றியது. பணம் இராது என்று நாலு ஆண்டுகளுக்குமுன் கப்பல் எலியாக ஓடி விட்டாள் என்று நினைத்தோமே, அப்போதும், அம்மா ஒரு கார், நான் ஒரு கார் என்று, அன்றிருந்த உன் நிலைக்கு, அதுவும் ராஜ போகம்தானே, விட்டுவிட்டுப் போனாளே என்று எண்ணிப் பார்த்தேனா?

“அவ்வளவுதான். தப்பு எண்ணங்கள் எல்ல் . .லாம்தான் தப்பு என்று தெரிந்து போயிற்று. . . .”

“தப்புதான், தனா. நான் உங்களைப் பிரிந்து சென்றதன் காரணமே வேறு. . .”

“தெரியும், சுமனி! அம்மா ஏதோ சொன்னார்கள் என்று, மேடம் தியாக சிகரமாகப் போய்விட்டீர்கள்! அதுதானே? ஆனாலும், நீ என்னிடம் வந்திருக்க வேண்டாமா?” என்று, அப்போதும் குறையோடேயே, அவளது தோளை ஒரு கரத்தால் பற்றி, லேசாக உலுக்கிக் கேட்டான், மதுசூதனன்.

ஒரு பெருமூச்சுடன், அவனது பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு எழுந்தாள் சுமனா.

“ஏய் . . என்ன?” என்றவனின் முன்னே, டிரெஸ்ஸிங் டேபிள் மோடாவை இழுத்துப் போட்டு அமர்ந்தாள். அவனை நேராகப் பார்த்துப் பேசினாள்.

“இப்போது நான் சொல்வது, உங்களுக்குப் புரியுமோ, என்னவோ? புரிவதே சிரமம்தான். ஆனால் . . .தனா, நீங்கள், உங்கள் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. பிறக்கும்போதே, ஓரளவு வளமான குடும்பத்தில், செல்லப் பிள்ளையாக, செல்லப் பேரனாகப் பிறந்தீர்கள். கேட்டது எல்லாம் கிடைத்தே, உங்களுக்குப் பழக்கம்! ஆனால், நான் அனாதை. எந்த உறவும் இல்லாத பல பேரில் ஒருத்தியாக வளர்ந்தவள். . . . தனா, உங்கள் இரக்கத்தைத் தூண்டுவதற்காக, நான் இதைச் சொல்லவில்லை. . . “ என்று, நீண்டு வந்து, அவளது தோளைப் பற்றி அழுத்திய கையை விலக்கிவிட்டு மீண்டும் சொல்லலனாள்.

“இல்லத்தில், எதன் மேலும் அன்பு வைக்க முடியாது. எதுவும் நிச்சயமில்லை. ஒரு சின்னக் குழந்தை. பிறந்த சிசுவாக வந்து, அங்கேயே

வளர்ந்தது. அதற்கு எல்லாமே, ஆசையாக நானே செய்வேன். ஒரு நாள் வந்து, தத்து எடுத்துப் போய் விட்டார்கள்! எப்படித் தவித்தேன் தெரியுமா?

“தீபாவளி, கிறிஸ்துமஸ் பணக்காரர்கள் பரிவு காட்டிப் பரிசுகள் அனுப்புவார்கள். அழகாக “பாக்” பண்ணி வரும். பிரித்துப் பார்த்து, விருப்பப் பட்டதை எடுக்க முடியாது. கையில் தருவதுதான். சென்ற ஆண்டு கிடைத்ததாகக்கூட இருக்கலாம். மாற்றி, வேறு கேட்க முடியாது. இது கிடைத்ததே அதிகம் என்பார்கள். சில சமயம் ஆசையோடு வைத்திருப்பதைச் சின்னப் பிள்ளைகள் கேட்டால், விட்டுத் தரவும் வேண்டியிருக்கும்.

“ஆசையே துன்பங்களுக்கு அடிப்படைக் காரணம் என்று புத்தர் சொன்னது., போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து, கிட்டாதாயின் வெட்டென மற . . இதெல்லாம் எங்களுக்குத் தலைகீழ்ப் பாடம்! இதுதான் தனா, நான்!

“இப்படி வளர்ந்த என் வாழ்வில்தான் நீங்கள் வந்தீர்கள்! “ என்றாள் கண்களில் நீர் மல்க.

மீண்டும் அவள் புறமாக எழுந்த கரங்களை மடக்கிக்கொண்டு, “சொல்லு.” என்றான் அவன், குரலில் சிறு கரகரப்புடன்.

“அப்போதுமே, நிலைக்குமா என்று, அவ்வப்போது உள்ளூரக் கலக்கம் தோன்றத்தான் செய்யும். ஆனால், உங்களைப் பார்க்கையில் எல்லாம் மறந்து போகும்! திருமணம் பற்றி வரை பேசிவிட்டதால், உங்களுக்கு, மனதில் நிச்சயமாக இருந்திருக்கும். ஆனால், தொழிலில் சிரமம் காரணமாக, உங்களை அடிக்கடி சந்திக்க முடியாது போயிற்று .

“அந்த நிலையில்தான், ஆன்ட்டி என்னைத் தேடி வந்தார்கள்!” என்று ஒரு தரம் கண் மூடித் திறந்தாள் சுமனா.

அவன் ஏதோ சொல்ல முற்படுவதைப் பார்த்து, “ஆன்ட்டியை நான் தவறாக நினைக்கவில்லை, தனா. ஏற்கனவே, எனக்கு, “நாய்க்கு முழுத் தேங்காய் ஒட்டுமா” என்று, அவ்வப்போது தோன்றுவதுதான். உங்கள் வீட்டுத் தலைவியான அவர்களே, நம் திருமணத்துக்கு எதிராக இருப்பது தெரிந்ததும், அவ்வளவுதான் எல்லாம் முடிந்தது என்று தோன்றிவிட்டது. நடக்காத காரியத்துக்கு, உங்களிடம் வந்து, தாய்க்கும் மகனுக்கும் இடையே மன வேற்றுமையை ஏற்படுத்துவானேன்?

“இதுதான் நான், அந்த ஒற்றை வரிக் கடிதத்தோடு ஒதுங்கிப் போய்விடக் காரணம். இப்படி, இனி யாரும் அலட்சியப் படுத்த

முடியாத நிலையை அடைய வேண்டும் என்று, அதற்காக உழைத்த காரணமும் அதுவேதான்.

“ஆனால், இந்த வேலைக்காகப் போராடிய அளவு கூட, நீ எனக்காகப் போராடவில்லையே என்று கேட்டீர்களே! எனக்கு அது ஒரு கண் திறப்பு! மெய்தானே?

“பங்களூருவில் என் இடத்துக்கு வந்து, நீங்கள் வெறுத்துப் பேசிவிட்டுப் போன போதுதான், உங்களுக்காகப் போராடும் வேகம் வந்தது. ஆனால், செய்தாக வேண்டும் என்று உங்கள் பின்னோடு கிளம்பி வந்தால் . . .” தொண்டை அடைத்துவிட, அவளது பேச்சு நின்று போயிற்று.

இப்போது நீண்ட கை, அவளைப் பிடிவாதமாக இழுத்து அருகமர்த்திக் கொண்டது.

தோளோடு அணைத்து, “போராட வந்த வீர தீர மங்கை, ரத்தத்தைப் பார்த்ததும், ஐசியு வாசலில் மயக்கம் போட்டு விழுந்தாளாக்கும்!” என்றான் அவன் கேலியாக.

அந்த நினைவில் அப்போதும் உடல் சிலிர்த்தது, அவளுக்கு.

“முதல் நாலு நாட்களும், எங்கள் மூவருக்குமே ஒன்றும் புரியாத நிலைதான். ஆனால், நினைத்து வந்ததை, இடையில் விட்டுப் போகக் கூடாது என்றுதான், உங்கள் முகச் சுளிப்பு, கோபப் பார்வைகளைத் தாங்கிக்கொண்டு, இங்கேயே இருந்தேன். ஆனால், ஆனால் இன்று, நீங்கள் என்னை முழுமையாக வெறுத்து விட்டீர்கள் என்று தோன்றவும்தான், மனமொடிந்து கிளம்பிவிட்டேன். . .”

அவளது உதடுகளில் மென்மையாக விரலை வைத்து, அவளது பேச்சை நிறுத்தினான் மதுசூதனன்.

“உன் மேல் கோபம் இருந்தது உண்மை. ஆத்திரம்! ஆக்ரோஷம் ! ஆனால், உன்னை என்னால் வெறுக்க முடியவில்லை “இன்று கூட, உன்னிடம் போய்விடு, போய்விடு என்றேனே தவிர, உன்னைப் போக விட, எனக்கு மனமில்லை. வழியில் நிற்கிற என் அருகாக வந்துதானே, நீ வெளியே செல்ல வேண்டும்? என்னை மீறி, என் கைகள், உன்னைத் தடுத்து நிறுத்திவிட்டால்? தடுத்து நிறுத்தி அணைத்தும் விட்டால்? என்னிடமே நம்பிக்கையற்றுதான், அங்கிருந்து ஓடிப் போனேன். கோழைத்தனமாக ஓடியதற்குக் காரணம் காட்டத்தான், .ஃபிளாஸ்கை எடுத்து, உன் மேல் வீசுவது போலப் பாவனை செய்தது! “ என்றான் அவன், ஓர் அவமானக் கன்றலோடு.

நம்ப முடியவில்லை அவளுக்கு. எவ்வளவு தத்ரூபமாக இருந்தது!

அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, "சந்தேகமாக இருக்கிறதா? ஓர் உண்மை சொல்லட்டுமா? அம்மா, அப்பா உட்பட, யாருக்கும் தெரியாதது! இந்த விபத்து எப்படி நடந்தது, தெரியுமா? வெறும் கவனக் குறைவினால் அல்ல! அங்கே உன்னிடம் அவ்வளவு வசனம் பேசிவிட்டுக் கிளம்பினேனே, வரும் வழியெல்லாம் அதே நினைவு. மறு ஒளிபரப்பு மாதிரி, திரும்பத் திரும்ப மனதில், அதே ஓடியது! உன்னிடம் சூளுரைத்தது வரையில் மட்டும். இதிலேயே நிற்க விடக் கூடாது., அதற்கு மேலே நினைத்துப் பார்க்க வேண்டும் என்று, பிடிவாதமாகக் கற்பனையை ஓட்டினேன். ஏதோ ஒரு பெண்ணுடன் திருமணம் நிச்சயமாகி, அந்த இன்னொருத்தி கழுத்தில் தாலி கட்டுவதாக, அது வரையும் கூடக் கதையைக் கொண்டு போய்விட்டேன். கற்பனையில் தாலியை எடுத்துக் கட்டும்போது பார்த்தால், மணப்பெண் நீயாக இருக்கிறாய்! அதிர்ந்து நிற்கும்போது, டமார் என்ற ஒலி! அவ்வளவுதான் எனக்குத் தெரியும். கார் எங்கோ போய் முட்டிக்கொண்டு விட்டது போல!

அவனது உயிருக்கே வந்த ஆபத்து, அவளால்! கெட்டதாக முடிந்திருந்தால்?

தன்னை மீறி, அவனை இறுக அணைத்துக் கொண்டாள், சுமனா. அவனும்தான்.

சற்று நேரத்துக்குப் பிறகு, "பரவாயில்லை. காதலியின் தயவு வேண்டுமானால், இப்படி ஒரு தந்திரம் கைவசம் இருப்பது, நல்லதுதான்!" என்று அவன் நகைக்க, சுமனா முகம் சிவந்தாள்.

மதுசூதனனின் விபத்துக்குப் பிறகு, இரவில் சிறு விழிப்பு வந்தாலும், மகனின் அறைக்குப் போய், அவனை எட்டிப் பார்த்துவிட்டு வருவது, தாய், தந்தை இருவரின் வழக்கமாக இருந்தது.

அன்றும் அது போல விழிப்பு வரவே, சரளா எழுந்து மகன் அறைக்குப் போனால், அங்கே அவன் இல்லை.

உடனே ஒன்றும் அவள் பயந்துவிடவில்லை.

குளியலறைக்குள் இருப்பான் என்று, சற்று நேரம் காத்து நின்றாள்.

அவன் வெளியே வரக் காணோமே என்று, போய்ப் பார்த்தால், குளியல் அறைக் கதவு வெளிப்புறமாகப் பூட்டியிருந்தது.

மொட்டை மாடியில் எட்டிப் பார்த்தால், அங்கும் இல்லை!

பயந்துபோய்க் கணவரை எழுப்பினாள்.

இருவருமாக மகனைத் தேடக் கிளம்புகையில், கடைசியில் இருந்த சுமனாவின் அறையில் சத்தம்  கேட்டது.

கவனித்துக் கேட்டால், இருவரும்தான் சன்னக் குரலில் பேசிக்கொண்டு இருந்தனர்.

இடையே கேட்ட சின்னச் சிரிப்புச் சத்தம், பெரிய கவலையை அகற்றியபோதும், சரளாவுக்கு உள்ளே உறுத்தியது.

“என்னப்பா, இந்த நேரத்தில், அவளது படுக்கையறையில், அவன் சத்தம்! சரியில்லையே .கூப்பிட்டுக் காலையில் பேசுங்கள் என்று சொல்லலாமா?” என்று கணவரிடம் கேட்டாள்.

“ம்ம்ம் . . . .” என்று தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தார் மகேசுவரன்.

நெற்றியைத் தட்டி யோசித்துவிட்டு, “செய்யலாம். ஆனால், இப்போது தலையிட்டால், பூஜை வேளையில் கரடி என்பார்கள். அவர்கள் பொறுப்பில்லாத பிள்ளைகளும் அல்ல. முன்னே ஒரு தரம் குறுக்கிட்டு ஏதோ செய்ததை, முதல் தவறுதல் என்று விட்டுவிடலாம். மறுபடியும் என்றால் . . . நான் ஒரு கரடியை மணக்கவில்லை என்று இன்னமும் நம்புகிறேன் . . . ஆனாலும், இப்படிக் கேட்கிறாயே . . . என்ன செய்யலாம்? நீயே சொல்லேன். என் நம்பிக்கையின் கதி என்ன? இன்னமும் நம்புவது சரிதானா, இல்லையா?” என்று அவளிடமே கேட்டார்.

“சரிதான் என்று, முழுசாக நம்புங்கள் சாமி, கட்டாயம் நம்புங்கள். வேண்டுமானால் பாருங்களேன், இனிமேல், இந்தச் சேலை நன்றாயிருக்குமா என்று மருமகளாக வந்து, என்னிடம் அபிப்பிராயம் கேட்டாலும் கூட, ஆளை விடு தாயே, என்னவானாலும் புருஷனும் பெண்டாட்டியுமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட மாட்டேனா?” என்று சரளா சொன்ன தினுசில் கணவர் சிரிக்க, அவருடைய மனைவியாய் அவளும், அதில் மகிழ்ச்சியோடு இணைந்துகொண்டாள்.